இலவசம்
Eelamurasu-Canada

ஈழமுரசு கனடா

முரசு:15 இதழ்:533 ஜனவரி 27 முதல் பெப்ரவரி 03 - 2010 வரை



இலங்கையில் மீண்டும் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச

யாழ்ப்பாணத்தில் குரங்காட்டிகளும் பாம்பாட்டிகளும்



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சிங்களப் படைகளால் முற்றாக அழிப்பு

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை


ASIYANS
MENS & BOYS CLOTHING
3601

ஈழமுரசு கனடா

EELAMURASU CANADA

நிர்வாகி
நிசாந்தன்

பிரதம ஆசிரியர்
ரஞ்சன்

ஆசிரியர் குழு
ஐ.சண்முகநாதன்
ஈசன், செல்வராஜா
சிவா பரஞ்சோதி

அலுவலக நிர்வாகம்
இ.கந்தசாமி

வரைகலை
அனு கிராபிக்ஸ்

அலுவலகம்
2625 EGLINTON AVE EAST #2
SCARBOROUGH ,ON.M1K 2S2

தொலைபேசி / Telephone
416-291-7474
Cell:416•857•3941

தொலைநகல்/ Fax
416•291•7472

மின் அஞ்சல்/ Email
Eelamurasucanada@yahoo.com

மொன்றியல்
514-944-9315

அனைத்துலக அலுவலகங்கள்

பிரான்ஸ்
00 31 140 05 95 15

பிரித்தானியா
078 8679 0198

சுவிஸ்
079 828 6871

ஜேர்மனி
0208 205 99 103

இத்தாலி
091 6824056

டென்மார்க்
75366279

நோர்வே
22 425 527

நெதர்லாந்து
076 5425804

அவுஸ்திரேலியா
61 3 8802 8368

"எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவுஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் - கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய - புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும் இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்."

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்



சிறீலங்கா அரசு போர்க் குற்றவாளி

சர்வதேசத்தின் 2வது தண்டனை!

(22.01.2010, வெள்ளிக்கிழமை)

சிறீலங்காவிற்கு வழங்கி வந்த ஜி.எஸ்.பி பிளஸ் எனும் வரிச்சலுகை நீடிப்பை இடைநிறுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்து, இன அழிப்புப் போரில் ஈடுபட்டுள்ள சிறீலங்காவிற்கு முதற் தண்டனையை வழங்கியிருந்த நிலையில், கடந்த வாரம் அயர்லாந்தின் தலைநகர் டப்ளின் நகரில் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணையின் முடிவில் சிறீலங்கா அரசை போர்க் குற்றவாளியாக அறிவித்ததுடன், சிறீலங்கா அரசு மானுடத்திற்கு எதிரான குற்றம் இழைத்துள்ளது என்றும் குற்றம்சாட்டி தனது ஆரம்ப கட்டத் தீர்ப்பை அளித்துள்ளது.

இந்தத் தீர்பானது சிறீலங்காவை உடனடியாகப் பாதிக்காதபோதும் எதிர்காலத்தில் அதற்கு பெரும் நெருக்கடிகளை இந்தத் தீர்ப்பானது ஏற்படுத்தும் எனக் கருதப்படுவதால், இது சிறீலங்காவிற்கு சர்வதேச ரீதியாக வழங்கப்பட்ட இரண்டாவது தண்டனையாகப் பார்க்கப்படுகின்றது. அத்துடன், இந்தத் தீர்ப்பானது சிறீலங்காவை போர்க் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கும் ஒரு வலுவான ஆதாரமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தாலியின் மிலான் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் (Permanent People's Tribunal) கடந்த 14, 15ம் திகதிகளில் டப்ளின் நகரில் உள்ள ட்றினிற்றி கல்லூரியில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்தப்பட்ட போரில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் போர்க் குற்றம், மானுடத்திற்கு எதிரான குற்றம், இனப் படுகொலை ஆகியன குறித்து விசாரணை செய்தது.

இந்த நீதிமன்றத்தில், சகிப்புத் தன்மை மற்றும் வன்முறைகளுக்கு எதிரான யுனெஸ்கோ விருது பெற்றவரும், பொருளாதார வீழ்ச்சி தொடர்பான ஐ.நா. ஆணைக் குழுவின் உறுப்பினரும், பெல்ஜியம் லுவெய்ன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான பிரான்சுவா ஹூராட் (Francois Houtart) தலைமையில், டில்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரும், இந்தியாவில் முஸ்லிம்களின் சமூகப் பொருளாதாரக் கல்வி நிலை தொடர்பாக ஆராய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கினால் நியமிக்கப்பட்ட சச்சார் ஆணைக்குழுவின் தலைவருமான ராஜிந்தர் சச்சார் (Rajinder Sachar), எகிப்திய எழுத்தாளரும், பயிற்சி பெற்ற மருத்துவரும், எகிப்தில் பெண்கள் உரிமைகள் தொடர்பாக குரல் கொடுப்பவரும், ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் பெண்களுக்கான திட்டங்கள் தொடர்பான ஐ.நா.வின் ஆலோசகராக இருந்தவருமான நவல் அல் சடாவி (Nawal al Saadawi), பௌத்த அமைதிப் பிரசாரங்களை மேற்கொள்பவரும், எழுத்தாளரும், தாய்லாந்தில் சமூக மனிதாபிமான அமைப்புகளின் செயற்பாட்டாளரும், நொபேல் பரிசு பெற்றவருமான சுலக் சிவரக்ஸா (Sulak Sivaraksa), ஐ.நாவின் முன்னாள் உதவிச் செயலாளரும், ஈராக்கிற்கு எதிராக ஐ.நா.பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடைகளை விதித்த போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தனது 34 ஆண்டு கால பணியில் இருந்து விலகியவரும், காந்தி சர்வதேச அமைதி விருதை பெற்றவருமான டெனிஸ் ஹலிடே (Denis Halliday), மிலன் நிலையான மக்கள் நீதிமன்றத்தின் செயலாளர் நாயகம் கியானி ரொக்னோனி (Gianni Tognoni), இனப் படுகொலைகள் பற்றிய கல்வி நிலையத்தின் பணிப்பாளரும், ஆர்ஜென்ரீனாவின் புவனஸ் அயர்ஸ் பல்கலைக்கழகத்தின் இனப்படுகொலைகள் பீடத்தின் விரிவுரையாளருமான டானியல் பியேஸ்ரன் (Daniel Feierstein), டப்ளினில் உள்ள மனித உரிமைகளைக் காப்போரின் பாதுகாப்புக்கான அமைப்பின் முன்னிலைப் பணிப்பாளரான மேரி லோலர் (Mary Lawlor), அனைத்துலகச் சட்டங்கள் தொடர்பான நிபுணரும், பிலிப்பைன்சில் மேற்கொள்ளப்பட்ட சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய மக்கள் நீதிமன்றத்தின் உறுப்பினருமான ஒய்ஸ்ரென் ரிவெற்றர் (Oystein Tveter), இத்தாலியின் முன்னாள் செனெட் உறுப்பினரும் அரசு சார்பற்ற அமைப்புகளின் முன்னணிச் செயற்பாட்டாளருமான பிரான்சிஸ்கோ மார்ரோன் (Francesco Martone) ஆகியோர் இந்த நீதிமன்றத்தில் நீதிபதிகளாக பொறுப்பு வகித்தனர்.



(தொடர்ச்சி 36ம் பக்கம்)

இலங்கையில் மீண்டும் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச




இலங்கையில் நடைபெற்று முடிந்த ஆறாவது ஜனாதிபதி தேர்தலின் சகல மாவட்டங்களின் முடிவுகளும் வெளியிடப்பட்டுள்ளநிலையில் தற்போதைய ஜனாதிபதியாகவுள்ள மகிந்த ராஜபக்ச போட்டி வேட்பாளர் சரத் பொன்சேகாவை விட 1,842,749 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இத்தோதலில் மகிந்த ராஜபக்ச 6,015,934 வாக்குகளை பெற்றுள்ளார் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகா 4,173,185 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ச 16 மாவட்டங்களிலும் எதிரணி வேட்பாளர் சரத் பொன்சேகா 6 மாவட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளனர்.

இலங்கையின் ஆறாவது புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெற்றியடைந்துள்ளார்.அத்துடன் மாவட்ட ரீதியாக இரு வேட்பாளர்களும் பெற்ற வாக்கு விபரங்கள் பின்வருமாறு:



இரு பிரதான போட்டியாளர்களும் மாவட்ட மட்டத்தில் பெற்றுள்ள மொத்த வாக்குகள்

கொழும்பு
மகிந்த ராஜபக்ச 614,740
சரத் பொன்சோகா 533,022

கம்பஹா
மகிந்த ராஜபக்ச 718,716
சரத் பொன்சேகா 434,506

காலி
மகிந்த ராஜபக்ச 386,971
சரத் பொன்சேகா 211,633

மாத்தறை
மகிந்த ராஜபக்ச 296,155
சரத் பொன்சேகா 148,510

அம்பாந்தோட்டை
மகிந்த ராஜபக்ச 226,887
சரத் பொன்சேகா 105,336

குருநாகல்
மகிந்த ராஜபக்ச 582,784
சரத் பொன்சேகா 327,594

அநுராதபுரம்
மகிந்த ராஜபக்ச 298,448
சரத் பொன்சேகா 143,761

பதுளை
மகிந்த ராஜபக்ச 237,579
சரத் பொன்சேகா 198,835

இரத்தினபுரி
மகிந்த ராஜபக்ச 377,734
சரத் பொன்சேகா 203,566

களுத்துறை
மகிந்த ராஜபக்ச 412,562
சரத் பொன்சேகா 231,807

கண்டி
மகிந்த ராஜபக்ச 406,636
சரத் பொன்சேகா 329,492

கேகாலை
மகிந்த ராஜபக்ச 296,639
சரத் பொன்சேகா 174,877

புத்தளம்
மகிந்த ராஜபக்ச 201,981
சரத் பொன்சேகா 136,233

மாத்தளை
மகிந்த ராஜபக்ச 157,953
சரத் பொன்சேகா 100,513

பொலநறுவை
மகிந்த ராஜபக்ச 144,889
சரத் பொன்சேகா 75,026

மொனறாகலை
மகிந்த ராஜபக்ச 158,435
சரத் பொன்சேகா 66,803

நுவரேலியா
சரத் பொன்சேகா 180,604
மகிந்த ராஜபக்ச 151,604

யாழ்ப்பாணம்
சரத் பொன்சேகா 113,877
மகிந்த ராஜபக்ச 44,154

மட்டக்களப்பு
சரத் பொன்சேகா 146,057
மகிந்த ராஜபக்ச 55,663

அம்பாறை
சரத் பொன்சேகா 153,105
மகிந்த ராஜபக்ச 146,912

வன்னி
சரத் பொன்சேகா 70,367
மகிந்த ராஜபக்ச 28,740

திருகோணமலை
சரத் பொன்சேகா 87,661
மகிந்த ராஜபக்ச 69,752

ஈழமுரசு

டப்ளின் தீர்ப்பும் தமிழ் மக்கள் செய்ய வேண்டியதும்

1956 இல் தொடங்கிய சிறீலங்காவின் தமிழினத்திற்கு எதிரான இன அழிப்புப் போருக்கு எதிரான சர்வதேசத்தின் முதல் அடி இப்போதுதான் விழுந்துள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பேரினவாதங்கள், தமிழ் மக்களை மிக இலகுவாக அழித்தொழிப்பதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டங்களைப்போட்டு அவசரகாலச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி கடந்த மூப்பது வருடங்களாகப் தொடர்ச்சியாக அதனைப் பேணியும் வருகின்றன. உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் இவ்வாறு அவசரகாலச் சட்டத்தில் தொடர்ச்சியாக ஒரு நாடு இயங்கியதாக வரலாறு இல்லை.

அச்சமூட்டும் இந்தச் தடைச் சட்டங்களை வைத்துக்கொண்டுதான் சிங்கள ஆளும் வர்க்கமும் அவர்களது பயங்கரவாத இராணுவமும் தமிழினப் படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும் தமது விருப்பம்போல் மேற்கொண்டு வருகின்றன. இன்றுவரை இதற்காக எந்தத் தண்டனையையும் அந்நாடும், இவற்றில் ஈடுபட்டவர்களும் அனுபவிக்கவில்லை.

குர்து இன மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைக்காக ஈராக்கின் முன்னாள் தலைவர்கள் தண்டனையை அனுபவிக்கின்றார்கள். 5000 பேரைக் கொன்றதற்காக 25 ஆண்டுகள் அந்நாட்டை ஆட்சிபுரிந்த அதிபர் சதாம் உசைன் மரண தண்டனையைப் பெற்றுள்ளார். தற்போது அதே குற்றத்தில் ஈடுபட்ட கெமிக்கல் அலிக்கும் மரண தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் ஒரு மக்கள் பிரிவினரை அழித்ததற்காக புதிதாக பதவியேற்ற அரசு முன்னாள் ஆட்சியாளர்களுக்கு நீதிமன்றங்களின் ஊடாக இந்தத் தண்டனையை பெற்றுக்கொடுத்திருக்கின்றது.

ஆனால், சிறீலங்காவில் இது என்றுமே சாத்தியமில்லை. எதிரெதிர் கட்சிகளாக, இருதுருவங்களாக சிங்களப் பேரினவாதங்கள் மோதிக் கொண்டாலும் முன்னாள் ஆட்சியாளர்கள் செய்த படுகொலைகளையோ, மனித உரிமை மீறல்களையோ புதிதாக வருபவர்கள் குற்றம்சாட்டுவதும் இல்லை, நீதிமன்றில் ஏற்றுவதுமில்லை.

மாறாக, முன்னையவர்கள் செய்ததைவிட மேலாக, மோசமாக அடுத்து வருபவர்கள் தமிழ் மக்களுக்கு அநீதி இழைப்பதே வழமையாகிப்போய்விட்டது. இந்த வழமையில், நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் மூலம் மாற்றம் ஒன்று ஏற்படும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு கிடையாது. ஏனெனில் தற்போது இருக்கும் மகிந்த, இனப்படுகொலையை செய்விப்பதில் நிறைந்த அனுபவத்தைக் கொண்டவர். சரத் பொன்சேகா அதனை நேரில் நின்று செய்ததில் நிறைந்த அனுபவம் வாய்ந்தவர். இந்த இருவரில் ஒருவரிடமே நாட்டின் ஆட்சி செல்லப்போகின்றது. எனவே, இவர்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு தீர்ப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது.

இந்நேரத்தில்தான் தமிழ் மக்களுக்கு ஒரு அருமையான வாய்ப்பு கைகூடி வந்துள்ளது. காலம் காலமாக தமிழின அழிப்பை மேற்கொண்டிருந்தவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கான ஒரு வலுவான தீர்ப்பு தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கின்றது. சிறீலங்கா அரசை போர்க் குற்றவாளியாக அறிவித்துள்ளதுடன், மானுடத்திற்கு எதிரான குற்றவாளியாகவும் சிறீலங்காவை அடையாளப் படுத்தியிருக்கின்றது டப்ளின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்.

இந்த தீர்ப்பாயத்தின் முடிவுகள் வெளியுலகிற்கு தெரிந்துவிடாத வண்ணம், முழுப்பூசணியை மறைக்க முயல்வதுபோல், சிறீலங்காவும் அதன் சர்வதேச ஆதரவு சக்திகளும் ஊடகங்களின் வாய்களை மூடிக்கட்டியபோதும், தீர்ப்பை மாற்றமுடியாது.

டப்ளின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பைக் கொண்டு, சிங்களப் பேரினவாதத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களுக்கான நியாயத்தை தேட முடியும். சிறீலங்காவை சர்வதேசத்தின் முன் குற்றவாளியாக நிறுத்தி, தமிழ் மக்கள் மீது புரிந்த பயங்கரவாதத்திற்கு தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவும், சர்வதேச நாடுகளின் உறவில் இருந்து சிறீலங்காவை அந்நியப் படுத்தவும் கிடைத்துள்ள இந்த நல்லதொரு சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் பயன்படுத்தியாகவேண்டும். இல்லையேல், வெறும் தாளில் பதிவான தண்டனையாக மட்டும் டப்ளின் தீர்ப்பு இருந்துவிடும் என்பதே உண்மை.

உலகை திருப்திப்படுத்த ஆங்கிலத்தில் ஒரு அறிக்கை. எங்களை உசுப்பேத்த தமிழில் உணர்ச்சிவயமான இன்னொரு அறிக்கையா?

சேரமான்

அம்மையீர், ஐயன்மீர்,

வணக்கம்!

தைத்திருநாளில் நீங்கள் வெளியிட்ட அறிக்கை கண்டோம்.

இழந்துபோன எமது தேசத்தின் நிலங்களையும், இறையாண்மையையும் இராசரீக வழிகளில் வென்றெடுத்து தமிழீழத் தனியரசை நிறுவுவோம் என்று நீங்கள் அன்று சபதமெடுத்த பொழுது நாம் புளகாங்கிதமடைந்தோம்.

முள்ளிவாய்க்கால் அவலத்தால் வெதும்பிப்போயிருந்த எங்களுக்கு உங்களின் வாக்கு வேதவாக்காக ஒத்தடமளித்தது உண்மைதான். தமிழீழ மக்களவையும், நாடுகடந்த தமிழீழ அரசும் எதிரியைத் தாக்கும் இரு பேராயுதங்கள் என்று நீங்கள் உரைத்தபொழுது நாம் மெய்மறந்தே போனோம்.

இக்கால பூகோள - அரசியல் தமிழீழத் தனியரசு நிறுவப்படுவதற்கான புறச்சூழலை தோற்றுவித்திருப்பதாக அன்று நீங்கள் பிரகடனம்செய்த பொழுது நாங்கள் உச்சிகுளிர்ந்ததும் உண்மைதான்.

ஆனால் இன்று...

நாடு கடந்த தமிழீழ அரசு ஒரு பல்தேசிய வணிக நிறுவனம் போன்று இயங்கும் என்கின்றீர்கள். தேசம் கடந்து இயங்கும் அரசுசாரா அமைப்புப் போன்று அது செயற்படும் என்கின்றீர்கள். போதாக்குறைக்கு உங்கள் கற்பிதத்திற்கு உவமையாக CNN, Microsoft போன்ற முதலாளிய நிறுவனங்களையும் துணைக்கு அழைக்கின்றீர்கள்!

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை அறிந்துள்ளோம். ஆனால் அரசு தேய்ந்து வணிக நிறுவனமாக மாறப்போகும் கதையின் சூத்திரத்தை மட்டும் எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தயைகூர்ந்து விளக்குவீராக!

நிற்க...

உருவாகப் போகும் நாடுகடந்த தமிழீழ அரசு ஒரு அஞ்ஞாதவாச அரசு அல்ல என்கின்றீர்கள். அங்கீகரிக்கப்பட்ட சிறீலங்கா அரசுக்கு விரோதமாக இயங்கும் ஒரு அஞ்ஞாதவாச அரசுடன் உலகம் தொடர்புகளைப் பேணவிரும்பவில்லை என்றும் கூறுகின்றீர்கள். அதனால்தான் அஞ்ஞாதவாச அரசுடன் நாடு கடந்த அரசை ஒப்பிடுவது தவறு என்கின்றீர்கள்.

சரி, அப்படியே இருக்கட்டும். சிறீலங்கா அரசுடன் முரண்பட விருப்பமில்லை என்றால் நாடு கடந்த சிறீலங்கா அரசு என்று நீங்கள் பெயர்சூட்டிக் கொள்ளலாமே? பிறகெதற்கு தமிழீழம்? நாடு கடந்த தமிழீழ அரசுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக உலக நாடுகளுடன் பேசுவதாக நீங்கள் அன்றுகூறிய பொழுது மயிர்க்கூச்செறிந்தது. உங்களது முயற்சியை உலக இராசதந்திரிகள் வரவேற்பதாக நீங்கள் பிரகடனம் செய்த பொழுது எங்களது மயிர்க்காம்பெல்லாம் புல்லரித்துப் போனது.

ஆனால் ஆறு மாதங்களுக்குள் அந்தர்பல்டி அடித்து, இப்பொழுது புதுக்கதை கூறுகின்றீர்கள். வெளிநாட்டு அரசாங்க அதிகாரிகளுடனும், கொள்கை வகுப்பாளர்களுடனும், புத்திஜீவிகளுடனும் மட்டும் பேசிக்கொண்டிருப்பதாக அறிக்கை விடுகின்றீர்கள். அரசியல் - இராசதந்திர வழிகளில் பரப்புரை செய்வோம் என்று அறிவிக்கின்றீர்கள்.

எப்பொழுதும் அகிம்சை வழியில் உங்களது செயற்பாடு அமையும் என்று உறுதிபூணுகின்றீர்கள். ஆயுதப் பலம் தீண்டத்தகாதது என்று அருவருக்கின்றீர்கள். ஒவ்வொரு நாடுகளின் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு இயங்கப் போவதாக சத்தியம் செய்கின்றீர்கள்.

அருமை! அருமையிலும் அருமை. இருந்தாலும் ஒரு சில சந்தேகங்கள் எழத்தான் செய்கின்றன. ஆறு மாதங்களாக வெளிநாட்டு அதிகாரிகளுடனும், கொள்கை வகுப்பாளர்களுடனும், புத்திஜீவிகளுடனும் பேசிக் கொண்டிருக்கும் நீங்கள் எதற்காக வெளிநாட்டு அரசியல் தலைவர்களை இன்னும் அணுகவில்லை? அதற்கான இராசதந்திரக் கதவுகள் இன்னமும் திறக்கவில்லையா? அல்லது உங்களால் அவற்றைத் திறக்க முடியவில்லையா? இராசதந்திரம் என்பது பலத்தில் தங்கியிருப்பது.

பரப்புரை என்பது இராசதந்திரத்திற்கு உறுதுணை நிற்பதே தவிர அதுவே இராசதந்திரமாகிவிடாது. யதார்த்தம் அடிப்படியிருக்கும் பொழுது அகிம்சை வழியில் என்னதான் இராசதந்திரம் செய்யப் போகின்றீர்கள்? காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகமா?

வெஸ்ட்மின்ஸ்டர் திடலிலும், ஜெனீவா முன்றலிலும், பாரிசிலும் வெள்ளைக்காரனிடம் அடிவாங்கியதை நாமென்ன மறந்துவிட்டோமா? நீங்கள் மறந்திருக்கலாம்... ஏனென்றால் அடி எங்கள் மீதல்லவா விழுந்தது!

அகிம்சை வழியில் நீங்கள் செயற்படுவது நல்லதுதான். நீங்கள் வாழும் நாடுகளின் சட்டங்களை மதித்து வாழ்வதும் போற்றத்தக்கதுதான். ஆனால்... ஆயுத பலத்தை நீங்கள் அருவருக்கின்றீர்களோ இல்லையோ எங்கள் தேசியத் தலைவன் ஒருபொழுதும் போரை விரும்பியதில்லை என்பது மட்டும் உண்மை. அது

> **ஆறு மாதங்களாக வெளிநாட்டு அதிகாரிகளுடனும், கொள்கை வகுப்பாளர்களுடனும், புத்திஜீவிகளுடனும் பேசிக்கொண்டிருக்கும் நீங்கள் எதற்காக வெளிநாட்டு அரசியல் தலைவர்களை இன்னும் அணுகவில்லை ?**

உங்களுக்கும் தெரியும். உங்களுக்கு பின்னால் நிற்போருக்கும் தெரியும். அனாதையாக அந்தரித்து நின்ற எமது மக்களுக்காக எம் தலைவன் ஆயுதமேந்தியதை நீங்கள் இப்பொழுது சிறுமைப்படுத்திப் பேசுவதுதான் நகைப்புக்கிடமானது.

இவைதான் போகட்டும். உலக அங்கீகாரத்தை நாடு கடந்த தமிழீழ அரசு பெறுவது சாத்தியமில்லை என்கின்றீர்கள். அப்படியென்றால் எதற்காக நாடு கடந்த அரசு அமைக்க வேண்டும்? தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வைப் பெறுவதற்காக நாடுகடந்த தமிழீழ அரசு உழைக்கும் என்கின்றீர்கள்.

தமிழீழம் கிடைத்தால்... என்றும் இழுக்கின்றீர்கள். அப்படியென்றால் தமிழீழம் அமைப்பது உங்களின் நோக்கமே இல்லையா? அல்லது தமிழீழம் அமையும் என்பதில் உங்களுக்கு நம்பிக்கையே இல்லையா?

இறுதியாக ஒரு கேள்வி.

எமது உடன்பிறப்புக்களான இஸ்லாமியத் தமிழர்களை தேசிய இனம் என்கின்றீர்கள். தமிழீழத்தில் முஸ்லிம்களுக்கான பிராந்தியங்கள் இருப்பதாகக் கூறுகின்றீர்கள். தமிழர்களைப் போன்று முஸ்லிம்களும் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமையுடையவர்கள் என்கின்றீர்கள்.

தமிழீழம் அமைந்தால்... அவர்கள் விரும்பினால் தமிழீழத்தில் இருந்து பிரிந்து சென்று தனியரசு அமைக்கலாம் என்கின்றீர்கள். தமிழீழத்தில் இருந்து பிரிந்து சென்று தனியரசு அமைக்கப் போவதாக எப்பொழுது எமது இஸ்லாமிய உடன்பிறப்புக்கள் உங்களுக்கு அறிவித்தார்கள்?

இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் என்று மூன்று மதங்களைச் சேர்ந்த தமிழர்களைக் கொண்ட தேசம் தமிழீழ தேசம். அதை இருகூறாக்கி இந்துக்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் ஒருதேசம், முஸ்லிம்களுக்கு ஒரு தேசம் என்று துண்டாடும் உரிமையை உங்களுக்கு யார் அளித்தார்கள்?

அதுசரி, ஆங்கிலத்தில் நீங்கள் வெளியிட்ட அறிக்கைக்கும், தமிழில் வெளியிட்ட மொழிபெயர்ப்புக்கும் இடையில் பாரிய கருத்துக் குழப்பங்கள் காணப்படுகின்றதே? உலகை திருப்திப்படுத்த ஆங்கிலத்தில் ஒரு அறிக்கை. எங்களை உசுப்பேத்த தமிழில் உணர்ச்சிவசமான இன்னொரு அறிக்கையா? அப்படியென்றால் பாம்புக்கு வால் மீனுக்குத் தலையா?

(நன்றி - சங்கதி)

குற்றச்சாட்டுக்களை மறுக்கும் நோர்வே, அமெரிக்கா

தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதற்கு, தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஸாமிலுக்கு கொடுப்பதற்காக நோர்வேயும் அமெரிக்காவும் நிதி வழங்கியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அந்த இரண்டு நாடுகளும் மறுத்துள்ளன. மற்றொரு நாட்டின் தேர்தலில் தலையிடுவதை தாம் விரும்பவில்லை என நோர்வே தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. தமது நாடு குறித்த நிதியை வழங்கியதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை சிறிலங்காவில் உள்ள நோர்வே தூதரகம் மறுத்துள்ளது. இதேவேளை அமெரிக்காவும் தம்மீதான இந்தக்குற்றச்சாட்டை மறுத்துள்ளது. இலங்கையின் தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் ஜனநாயகம் முன்னெடுக்கப்படவேண்டும் என கோரியுள்ள அமெரிக்க தூதரகம், வெற்றிபெற்றவருடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

மரத்துடன் மோதிய பேருந்து

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பேருந்து ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி தடம்புரண்டதில் சாரதியும் பயணி ஒருவரும் பலியாகியுள்ளனர். வவுனியாவில் கடந்த 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து இரவு புறப்பட்ட இந்த பேருந்து வவுனியாவை வந்தடைந்து அங்கிருந்து கொழும்பு நோக்கி வேகமாக வந்தபோதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. சாரதி கட்டுப்பாட்டை இழந்தமையினாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்தில் ஒன்பது பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தவறுதலாக வெடித்த துப்பாக்கி

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு சந்திரகாந்தன், தனது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததன் காரணமாக காயமடைந்து அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் திருக்கோவிலில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது. பாதுகாப்புக்காக அவர் தம்வசம் வைத்திருந்த கைத் துப்பாக்கி வெடித்தமையால் அவரது தொடையில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழம் சென்றால் கைது

தமிழீழம் சென்று வந்ததாக தெரிவித்து பத்து தமிழ்நாட்டு தமிழர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக காவல்துறை அறிவித்துள்ளது. 1990ம் ஆண்டு சென்னை கோட்டையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய பத்துக்கும் மேற்பட்டவர்கள் ஈழத்திற்கு சென்று திரும்பியுள்ளதாகவும் இவர்களை கைது செய்வதற்கு தமிழகத்தில் தனிப்படை ஒன்று அமைக்கப்பட்டு அண்டைய மாநிலங்களில் செல்லாதவகையில் கியூ பிரிவு காவல்துறையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா – அவுஸ்ரேலிய ஆலோசனை

சிறிலங்காவிற்கான அவுஸ்ரேலிய அலுவலகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் சிறிலங்காப் படைத் தளபதியினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். சிறிலங்காவிற்கான அவுஸ்ரேலிய அலுவலகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் நிமோனி இன்ஸ் சிறிலங்காப்படைத் தலைமை அலுவலகத்திற்கு சென்று கலந்துரையாடியுள்ளார். இதில் சிறிலங்காப்படைத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதில் சிறிலங்கா அவுஸ்திரேலியா நாடுகளின் பாதுகாப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிதிவெடியில் ஒருவர் காயம்

வன்னியில் மிதிவெடியில் சிக்கி ஒருவர் காயமடைந்துள்ளார். வன்னியில் மிதிவெடிகளை அகற்றியுள்ளதாக பன்னாடுகளுக்கு அறிவித்து தமிழ் மக்களை மீள்குடியேற்றம் என்ற பெயரில் சிறீலங்கா அரசு கொண்டுசென்று விட்டுள்ளது. இந்நிலையில் புளியங்குளம் பகுதியில் மிதிவெடி வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் வவுனியா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகப் போட்டியில் கலந்துகொள்ளும் ஈழத்து இளைஞன்



ரக்வொண்டோ (Taekwondo) என்னும் தற்காப்புச் சண்டைப் போட்டியில் டென்மார்க்கில் வாழும் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த பரமநாதன் தம்பதிகளின் புதல்வன் விபீசன் (16) உலகக் கோப்பைக்கான (18 வயதிற்கு உட்பட்டோருக்கான) போட்டியில் டென்மார்க் நாட்டின் சார்பாக கலந்து கொள்ள இருக்கின்றார்.

இப்போட்டியானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் மெக்சிக்கோவில் நடைபெறவுள்ளது. மேலும் இதனைத் தொடர்ந்து அதே நாட்டில் இளையோருக்கான ஒலிம்பிக் போட்டிக்காக நடைபெறும் தகுதிகான் போட்டியிலும் கலந்து கொள்கின்றார். விபீசன் ரக்வோண்டோ தற்காப்புக் கலையினை தனது 5 வயதிலிருந்து பயின்று வருகின்றார். தனது 10வது வயதில் கறுப்புப் பட்டியினைப் பெற்று டென்மார்க் நாட்டில் மிகவும் குறைந்த வயதில் கறுப்புப் பட்டியினைப் பெற்ற சாதனையாளராகவும் விளங்குகிறார். இதுவரை டென்மார்க்கிலும் பிற நாடுகளிலும் நடைபெற்ற பல போட்டிகளில் கலந்து கொண்டதோடு பல வெற்றிப் பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

இதுவரை 4 முறை டென்மார்க் சம்பியன், 2 முறை நோர்டிக் சம்பியன், 4 முறை ஸ்கன்டினேவியன் சம்பியனாகவும் வந்துள்ளார். இவர் டென்மார்க்கிலும் பிற நாடுகளிலும் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டதன் மூலம் 35 தடவைகள் முதலாம் இடத்தைப் பெற்றமை பாராட்டிற்குரியது. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஐரோப்பா நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் இரண்டுமுறை டென்மார்க் நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டார். தனது முதலாவது போட்டிக்காக சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த அஜர்பைஜான் எனும் நாட்டிற்கு சென்றுவந்தார்.

2009ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டில் நடைபெற்ற ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான போட்டியில் டென்மார்க் நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டதோடு மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். தனது வெற்றியால் களிப்புற்று தமிழீழ தேசியக் கொடியுடன் மக்கள் முன் நின்று தன் வேர் எது என்பதை இவர் அடையாளப்படுத்த முனைந்தமை பெருமைக்குரியதாகும். விபீசன் மெக்சிக்கோவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்று தான் வாழும் நாட்டிற்கும், தமிழீழத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துவோம்.

ஊடகவியலாளர்களுக்கு இலங்கையில் அச்சுறுத்தல்



இலங்கை ஊடகங்கள் மீது அரசியல் அழுத்தங்கள் அதிகரித்து வருவதையடுத்து நியூயோர்க்கில் தளத்தைக் கொண்டுள்ள செய்தியாளர்களை பாதுகாப்பதற்கான குழு ஜனவரி 26 தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளுக்கும் விடுத்துள்ள கோரிக்கையில் தேர்தல் பிரசாரங்களையும் வாக்களிப்பு நடைமுறைகளையும் எழுதுவதில் ஈடுபடும் செய்தியாளர்களின் பங்களிப்பை மதித்து நடந்து கொள்ளுமாறு கேட்டுள்ளது.

பிபிசி சிங்கள சேவையின் நிருபர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து மேற்படி அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இலங்கை ஊடக செய்திகளின்படி, செய்தி எழுதுவதில் ஈடுபட்டிருந்த பிபிசியின் பெண் நிருபர் விவசாய அமைச்சரின் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் அரசியல் குழு ஒன்றினால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

தக்ஷிலா தில்றுக்ஷி என்ற பிரஸ்தாப நிருபரை பின் தொடர்ந்து சென்ற குழுவினர் அவர் மீது பொல்லுகளால் தாக்கியுள்ளனர். அவரது ஒலிப்பதிவு உபகரணம், செல்பேசி ஆகியனவும் அபகரிக்கப்பட்டுள்ளன. தக்ஷிலாவுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி செய்தியாளர்களை பாதுகாப்பதற்கான குழு விபரங்களை சேகரித்து வருகிறது என்று ஜேர்மன் செய்தி ஸ்தாபனம் டிபிஏ தெரிவித்துள்ளது. தற்போதைய தேர்தல் பிரசாரம் தொடர்பான நூற்றுக்கணக்கான வன்முறைச் சம்பவங்களை தேர்தல் கண்காணிப்பு வலையமைப்புகள் பதிவு செய்துள்ளன என்று இலங்கையின் ஊடக அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தக்ஷிலா மீதான தாக்குதலை கண்டிப்பதாக தெரிவித்த செய்தியாளர்களை பாதுகாப்பதற்கான குழு, செய்தியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடமும் அரசியல் கூட்டங்களை ஒழுங்கு செய்பவர்களிடமும் கேட்டுள்ளது என்று மேற்படி அமைப்பின் ஆசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் பொப் டியெற்ஸ் தெரிவித்துள்ளார். யுத்தத்திலிருந்து நாடு மீட்சி பெறும் இவ்வேளையில் செய்தியாளர்கள் அச்சமின்றி தேர்தல் செய்திகளை எழுதுவதற்கான சூழலை உருவாக்க சகல கட்சிகளும் பாடுபட வேண்டும் என்பது முக்கியமாகும் என்று அவர் கூறினார்.

செய்தியாளர்களை பாதுகாப்பதற்கான குழு இலங்கை பற்றிய அதன் விசேட அறிக்கையில் செய்தியாளர்கள் மீதான தாக்குதல்கள் பற்றியும் அவை குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் தவறியமை பற்றியும் விரிவாக எழுதியுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் செய்தியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் நாடுகளில் இலங்கை நான்காம் இடத்தை வகிப்பது குறித்தும் இக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் 12 செய்தியாளர்கள் கொல்லப்பட்டதை சுட்டிக் காட்டிய குழு இவற்றில் ஒன்றுக்காயினும் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

பிடிக்கவும் இல்லை, விடவும் இல்லை

கேணல் ராம், அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவின் தரப்பு தெரிவித்திருந்ததை சிறீலங்கா அரச தரப்பு மறுத்துள்ளது. தடுப்பு காவலில் இருந்து கேணல் ராம் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், இவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தலைமை தாங்கும் நிலை ஏற்படலாம் என்றும் தெரிவித்துள்ள பொன்சேகாவின் அந்த அறிக்கையில், இது தேர்தலை மாத்திரமன்றி பொதுமக்களின் வாழ்க்கையையும் சீர்குலைக்கும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதேவேளை இந்த அறிக்கை தொடர்பில் கருத்துரைத்துள்ள, சிறீலங்கா இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, கேணல் ராமை படையினர் ஒரு போதும் கைதுசெய்திருக்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். எனினும், முன்னர் தப்பியோடிய ராம் மீண்டும் கைது என சிறீலங்கா இராணுவ தரப்பு தகவல்களை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

படையினருக்கான விடுமுறைகளை இரத்து

சிறீலங்காப் படையினருக்கான விடுமுறைகளை நீக்கி பாதுகாப்பினை பலப்படுத்திக் கொள்ளுமாறு படையினருக்கு பாதுகாப்பு அதிகாரிகளினால் கட்டளையிடப்பட்டுள்ளது. நடைபெறும் தேர்தலினை முன்னிட்டு நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளும் மூன்று நாட்கள் மூடப்படும் என்றும், அதேவேளை இக்காலப்பகுதியில் சிறீலங்காப் படையினருக்கான அனைத்து விடுமுறைகளும் நீக்கப்பட்டு நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளதாக சிறீலங்காப் படையினரின் படைத்துறை பேச்சாளர் உதய நாணயக்காரா தெரிவித்துள்ளார். இதேவேளை சிறீலங்காவில் உள்ள அனைத்து பாதுகாப்புக்களையும் பலப்படுத்துமாறு மகிந்த ராஜபக்சவினாலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த கொலை : நேரில் கண்ட சாட்சி

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையை நேரில் கண்டதாகக் கூறப்படும் சாட்சி ஒருவரை சிறீலங்கா குற்றத் தடுப்புப் பிரிவினர் கல்கிசை நீதவான் நீதிமன்றில் நிறுத்தியுள்ளனர். சாட்சி தொடர்பில் இரகசியங்களைப் பேணுவதற்கான தேவையுள்ளதாக கல்கிசை நீதிமன்ற நீதவானிடம் குற்றத்தடுப்புப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்கான அனுமதியையும் கோரியுள்ளனர். லசந்த விக்கிரமதுங்க 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி ராஜகிரியவில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். பிரபல ஊடகவியலாளரான லசந்தவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என சர்வதேசம் வலியுறுத்தி வரும் நிலையில், ஒரு ஆண்டு கடந்து ஒருவரை பிடித்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பு குறித்து பசில் கிண்டல்



வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையான மக்கள் ஆதரவைப் பெற்று நாடாளுமன்றத்திற்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கான விமானச் சீட்டுக்களையும் தமது பிள்ளைகளை வெளிநாடு அனுப்புவதற்கான புலமைப் பரிசில்களையுமே அரசாங்கத்திடம் இதுவரை காலமும் கோரினார்களே தவிர மக்களின் பொதுவான தேவைகள் எதனையும் கோரவில்லை என்று சிறீலங்கா ஜனாதிபதியின் சகோதரரும் சிரேஷ்ட ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ச தேர்தல் பிரச்சாரத்தில் கிண்டலடித்துள்ளார். மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் கோயில் கடந்த புதன்கிழமை தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கருணாவுடன் இணைந்து இந்தக் கேலியை வெளியிட்டுள்ளார்.

விசுவாச நாய்கள்

“மகிந்த ராஜபக்ச அவர்களை எங்களுக்கு நீண்டகாலமாகத் தெரியும். அவருடைய அரசியல் எல்லாம் எங்களுக்குத் தெரியும். அவர் ஒரு மனித உரிமைவாதியாக, ஒரு விடுதலைப் போராட்டவாதியாக, பாலஸ்தீன விடுதலைக்கு இங்கை இருந்துகொண்டு முழு ஆதரவைக் கொடுத்தவர். ஒரு ஜனநாயகவாதியாக, ஒரு பண்புள்ள மனிதனாக எங்களுக்குத் தெரியும்” என்று யாழ். திருநெல்வேலி தேர்தல் பிரச்சாரத்தில் ஈ.பி.டி.பி கூலிக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். போடுற எலும்புக்கு இந்த விசுவாசமும் இல்லாட்டிப் பிறகென்ன..?

குறுகிய காலத்தில் அநேக மக்களை கொன்று குவித்தவர் மகிந்த

- விக்கிரமாகு தெரிவிப்பு



ஆகக் குறைந்த காலப்பகுதியில் கூடுதலான மக்களைக் கொன்று குவித்த ஒரே ஜனாதிபதி மகிந்த ராஜபக்சதான் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும் சிறீலங்கா ஜனாதிபதி வேட்பாளருமான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். காலி பலப்பிட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நடந்து முடிந்த யுத்தம் இந்தியாவின் வேண்டுகோளின் பேரிலேயே இடம்பெற்றது என்பதை ஜனாதிபதி தாமாக ஒப்புக் கொண்டுள்ளார். ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இடம்பெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே 4 வருடத்திற்குள் நடத்த வேண்டிய தேவை என்ன? இனவாதிகள் மூலம் தாம் கொண்ட வெற்றியை வைத்துக்கொண்டு மீண்டும் குடும்ப ஆட்சி செய்ய வேண்டும் என்பதே அவரது நோக்கம். யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்ற நிலங்கள் எங்கே? அதனை எல்லாம் இந்தியாவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டார் மகிந்த ராஜபக்ச என தனதுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் பெருந்தோட்டத்துறை, துறைமுகம், பெற்றோல் உள்ளிட்ட விடங்களில் ஏற்படும் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே ஜெனரல் சரத் பொன்சேகாவை இந்நாட்டின் ஏகாதிபத்தியவாதிகள் தெரிந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவின் காட்டிக்கொடுப்பால் கொங்கிரஸ் சீற்றம்

வன்னியில் நடத்தப்பட்ட இறுதிக்கட்ட தாக்குதலின் போது கனரக ஆயுதங்கள் பிரயோகிப்பதை நிறுத்துவதென சிறீலங்கா அரசாங்கம் எடுத்த தீர்மானம், இந்திய அரசாங்கம் கடந்த வருட தேர்தலின் போது தமிழ்நாட்டில் வெற்றிபெற உதவியது என்று சிறீலங்கா ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அண்மையில் தெரிவித்த கருத்தை இந்திய ஆளும் கொங்கிரஸ் கட்சி நிராகரித்துள்ளது. இந்திய தேர்தல் முடிவுகளில் இலங்கை விவகாரத்திலும் பார்க்க உள்ளூர் அரசியல், பொருளாதார காரணிகளே ஆதிக்கம் செலுத்தின என்று கொங்கிரஸ் பேச்சாளர் சிறீசத்யவ்றாத் சதுர்தேவி தெரிவித்துள்ளார்.

தேர்தலின் போது கருணாநிதியின் திராவிட முன்னேற்ற கழகம், செல்வி ஜெயலலிதாவின் அகில இந்திய அண்ணா திராவிட முன்னெற்ற கழகம் ஆகிய இரண்டுமே இலங்கைத் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தன. ஆனால் இந்த விவகாரம் இரண்டு கட்சிகளினாலும் பயன்படுத்தப்பட்ட ஒரு பொது காரணியாகும். தேர்தலில் இது எந்தவொரு கட்சிக்கும் அனுகூலத்தை இது ஏற்படுத்தவில்லை என்று சதுர்தேவி தெரிவித்தார்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சிங்களப் படைகளால் முற்றாக அழிப்பு

யாழ்ப்பாணம் வலிகாமம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கோப்பாய் பகுதியில் அமைந்திருக்கும் மாவீரர் துயிலும் இல்லம் சிங்களப் படைகளால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட கல்லறைகளின் மீது பொருத்தப்பட்டிருந்த சகல பளிங்குப் படிமங்களும் சிங்களப் படைகளால் அகற்றப்பட்டிருப்பதோடு, நடுகற்களில் காணப்பட்ட மாவீரர்களின் பெயர் விபரங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சமாதான காலப்பகுதியில் தெய்வீகத் தன்மையுடன் ஆலயம் போன்று வலிகாமம் பிரதேச மக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் தற்பொழுது முட்புதர்களும், பற்றைகளும், செடிகளும் படர்ந்து பாழடைந்த இடம் போன்று காட்சியளிப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்களின் விடுதலைக்கனவுகளுடன் போரில் வீரச்சாவடைந்த மாவீரச்செல்வங்களின் நினைவுக் கல்லறைகளை இலங்கையின் கொடுங்கோல் அரச சிங்களப் படைகள் அழிப்பதன்மூலம் தமிழ் மக்களுக்கு மேலும் ஆத்திரத்தை ஊட்டும் செயலாக அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

குரங்காட்டிகளும், பாம்பாட்டிகளும்

இதயச்சந்திரன்

யாழ். நகரில், குரங்காட்டிகளும் பாம்பாட்டிகளும் வீதியோரங்களில் சாகசங்கள் நடாத்துவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் காலத்தில், வாக்குறுதிகள் வழங்கும் குடுகுடுப்பைக்காரர்களுடன் இவர்களும் வருகின்றார்கள்.

குரங்குகள் தப்பிச் செய்லாதவாறு, இடுப்பில் கயிறுகட்டி, கையில் பிரம்பை வைத்தபடி, வித்தைகாட்டுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. மகுடியின் அசைவில் படமெடுக்கும் பாம்பு ஆடுவதைப் புரிந்துகொள்ளாமல், இசையைக்கேட்டு இரசித்து அது ஆடுவதாகப் பெரும்பாலானோர் எண்ணிக்கொள்கிறார்கள்.

சர்வதேசக் குரங்காட்டிகளும், பிராந்தியப் பாம்பாட்டிகளும், இலங்கைக் களத்தில் இறங்கி வித்தை காட்ட ஆரம்பித்திருப்பதை, இந்த நிஜ விலங்காட்டிகள் நினைவுபடுத்துகின்றனர்.

மனிதர்களை, மனிதர்கள் வைத்து ஆட்டும் வித்தையில், பலபோர்களையும், இன அழிப்புக்களையும், நில ஆக்கிரமிப்புக்களையும் தரிசிக்கக் கூடியதாகவிருக்கிறது.

இந்நிலையில், நிலத்தில் நிகழ்த்தப்படும் சாகசங்கள், கடற்பரப்பிலும் விரிவடைகிறது.

தேசிய இனவிடுதலைப் போராட்ட அழிப்பினில், ஒன்று சேர்ந்து ஆட்டம் போட்டவர்கள், கடலாதிக்கத்திற்காக, தமக்குள் மோத ஆரம்பித்துள்ளனர்.

இத்தகைய தந்திரோபாய நகர்வுகள், திரைமறைவில் நடைபெறும் இவ்வேளையில், புதிய ஆட்சிமாற்றமொன்று நிச்சயம் நிகழ்ந்தேற வேண்டுமென்கிற முனைப்பில் மேற்குலகம் காய்நகர்த்துவதை உணரலாம்.

யுத்தம் முடிவடைந்ததும், இந்த மோதல்கள் ஆரம்பமாகுமென்பதை, அம்பாந்தோட்டை துறைமுக விரிவாக்கத்தில் உணர முடிந்தது.

எதனை உற்பத்தி செய்தாலும், கடற்பாதை பாதுகாப்பாக அமையாவிட்டால், சொந்த நாட்டிலேயே பொருட்கள் தேங்கிவிடும். கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அதிதொழில்நுட்ப ஏவுகணைகள், உற்பத்திப் பொருட்களை காவிச்செல்லாது. இத்தகைய யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் ஏகாதிபத்தியங்கள், அவை உச்ச படைவலுவைக் கொண்டிருந்தாலும், பொருளாதாரப் பரிவர்த்தனைக்கு கடல்பாதையையே நம்பியிருக்க வேண்டும்.

விமானத்தைவிட, கப்பல் மூலம் அதிகளவு பொருட்களை, காலம் நீண்டு சென்றாலும், குறைந்த செலவில் கொண்டு செல்ல முடியும்.

அதேவேளை அடுத்த முப்பது வருடங்களில் அமெரிக்காவிற்கு ஈடாக சீனா வளர்ந்துவிடுமென்று பொருளியல் வல்லுனர்கள் எதிர்வு கூறுகின்றார்கள்.

ஏற்றுமதி வர்த்தகத்தில் ஜேர்மனியை மிஞ்சிவிட்டதாம் சீனா. கடந்த வருடம் மட்டும் சீனாவின் வருமானம் 1.2 ரில்லியன் டொலர்களை எட்டிவிட்டது. அதோடு தேசிய மொத்த வருமானம், 4 ரில்லியனைத் தாண்டிவிட்டது. கடற்பாதையில் தடங்கல் ஏற்பாட்டால், சீனாவின் ஒருலக ஆதிக்க கனவு கரைந்துவிடும்.

இந்நிலையில், மேற்குலக, ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகளுக்கு, இந்து சமுத்திரப் பிராந்தியம், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென்பதைப் புரிந்துகொள்ளலாம்.

யெமன் (Yemen) நாட்டில் விரிவடையும் அல்கெய்தாவின் ஆதிக்கமும், சோமாலிய கடற்கொள்ளையரின் அட்டகாசமும், சீனக் கடல் வணிகச் செயற்பாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை உருவாக்கப்போகிறது.



கப்பல் கடத்தல்காரரிடமிருந்து, வணிகக் கப்பலை பாதுகாக்கச் செல்லும் கடற்படைப்படகுகள், எரிபொருள் நிரப்புவதற்குக்கூட சீனாவிடம் ஒரு படைத்தளமும் கிடையாது.

பிரெஞ்சுக் கடற்படைத்தளத்தையே பாவிக்கும் துர்ப்பாக்கிய நிலை, இந்தப் புதிய ஆசிய வல்லரசாளனிற்கு ஏற்படுகிறது.

ஆகவே நீண்ட நோக்கின் அடிப்படையில், அம்பாந்தோட்டைத்துறைமுகத்தில், சகல கடல்காணிப்பு வளங்களும் பொருந்திய கடற்படைத் தளமொன்றினை நிறுவும், இரகசிய நிகழ்ச்சி நிரலொன்றை சீனா வைத்திருப்பதாக இந்திய படைத்துறை புலனாய்வுத்துறையினர் நம்புகின்றனர்.

இத்தகைய தந்திரோபாய நகர்வுகள், திரைமறைவில் நடைபெறும் இவ்வேளையில், புதிய ஆட்சிமாற்றமொன்று நிச்சயம் நிகழ்ந்தேற வேண்டுமென்கிற முனைப்பில் மேற்குலகம் காய்நகர்த்துவதை உணரலாம்.

மகிந்தரின் ஆட்சி நீடித்தால், மேற்குலகின் அழுத்தங்கள் அதிகரிக்குமென்பது உண்மை. ஆனாலும் டப்ளின் (நுரடிடமை) நிரந்தர நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சிறீலங்கா அரசை போர்க்குற்ற விசாரணைக்கு இட்டுச் செல்லுமா?

ஏற்கனவே, முள்ளிவாய்க்கால் இன அழிப்புக் கொடூரங்கள் நிகழ்ந்தவுடன், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு எதிராகக் கொண்டுவந்த தீர்மானங்களை, இந்தியாவுடன் இணைந்து சீனாவும் ரஷ்யாவும் முறியடித்தன.

இந்த சுண்டைக்காய் அளவு நாட்டைக் காப்பாற்ற, உலக ஜாம்பவான்கள், தமக்குள் ஏன் மோதிக்கொள்கிறார்கள்?

பிராந்திய, கடலாதிக்கமே இவற்றின் மையமாக நின்று செயற்படுகிறது இதன் சுழற்சிக்குள் சிக்குண்டு, தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் பந்தாடப்படுகின்றது.

2005 தேர்தலில் ரணில் தோல்வியுற்றதால், தடைகளை விதித்து விடுதலைப்புலிகளைத் தண்டித்த மேற்குலகம், மறுபடியும் ரணிலின் பிரதிநிதி சரத் பொன்சேகா தோல்வியடைந்தால், மனித உரிமைமீறல், போர்குற்ற ஆயுதங்கள் கொண்டு இலங்கை அரசை தண்டிக்குமென்று சிலர் கணிப்பிடுகிறார்கள்.

வணிக உறவினால், சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே ஒரு சமரசம் ஏற்பட்டால் அடுத்து என்ன நடக்கும்? அதற்கான சாத்தியங்களையும் நிராகரிக்க முடியாது.

இதுவரை மகிந்தரை ஆதரித்துவந்த இந்தியாவின் நிலைப்பாடு, தற்போது சரத்திற்கு ஆதரவாக மாற்றமடைவதையும் நோக்க வேண்டும்.

கூட்டமைப்பை அடிக்கடி அழைத்துப் பேசும் இந்தியாவின் நிலையில், எச்சரிக்கையும், மாற்றமும் கலந்து காணப்படுகிறது.

ஆகவே மேற்குலகின் சார்பாளராகக் கருதப்படும் சரத்பொன்சேகா, அதிபராகப் பதவியேற்றால், அரசின் மீதான அழுத்தங்கள் தணிவடையும். இறுதிப்போர் அழிவுகள் குறித்த விசாரணைகள், ஐ.நா. சபையினால் மேற்கொள்ளப்படாது.

ஆனாலும் டப்ளினில் நிகழ்ந்த விசாரணைகளை அமெரிக்கா மேற்கொள்ளவில்லையென்பதையும் குறித்துக்கொள்ளவேண்டும்.

புலம்பெயர் தமிழமக்களின் முயற்சியாலேயே அவை நடந்தேறியது. ஆகவே சர்வதேச சட்டதிட்டங்களின் துணையுடன், இவைபோன்ற போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியுமென்பதை டப்ளின் விவகாரம் புலப்படுத்துகிறது.

மகிந்தர் ஆட்சிப்பீடமேறினால், அரசிற்கெதிரான மோதல்கள், மேற்குலகத் தளத்திலேயே நிகழும்.

சரத் ஆட்சியைக் கைப்பற்றினால், அந்த மோதல்கள் ஆசியப்பிராந்தியத்திலே மையமிடும்.

பெரும் பசி கொண்டு, உலகின் மூல வளங்களை, அம்பாந்தோட்டை கடல்பாதையூடாக உறிஞ்சிக்கொண்டிருக்கும் சீன தேசம், இலங்கைத் தீவில் மேற்குலக ஆதிக்கம் அதிகரிப்பதை அனுமதிக்காது.

ஆசியாவின் முதன்மை ஏகாதிபத்தியமாக உருப்பெற்று, முழு உலகின் நாயகனாக மாறவிரும்பும் சீனாவிற்கு, இந்த ஆதிக்கம் பெரும் இடையூறாகவே அமையும்.

இதில் இந்தியாவின் வகிபாகம், மிகவும் வித்தியாசமாக இருக்கப்போகிறது. மூவேந்தரின் மோதல்கள், நாட்டை பிளவுபடுத்தும் நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

ஆகவே மேற்குலகின் ஆதரவுச் சக்தி, இலங்கையில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதே, புதிய திசைகளை திறந்துவிடும்.

இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, நாடு பிளவுபடக்கூடாதென்று தமிழர் போராட்டத்தை அழித்தார்கள். ஆனாலும் அவர்களுக்குள் மோதி, அதை பிளவுபடுத்தி விடுவார்கள். இதுவும் சாத்தியம்.



வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  Stop all interest on your debts
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  Stop collection calls, legal action & garnishments
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  Protect all your assets (House, Car, RRSP, RESP)
- மாதாந்த ரீதியில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  Make one monthly payment to all of your creditors
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  Give you solutions with out bankruptcy

digi Media

வங்குரோத்து சட்டங்களில் மாற்றங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
NEW Changes from Bankruptcy Act. Call me for Details.

Suren Sornalingam
Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**
Fax: 416.332.0914
web: www.creditrecoverycanada.com



crc

CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

அரசியல் களம்

- வேல்ஸ் இல் இருந்து அருஷ்

இந்தியா என்ற பெரும் தேசத்திற்கு சிறுபான்மைத் தமிழினம் வைத்த இராஜதந்திர பொறி

கடந்த டிசம்பர் 17 ஆம் நாள் அரச தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் கால எல்லை நிறைவடைந்த பின்னர் தென்னிலங்கை வன்முறைகளால் கொழுந்து விட்டு எரிகின்றது.

இதுவரையில் அங்கு நடைபெற்ற தேர்தல் முறைகேடுகள் மற்றும் வன்முறை சம்பவங்களின் எண்ணிக்கைகள் 700ஐ தாண்டிவிட்டன. இந்த தேர்தல் நிறைவு பெற்றதும் தனது பதவியில் இருந்து ஓடப்போகின்றேன் என சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸ்ஸநாயக்கா தெரிவிக்கும் அளவுக்கு அரச தரப்பு மேற்கொண்டுவரும் வன்முறைகள் உச்சத்தை தொட்டுள்ளன.



தென்னிலங்கையின் இந்த வன்முறைகளுக்கு மத்தியில் நாட்டில் மிகவும் அமைதியாக இருப்பது வடமாகாணம் தான் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒன்றான கபே அமைப்பு கடந்த செவ்வாய்கிழமை (19) தெரிவித்துள்ளது.

சிங்கள தேசத்தின் இந்த குத்து வெட்டுக்கள் தமிழ் தரப்புக்கு அனுகூலமானதே. அதனை மேலும் ஊக்குவிப்பதே அரசியல் இராஜதந்திரம் என்பதை தமிழர் தரப்பு மிகவும் துல்லியமாக கணக்கிட்டு அறிந்து கொண்டுள்ளது.

அதனால் தான் சிங்கள தேசத்தின் பலவீனமான அரசியல் தலைவராக கருதப்படும் ஜெனரல் பொன்சேகாவை ஆதரிக்க பெரும்பாலான தமிழ் மக்களும், தமிழ் மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கூட்டணியான தமிழ் தேசிய கூட்டமைப்பும் தீர்மானித்துள்ளன.

ஆனால் மறைமுகமாக மகிந்த ராஜபக்சவின் மீள்வரவை ஊக்குவித்து வந்த இந்தியாவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் இந்த அறிவித்தல் ஒரு அதிர்ச்சி வைத்தியமாக அமைந்துவிட்டதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனவே தான் உடனடியாக தமிழ் தேசிய கூட்டமைப்பை அழைத்து இந்தியா பேச்சுக்களை மேற்கொண்டிருந்தது.

சிறீலங்காவின் அரச தலைவராக ஜெனரல் பொன்சேகா வருவதை இந்தியா விரும்பவில்லை. அவருக்கு பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர்புகள் உண்டு என இந்தியா போலியாக தெரிவித்து வருகின்ற போதும், உண்மையான நிலை அதுவல்ல. ஏனெனில் இந்தியாவும், பாகிஸ்தானும் நெருங்கிய நண்பர்களாக நின்றே ஈழத்தமிழ் மக்கள் மீதான போரை நடத்தியிருந்தன. எனவே இந்தியா – பாகிஸ்தான் மோதல்கள் என்பது ஒரு உள்ளூர் அரசியல் சார்ந்து உருவாக்கப்பட்ட கருத்துருவாக்கமாகவே ஈழத்தமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

எனவே இந்தியா பொன்சேகாவை எதிர்ப்பதற்கான முக்கிய காரணம் மகிந்த ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டால் அவரின் ஆட்சியில் உள்ளவர்கள் மற்றும் அவரின் காலத்தில் பணியாற்றிய படை அதிகாரிகள் மீது மேற்கொள்ளப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களில் தானும் சிக்க நேரிடலாம் என்ற அச்சமே.

மகிந்தாவின் மீள்வரவை எண்ணி இந்தியா தவம் கிடக்கின்றது. ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொன்சேகாவை ஆதரிக்க முன்வந்ததை தொடர்ந்து பெரும் பதற்றம் அடைந்த இந்தியா, ரணிலுக்கு அவசர செய்திகளை அனுப்பியதுடன், அவருடன் கலந்துரையாடியிருந்தது. பாகிஸ்தானை முன்நிறுத்தி இந்தியா ரணிலை மிரட்ட மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. அதன் பின்னர் ஈழத்தமிழ் மக்களை ஏமாற்றி மகிந்தவை மீண்டும் பதவியில் அமர்த்தலாம் என இந்தியா நம்பியபோது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவு இந்தியாவுக்கு அதிர்ச்சி மருந்தாக அமைந்துவிட்டது.

வன்னியில் நடைபெற்ற போரில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களில் இந்தியாவின் பங்களிப்பு கணிசமான அளவில் உண்டு. எனவே தான் சிறீலங்காவில் அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்குலகமும், அனைத்துலக மனித உரிமைகள் அமைப்புக்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதும் உலகில் பெரிய ஜனநாயக நாடு என தம்பட்டம் அடிக்கும் இந்தியா மௌனம் காக்கின்றது.

எனவே தான் மகிந்தாவின் மீள்வரவை எண்ணி இந்தியா தவம் கிடக்கின்றது. ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொன்சேகாவை ஆதரிக்க முன்வந்ததை தொடர்ந்து பெரும் பதற்றம் அடைந்த இந்தியா, ரணிலுக்கு அவசர செய்திகளை அனுப்பியதுடன், அவருடன் கலந்துரையாடியிருந்தது. பாகிஸ்தானை முன்நிறுத்தி இந்தியா ரணிலை மிரட்ட மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

அதன் பின்னர் ஈழத்தமிழ் மக்களை ஏமாற்றி மகிந்தாவை மீண்டும் பதவியில் அமர்த்தலாம் என இந்தியா நம்பியபோது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவு இந்தியாவுக்கு அதிர்ச்சி மருந்தாக அமைந்து விட்டது. ஈழத்தமிழ் மக்களை பொறுத்தவரையில் அவர்களின் முடிவு தெளிவானது, அதாவது ஏறத்தாள ஏழு கோடி தமிழ் மக்களை கொண்டிருந்த போதும் ஈழத்தமிழ் மக்களை மதிக்கவோ அல்லது அவர்களின் நிகழ்ச்சிநிரலுக்கு அமைவாக சிறீலங்கா மீது அழுத்தங்களை மேற்கொள்ள இந்தியா முன்வரவில்லை.

எனவே இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்பட வேண்டிய தேவை என்பது ஈழத்தமிழ் இனத்திற்கு இல்லை என்பதை மகிந்தவை நிராகரித்ததன் மூலம் தமிழ் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியா சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இந்திய தேசிய கொங்கிரஸ் உறுப்பினர்களும், இந்திய உயர் அரச அதிகாரிகளும் பேச்சுக்களை நடத்தியதுடன், பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியது ஏன் என்பது தொடர்பில் மிக நீண்ட நேரமாக விளக்கங்களும் கேட்கப்பட்டன. மேலும் பொன்சேகாவை ஆதரிப்பது என்ற கூட்டமைப்பின் முடிவு தொடர்பில் இந்திய மத்திய அரசு மகிழ்ச்சி அடையவில்லை எனறே கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



இந்தியத் தரப்பை ஆட்கொண்டுள்ள அச்சம் ஒன்று தான். அதாவது பொன்சேகா அரச தலைவரானால் சிறீலங்கா அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கலாம் என்பது தான்.

ஏற்கனவே டப்ளின் நகரில் நடைபெற்ற போர்க்குற்ற விசாரணைகள் சிறீலங்கா அரசிற்கு பாதகமான நிலையை எட்டியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை முடக்குவதற்கு இந்தியாவும் – சிறீலங்காவும் இணைந்து நடவடிக்கை எடுக்க தயாராகி வருகின்றன.

அதன் வெளிப்பாடாகவே சிறீலங்கா அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்காவின் கருத்தும் அமைந்திருந்தது. அதாவது கடந்த வருடம் மே மாதம் நடைபெற்ற இந்திய நாடாளுமன்ற தேர்தலில் இந்திய கொங்கிரஸ் கட்சிக்கு ஒரு அனுகூலமான நிலையை ஏற்படுத்துவதற்கே பாதுகாப்பு வலையத்தின் மீது மேற்கொண்டு வந்த கனரக பீரங்கிகளின் தாக்குதலை சிறீலங்கா இராணுவம் நிறுத்தியதாக அவர் தெரிவித்தது இந்திய அரசை சங்கடத்தில் மாட்டியுள்ளது.

இந்திய கொங்கிரஸ் அதனை மறுத்துள்ள போதும், சிறீலங்கா அரசு தற்போது அதனை வெளியிடவேண்டிய தேவை என்ன என்பது குறித்து அவதானிகள் சந்தேகம்

(38ம் பக்கம் பார்க்க)

விடுதலைக் கனலை அணைக்க முயல்கிறதா நாடு கடந்த அரசு?

- சோழ.கரிகாலன் -

நாடு கடந்த அரசு உருவாக்கும் ஆலோசனைக் குழு தமது அறிக்கையினை மக்கள் பார்வைக்கு கடந்த வெள்ளியன்று வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையானது, சுதந்திர தமிழீழ தனியரசை அமைக்கும் நோக்கத்தை இலாவகமாகக் கைவிட்டுள்ளது. இந்த அறிக்கையின் வடிவமானது, இது ஒரு நாடு கடந்த அரசு என்பதைவிட வேறு சக்திகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு நாடு கடந்த கூட்டுறவு நிறுவனமாக அல்லது வெறுமனே ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகவே தோற்றம் காட்டுகின்றது.

இவர்கள் ஒரு கூட்டாட்சிக்கும் படிப்படியான பேச்சு வார்த்தைக்குமே தம்மைத் தயார் படுத்துகின்றார்கள். இவர்களது பக்கம் சார்ந்த அரசியலானது மக்களால் அதற்குரிய தந்திரங்களாலும், பலத்தாலும் பதிலளிக்கப்பட வேண்டியவை.

இவர்கள் கொடுத்திருக்கும் அந்த வழிகாட்டிக் கோட்பாடானது, இந்தக் குழுவினரின் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட மக்கள் பங்குபற்றாத ஒரு கோட்பாட்டு அலகையே கொண்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் தமது சொந்தக் கருத்துக்களைக் கூறமுடியாது இந்த வழிகாட்டிக் கோட்பாட்டின் எல்லைக்குள் அடங்கியே செயற்பட முடியும். ஏனெனில் ஏற்படுத்தப்படும் கண்காணிப்புக்குழு இவர்களை இவர்களுக்காக அடைத்துக் கொடுக்கப்பட்ட வேலிக்குள் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்ய மட்டுமே அனுமதிக்கும். இங்கு இவர்களுக்கான ஜனநாயகம் இவ்வளவே. அத்தோடு வேறு விதமான ஜனநாயக நகர்வுகளையும் ஆதரிப்பதை இது தவிர்த்துள்ளது. இவர்களைக் கட்டுப்படுத்தும் இந்த வழிக்காட்டிக் கோட்பாடு வெறும் உள்ளக சுயநிர்ணயத்தையே தன்னுள் வைத்து வேலி போடுகின்றது. மேயப்போகின்றவர்கள் எல்லாம் ஒஸ்லோவில் பேசிப்பேசி தோல்வி கண்ட அந்த உள்ளக சுயநிர்ணயத்தின் உள்ளேயே மேய அனுமதிக்கப்படுவார்கள். தாங்களே உருவாக்கிய மக்கள் பார்வைக்கு வைக்கப்படாத ஒரு வழிகாட்டல் கோட்டபாடு அதன் கண்காணிப்புக் குழுவால் நாடுகடந்த அரசின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த பயன்படப்போகின்றது. அண்மையில் இணையத் தளங்களுக்கும், ஊடகங்களுமக்கும் அனுப்பி வைக்கப்பட்ட உருத்திரகுமாரனின் அறிக்கையில், சில தினங்களுக்கு முன்பு இணையத் தளங்களில் வந்த செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில், இந்த வழிகாட்டிக் கோட்பாடும் நாடு கடந்த அரசுக்கான மதியுரை அறிக்கையும் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

இவ் அறிக்கையானது எதற்காக ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டது? ஆகவே இத் தயாரிப்பின் பின்னணியில் சர்வதேச சமூகத்தின் பின்னணியும், தயாரிக்கப்பட்ட அறிக்கை சர்வதேச நலன்களுக்கு உட்படுத்தப்பட்ட அறிக்கையுமாகவே பார்க்கப்படல் வேண்டும். ஆகவே இம்முறையும் தமிழரின் அரசியல் எதிர்காலம் தமிழரின் கண்கள் கொண்டு பார்க்கப்படவில்லையா..?

இங்கு தமிழர்களின் நலன்களைவிட நாடு கடந்த அரசு சர்வதேச சமூகத்திடம் நல்ல பெயர் வாங்கவும் அவர்கள் இடும் கட்டளைகளுக்காக இயங்குவதுபோலுமே உள்ளது. தனது அறிக்கையில் மேலும், இவ் அறிக்கையானது மக்கள் பார்வைக்கும், பகிரங்க விவாதத்திற்கும் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால், ஐரோப்பிய நாடுகளில் மூடிய அறைக்குள் தெரிந்தெடுக்கப்பட்ட தங்கள் கொள்கை ஆதரவாளர்களோடும் போராட்டக் காலங்களில் ஒதுங்கி இருந்துவிட்டு இன்று நான்தான் பொறுப்புபென்று தலையெடுத்து திரிபவர்களோடு மட்டுமே நடைபெறுகின்றது. இந்த விவாதத்திற்கு மக்களோ மக்களைப் பிரிதிநிதித்துவப் படுத்தும் அமைப்புக்களோ, தமிழர்களை ஒருங்கிணைக்கும் கிளைகளோ அழைக்கப்படவில்லை, அறிவிக்கப்படவுமில்லை. ஊடகங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

இப்படியான 'ஜனநாயகத்தில்'தானா நாடு கடந்த இந்த அரசும் நடாத்தப்படப் போகின்றது? யாரைத் திருப்திப் படுத்துவதற்காக அல்லது யாரின் கட்டளையில் இப்படிப் பட்டோரை அரவணைத்து இந்த நாடுகடந்த அரசு உருவாகப் போகின்றது. இவர்களின் இந்த மதியுரை அறிக்கை வெறும் சுயநிர்ணய உரிமை பற்றியே திரும்பத் திரும்ப பேசுகின்றது. இந்த சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமையற்றது. என்பதை ஐ.நா தெளிவாகக் கூறுகின்றது. அப்படியாயின் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண்பதற்காகவா இந்த அமைப்பும் ஏற்படுத்தப் போகின்றது. அதையும்தாண்டி இந்த முப்பது வருட ஆயுதப் போராட்டமும் சுயநிர்ணய உரிமையை அறிந்துகொள்வதற்காகவே நடத்தப்பட்டது என்று புலிகளின் அரசியல் நோக்ககங்களையே இவர்கள் மாற்ற முயல்கின்றனர். இந்த சுயநிர்ணய உரிமையை மட்டுமே கோரி என்றோ முயற்சி செய்து தோற்றுவிட்ட கொள்கைகளைக் காவி வந்து சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் புலம்பெயர்ந்த தமிழர்களை இழுத்துவருவதே இவர்களின் திட்டம். இவர்கள் அறிக்கையில் தாம் தமது தீர்மானங்களை சர்வதேச சமூகத்தை கோபப்படுத்தாது, அவர்களது செயற்பாடுகளுக்கு பங்கம் விளைக்காததாக இருக்க வேண்டும் என்று

> **முப்பது வருட ஆயுதப் போராட்டமும் சுயநிர்ணய உரிமையை அறிந்துகொள்வதற்காகவே நடத்தப்பட்டது என்று புலிகளின் அரசியல் நோக்ககங்களையே இவர்கள் மாற்ற முயல்கின்றனர். இந்த சுயநிர்ணய உரிமையை மட்டுமே கோரி என்றோ முயற்சி செய்து தோற்றுவிட்ட கொள்கைகளைக் காவிவந்து சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் புலம்பெயர்ந்த தமிழர்களை இழுத்துவருவதே இவர்களின் திட்டம்**

கூறியுள்ளனர். அன்று எப்படி கருணாநிதி சிங்கள அரசைக் கோபப்படுத்தாமல் தமிழர்களுக்காக பிச்சை எடுக்க வேண்டும் என்றாரோ அதே பிச்சைப் பாத்திரத்தை இவர்கள் கொஞ்சம் முன்னேறி சர்வதேச சமூகத்திடம் ஏந்துகின்றனர்.

உரிமையும் சுதந்திரமும் போராடிப் பெறப்படல் வேண்டும். பிச்சைகேட்டு அல்ல. இதனை மக்கள் இவர்களுக்கு உணர்த்த தலைப்படவேண்டும். இவர்கள் சொல்லும் படிப்படியான அங்கீகாரம், சர்வதேச அங்கீகாரத்தோடு படிப்படியான சுயநிர்ணயம் என்பன இவர்களால் தமிழர்களின் போராட்ட நெருப்பை விடுதலைக் கனலை படிப்படியாக அணைக்க முயல்வதாகவே தோன்றுகின்றது.

இவர்கள் அறிக்கையில் அபிவிருத்தி பற்றிப் பேசியுள்ளனர். சுதந்திரத் தனியரசு இல்லாத நாட்டிற்கு அபிவிருத்தி செய்ய முற்படுவது இதை ஒரு நாடு கடந்த கூட்டுறவுச் சங்கம்போல் எண்ண வைக்கின்றது. இங்கு எமது தேசத்தின் விடுதலை சுதந்திரத் தமிழீழத் தனியரசு என்பன முற்றாக விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் சொல் விளையாட்டுக்களுக்காக எமது இன விடுதலையை பரிசோதிக்க முடியாது. இதே பார்வையில் இவர்கள் தொடர்ந்து போனால் வேறு அரசாங்கங்களோடு மக்கள் போராடுவது போல் நாடு கடந்த அரசோடும் ஈழத் தமிழர்கள் போராட வேண்டிய நிலை வரும். இந்தக் கூட்டுறவு, அபிடுவிருத்தி மாதிரிகளை விட்டுவிட்டு எமது தேச விடுதலையை நோக்கிய பணியில் இவர்கள் இறங்கியாகவேண்டும். இவர்கள் இராணுவக் கொலைகள் எனும் பதத்தோடு மட்டும் நின்றுகொண்டு எமக்காக இன்று அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்களும் மக்கள் நீதிமன்றங்களும் உரத்துச் சொல்லும் இனப்படுகொலை என்ற சொல்லை யார் நலனுக்காகவோ தவிர்த்துவிட்டனர்.

இங்கு இந்த நாடு கடந்த அரசு உருவாக்கக் குழு பற்றியோ அல்லது அவர்களின் செயற்பாடு பற்றியோ தெளிவுபடுத்தப்படவில்லை. இது தவிர ஒவ்வொரு நாட்டிலும் இயங்கும் நாடுகடந்த அரசின் செயற்பாட்டாளர்களின் செயற்பாடு இன்னும் இரண்டு பகுதியாகவே உள்ளது. இவர்கள் தங்களைத் தாங்களாகவே நாடு கடந்த அரசின் செயற்பாட்டாளர்கள் என்று கூறிக்கொண்டு தாங்கள் 'அதியுச்ச அதிகார மையத்தில் இருந்து' நியமிக்கப்பட்டதாகக் கூறிக்கொள்கின்றனர். இவர்களின் நியமனங்கள் மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பதுபோல் நாடு கடந்த அரசின் பெயர் சொல்லி மக்கள் மத்தியில் இவர்கள் ஏற்படுத்தும் குழப்பங்கள் எமது தேசிய விடுதலையை புறந்தள்ளுவதாகவே உள்ளது. செயற்பாட்டில் இருந்து முன்பு நீக்கப் பட்டவர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக உலா வரத் தொடங்கியுள்ளனர்.

கேள்வி என்னவெனில் இந்த நாடுகடந்த அரசு தமிழர்களின் விடுதலை உணர்வை முற்றாக மழுங்கடித்து சுந்திரதாகத்தை அற்றுப் போகச்செய்து மாபெரும் இந்தப் புலம்பெயர் தமிழர் சக்தியை சர்வதேசத்தின் கைகளில் வழங்கி அவர்களின் புவிசார் அரசியல் இலாபங்களுக்கு எம்மைப் பலியாக்கப் போகின்றனரா? இதற்கு உதாரணமாக திபெத்திய புகலிட அரசை சர்வதேசத்தின் கைகளில் சிக்கவைத்து வெறும் அங்கீகாரம் மட்டும் வழங்கிவிட்டு அரை நூற்றாண்டாக எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் அப்படியே அவர்களது விடுதலை கிட்டத்தட்ட மறக்கடிக்கப்பட்டு சர்வதேச சமூகம் தன் புவிசார் இலாபங்களைப் பெற்றுவருகின்றது. இதே நிலைக்கு நாமும் தள்ளிப்படப் போகின்றோமா..? எமது விடுதலையானது தள்ளிப்போடப் படுமானால் புலம்பெயர் தமிழ் சமூகம் சுயம் துலைத்த சமூகமாக மறுக்கடிக்கப்பட்டுவிடும். இதுவே இன்றைய சர்வதேச ஒழுங்கில் தேவையாகவும் உள்ளது. இதற்கு நம்மை பலியாக்கப் போகின்றோமா? இதனை முறியடிக்க தமிழர்கள் தாங்களே தங்கள் உரிமைகளை சர்வதேசத்தின் முன் வெளிக்கொணர வேண்டும். நாடுகடந்த அரசினால் மறுதலிக்கப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையிலான தமிழீழ தனியரசின் மீள் வலியுறுத்தல் இன்று நாடு கடந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நாடு கடந்த அரசு மக்கள் மத்தியில் தம் இருப்பைக் காத்துக்கொள்ளவே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தம் கைகோர்க்க உள்ளனர். இந்த இடத்தில் நாம் மிகவும் விழிப்பாக இருப்பது அவசியம். ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான தீர்வொன்று ஏற்கப்பட வேண்டிய நிலையில், தெரிவுகளற்ற நிலைக்கு இன்று தாய் நிலத்தில் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு இனிப் புத் தடவிய கசப்பாக ஒன்றுபட்ட சிறீலங்கா புலத்தில் நாடு கடந்த அரசாங்கம்.

எனவே, இந்த அரசின் செயற்பாட்டாளர்களும் உருவாக்கக் குழுக்களும் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை அடகு வைப்பதை விட்டு விட்டு மக்கள் அவாவான தனித் தமிழீழ சுதந்திர அரசை நிறுவ முன்வர வேண்டும். ஜனநாயகத்தை முறையே செயற்படுத்த வேண்டும். தங்கள் நிர்வாகச் செயற்பாட்டுக் குழுக்களுக்குள்ளேயே களையெடுக்கத் தொடங்கவேண்டும். தேசிய விடுதலையை மட்டுமே கொள்கையாக்க வேண்டும். சர்வதேசத்திற்கு அடங்கிப்போய் அல்லது அவர்களுக்கு ஏவல் செய்வதை விட்டுவிட்டு தேசியத் தலைவரின் ஆணையில் சுதந்திர தமிழீழ அரசை உருவாக்க வேண்டும். இவை எதுவும் மாற்றப்படாமல் சர்வதேசத்தின் கைகளில் தமிழ் இனத்தை ஒப்படைக்க நினைத்தால் மக்களின் தீர்ப்பு மிகவும் கடுமையானதாக இருக்கும். மக்கள் ஆதரவு இழக்கும் அமைப்புக்கள் காணாமல் போய்விடும் என்பது வரலாறு எமக்குத் தந்த பாடம்.



முள்ளிவாய்க்காலில் இறுதி வரை நின்று போராடிய போராளியின் அனுபவப் பதிவு இது. பாதுகாப்பான தளம் ஒன்றை இவர் சென்றடையும் வரை இவரது விபரங்களை தவிர்த்துக்கொள்கின்றோம்.

யாழ்குடாவில் தரையிறங்கிய புலனாய்வுத்துறை, கரும்புலிகள் அணி

இவ்வாறான பயிற்சிகளுக்கு நடுவே, ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்தும் நீண்டதூரத் தாக்குதல் அணிகள் உருவாகின்றன. இவர்களுக்கான பயிற்சிகள் பெரும் காடுகளில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இவர்கள் நீண்ட நாட்கள் காட்டுவழியாக, எதிரியின் முகாம்கள், ஆறுகள், அருவிகள் என்பவற்றை கடந்து சென்று எதிரியின் இலக்கு மீது தாக்குதல் நடத்தும் வகையில் உருப்பெற்றிருந்தார்கள். இவ்வாறு விடுதலைப் புலிகளின் படைக் கட்டுமானங்களில் ஏற்பட்ட பல வளர்ச்சிகளை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். இதில் போராளிகளின் பயிற்சித் தளங்கள் தொடர்பாக தொடர்ந்துவரும் தொடர்களில் தருகின்றேன்.

புதிய புதிய போராளிகளின் உள்வாங்கல்களால் விடுதலைப் புலிகளின் படை அணிகளில் சிறந்த தலைமையாளர்கள், சிறந்த குறி சூட்டாளார்கள் என ஒருபக்கமும், சிறந்த சிற்பக் கலைஞன், சிறந்த கணணி இயக்குனர்கள், சிறந்த கணக்காளர்கள் என அறிவுத்திறன் சார்ந்த இன்னொரு பக்கமும் வளர்ச்சியடைந்திருந்தது.

மறுபக்கத்தில் கடற்புலிகளின் அணிகளும் புதிய போராளிகளை உள்வாங்கி பெரும் வளர்ச்சி கண்டிருந்தது. வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு தொடக்கம் பொக்கணை, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு, அளம்பில், செம்மலை, நாயாறு வரையான நீண்ட கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்களில் பலர் தங்களது பிள்ளைகளை கடற்புலி அணியில் இணைத்திருந்தார்கள். கடலோடு வாழ்ந்து பழகியதால் அவர்களுக்கு கடலில்ப் பயணிப்பதும், நீச்சல் அடிப்பதும் அத்துப்படியாக தெரிந்திருந்ததால் பெற்றோர்கள் இவர்களை விரும்பி கடற்புலிகளின் அணியில் இணைத்தார்கள். அத்துடன், கடலில் சிறீலங்காப் படையினரின் தாக்குதலில் தமது உறவுகளை இழந்திருந்த பலரும் தமது பிள்ளைகைள கடற்புலிகளில் இணைக்க முனைந்தார்கள். இவர்களில் பலர் கடற்புலிகள் அணியில் உள்வாங்கப்பட்டார்கள். இவ்வாறு இணைக்கப்பட்டவர்கள் தளபதி சூசை அவர்களின் கீழ் வளர்க்கப்பட்டார்கள்.



இதேவேளை, புதிய போராளிகளின் பயிற்சிகளின் நிறைவில், பெற்றோர் முன்னிலையில் போராளிகளை காண்பிக்கும் நடவடிக்கை பெரும் நிகழ்வுகளாக நடந்தன. அதாவது அணிவகுப்பு மரியாதைகளுடன் புதிய போராளிகள் தமது பெற்றோர்களை காண்கின்றார்கள், சந்திக்கின்றார்கள். பயிற்சியில் ஈடுபட்டதன் காரணமாக பெற்றோர்களை நீண்ட நாட்களாகக் காணாத போராளிகளுக்கு பேற்றோறர்களை அழைத்து வந்து அவர்களின் பிள்ளைகள் காண்பிக்கப்பட்டார்கள். புதிய போராளிகள் தாங்கள் திறமைகளை தாய் தந்தை உறவுகளிற்கு சொல்லி மகிழ்ந்தனர். இதனால் பெற்றோர்கள் பூரிப்படைந்தார்கள். தன்பிள்ளை பெரிய திறமைசாலி, படை நடத்துபவன், பொறுப்பாளன், கனரக துப்பாக்கி இயக்குபவன் என்று அவர்கள் பெருமிதம் அடைந்து பிள்ளைக்கு பலத்தினை ஊட்டியது. இவ்வாறுதான் அன்று அனைத்து புதிய போராளிகளுக்கும் பெற்றோர் சந்திப்புக்கள் நிகழ்ந்தேறின. புதிய போராளிகளின் இணைவினால் விடுதலைப் புலிகளின் பலம் அதிகரித்து சென்றது. கடற்புலிகளின் அதிகரிப்பினால் கடற்படையில் புதிய படை அணிகள் உருவாக்கப்படுகின்றன. தாக்குதல் அணிகளைவிட கரையோர காவல்படை என புதிய அணி உருப் பெறுகின்றது.

நிலைமை இவ்வாறிருக்கையில், எதிரியின் ஆக்கிரமிப்பில் இருந்த யாழ்குடாநாட்டில் கைக்குண்டு வீச்சும், காவலரண் தகர்ப்பும் அங்குள்ள விடுதலைப் புலிகளால் நடத்தப்படுகின்றன. இதில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் பங்கேற்று எதிரிக்கு அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். இவை யாழ்ப்பணத்தில் சிறீலங்காப் படையினருக்கு ஆத்திரம் ஊட்டும் செயல்களாக மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், எதிரி யாழ்குடாவைவிட்டு களமுனைக்கு நகர்த்தமுடியாத ஒரு இக்கட்டான நிலையினை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை விடுதலைப் புலிகளின் யாழ்குடா புலனாய்வாளர்களான பொது மக்களும் (இவர்கள் இவ்வாறான தாக்குதலுக்கும் என பயிற்றப்பட்டிருந்தவர்கள்) இணைந்தே மேற்கொண்டார்கள் என்பது இங்கு மிகவும் குறிப்பிடத் தக்கது. இந்நிலையில்தான், யாழ்குடாநாட்டில் மேலும் சில தாக்குதல்களை மேற்கொள்வதற்கென கரும்புலிகளை உள்ளடக்கிய புலனாய்வுத்துறை அணி ஒன்று வன்னியில் இருந்து கடல் வழியாக கொண்டு செல்லப்பட்டு தரையிறப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஊடுருவி சிறீலங்காப் படையினருக்கு பின்தள இழப்புக்களை ஏற்படுத்தும் முகமாகவும் சிறீலங்காப் படையினரின் கனரக நீண்ட தூர தாக்குதல்களுக்குப் பயன்படும் பீரங்கிகளின் நிலைகளைக் கண்டறிந்து அவற்றினை தகர்த்தெறியும் முகமாகவும் அதாவது சிறீலங்காப் படையினரின் பின்தளங்களில் ஆட்லறி மற்றும் மல்ரிபரல் எறிகணைகளை இயக்கவிடாமல் செய்வதன் ஊடாக படையினருக்குரிய வழங்கல் பகுதியினை தடைசெய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக தரைவழியாகவும் கடல்வழியாகவும் யாழ்குடாவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

யாழ்குடாவிற்கான கடல்வழிப் பாதையாக இருவழிகள் இருந்தன. ஒன்று வடமராட்சி கிழக்கில் இருந்து கடல்வழியாக சென்று கற்கோவளம் பகுதியில் தரை இறங்குதல். இதற்காக பயிற்றப்பட்ட அணிகள் செல்வார்கள். அதாவது கடலில் ஒரு கடல்மைல் தூரத்திற்கு கூடுதலாக நீந்தக்கூடியவர்கள் தான் இந்த வழியினூடாகச் செல்வார்கள். வடமராட்சி கிழக்கு கடல் மற்றும் நாகர் கோவில் கடற்பகுதிகளில் இருந்து சிறிய படகுகள் விரைந்து சென்று கற்கோவளத்தை அண்டிய கடற் பகுதியில் இவர்களை இறக்கிவிடுவார்கள். இவர்கள் கடலில் நீந்தியவாறு சிறீலங்காப் படையினரின் நடமாட்டங்களை அவதானித்து கரையேற வேண்டும்.

மற்றையது, யாழ்ப்பாணத்தில் அடுத்த பகுதியாக உள்ள கிளாலி கடல் வழியாக குருநகர், பாசையூர் பகுதிகளில் சென்று தரை இறங்குதல். அங்கு வரும் கடல்தொழிலாளர்கள் சிலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினாலேயே இந்த நடவடிக்கை இலகுவாக இருக்கும் என்பதால், அவர்களுடனான தொடர்புகள் பேணப்பட்டு கடல்வழியிலான பயணம் இடம்பெறும். கடலின் இடையில் வரும் அவர்களிடம் போராளிகள் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் தரையில் இறக்கிவிட்ட நிகழ்வுகளும் நடந்தேறியுள்ளன.

இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு சென்று, தமிழ் மக்கள் நடமாடத் தடைவிதிக்கப்பட்டுள்ள சிறீலங்காப் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இடங்களுக்கு எல்லாம் சென்று, அங்கு தகவல்களைத் திரட்டியது மட்டுமல்ல, படையினரின் உணவினையே உண்டு படை நிலைகளுக்குள்ளே பதுங்கி வாழ்ந்த மாபெரும் வரலாற்று வீரன்தான் கரும்புலி லெப்.கேணல் பூட்டோ. ஆனாலும், கரும்புலி பூட்டோ உண்பதற்கு உணவின்றியியும் முகாம்களுக்குள் நடமாடி இலக்குகளை சரியாக இனங்கண்டு சொல்லியிருக்கிறான்.

யாழ்ப்பாணத்திற்கு சென்று, தமிழ் மக்கள் நடமாடத் தடைவிதிக்கப்பட்டுள்ள சிறீலங்காப் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இடங்களுக்கு எல்லாம் சென்று, அங்கு தகவல்களைத் திரட்டியது மட்டுமல்ல, படையினரின் உணவினையே உண்டு படை நிலைகளுக்குள்ளே பதுங்கி வாழ்ந்த மாபெரும் வரலாற்று வீரன்தான் கரும்புலி லெப்.கேணல் பூட்டோ. ஆனாலும், கரும்புலி பூட்டோ உண்பதற்கு உணவின்றியியும் முகாம்களுக்குள் நடமாடி இலக்குகளை சரியாக இனங்கண்டு சொல்லியிருக்கிறான்.

இதேவேளை, யாழ்குடாவில் இவ்வாறு சென்றிருந்த போராளிகளை மக்களும் பாராமரித்தார்கள். அவ்வாறான மக்கள் அன்றைய நாளில் இருந்தார்கள் என்றால் அது பெருமிதம்தான். ஏன்னென்றால் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் மக்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் விடுதலை ஆதரவாளர்களும் இருந்தார்கள். அவர்கள் ஊடாக மேலும் பல விடுதலை ஆதரவாளர்களுகம் கைதாகின்றார்கள். இவ்வாறு அன்று யாழ்ப்பாணத்தில் வீடுகளில் நின்ற விடுதலைப் புலிகளை எவ்வாறாவுதல் கைது செய்துவிட படையினர் முற்படுகின்றவேளை, தன்னைதானே சுட்டும், விடுதலைப் புலிகளின் கொள்கை மரபிற்கு அமைய நஞ்சினை கடித்தும் வீரச்சாவடையும் நிகழ்வுகள் பல நடந்தேறின.

இவ்வாறுதான் லெப்.கேணல் பூட்டோ வீடொன்றில் தங்கி இருந்தவேளை, அந்த வீட்டை சிறீலங்காப் படையினர் சுற்றிவளைத்த முற்றுகையிட்டனர். படையினரின் முற்றுகையை உடைக்க முடியாது என்பதை அந்தக் கரும்புலிப் போராளி உணர்ந்துகொண்டிருந்தான். தான் உயிருடன் பிடிபட்டால் யாழ்குடாவில் செயற்படும் போராளிகள் பலருக்கு ஆபத்து நேரும் என்பதை பூட்டோ அறிந்திருந்தான். எனவே, தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டினை வெடிக்கவைத்து தன்னைதானே அழித்து விடுதலைக்கு வித்தானான் அந்தக் கரும்புலி. இவ்வாறன தெய்வீக பிறவிகள் தான் அன்று யாழ்ப்பாணத்தில் நின்ற கரும்புலி அணிகள். பூட்டோவின் இழப்பினை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் கரும்புலித் தாக்குதல் அணிகளின் வேவு நடவடிக்கைகள் சற்று மந்தமடைகின்றன.

இதனால், நாகர்கோவில் கண்டல் பகுதிகள் ஊடாக விடுதலைப் புலிகளின் மேலும் சில வேவு அணிகள் சிறீலாங்காப்படை கட்டுப்பாட்டுக்குள் நுழைகின்றார்கள். இதில் தளபதி தீபன் அவர்களின் வேவு அணிகள் சிறப்புற அவர்களது நடவடிக்கையில் ஈடுபடுகின்றது. இந்நிலையில்தான் லெப்.கேணல் தியாகராஜன் தலைமையில் ஓர் அணி அதாவது புலனாய்வுத்துறை அணி அங்கு களமிறங்குகின்றார்கள்.

ரணில் அரசுடன் செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின் ஏற்பட்ட அமைதிக் காலத்தில் லெப்.கேணல் தியாகராஜன் யாழ்ப்பாணத்தில் நின்று செயற்பட்டவர். அரசியல் வேலைத்திட்டங்களுடன் தன்னுடைய வேவுப் பணிகளையும் அங்கு திறம்படச் செய்துகொண்டிருந்தார். குறிப்பாக விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள், சிறீலங்கா துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து இவர் தனது வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். தனது நடவடிக்கைகளுக்காக இவர் அதிகமாக கரவெட்டி, நெல்லியடி பகுதிகளில்தான் நிலைகொண்டிருந்து செயற்பட்டுக் கொண்டிருந்தார். அதனால், இப்பிரதேசத்தின் பகுதிகள் இவருக்கு அத்துப்படியாகத் தெரிந்திருந்தன. பின்னர் வன்னி திரும்பியிருந்த தியாகராஜன், போர் இடம் பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் மீண்டும் படையினர் மீதான தாக்குதல் நடவ்டிக்கைகளுக்காகவும், புலனாய்வுச் செயற்பாடுகளுக்காகவும் யாழில் தனது அணியினுடன் சென்று தரையிறங்கியிருந்தார்.

யாழில், சற்று தொய்வடைந்திருந்த தாக்குதல்கள் தியாகராஜனின் வருகைக்குப் பின்னர் மீண்டும் புத்துயிர் பெறத்தொடங்கின. மீண்டும் சிறீலங்காப் படையினரின் முகாம்கள், ஊர்திகள், ரோந்து அணிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்தன. நாள்தோறும் யாழில் படையினர் மீது அங்கு தாக்குதல், இங்கு தாக்குதல் என வெளிவந்த செய்திகளுக்குப் பின்னால் தியாகராஜனின் கைவரிசை இருந்தது. அதிகரித்த இந்தக் தாக்குதல்களால் திக்குமுக்காடிய சிறீலங்காப் படையினர், தங்களைப் பாதுகாக்க ஈ.பி.டி.பி உட்பட தமது துணை இராணுவக் குழுக்களை களத்தில் இறக்கினார்கள்.

சிறீலங்கா துணை இராணுவ ஒட்டுக் குழுக்கள், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுபவர்களையும், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதுபவர்களையும் படுகொலை செய்யவும், கடத்தவும், கைது செய்யவும், அச்சுறுத்தவும் தொடங்கினார்கள். நாளும் படுகொலை, கடத்தல்கள் எனும் அளவிற்கு இது மிக மோசமான கட்டத்தை அடைந்தது. குடும்பமாகவும் பலர் இந்தப் படுகொலைக்கு பலியானார்கள். ஒட்டுக் குழுக்களின் இந்நடவடிக்கையால் மக்கள் மத்தியில் ஒரு அச்சம் ஏற்படத்தொடங்கியது. இராணுவ நகர்வுகள் தொடர்பாக மக்கள் விடுதலைப் புலிகளின் புலனாய்வாளர்களுக்கு வழங்கிய தகவல்களும் இதனால் குறைவடையத் தொடங்கின.

இதனால், புலனாய்வுப் போராளிகளே களத்தில் இறங்கி தகவல்களை சேகரிக்கவும் நடவடிக்கையில் ஈடுபடவும்வேண்டிய நிலை எழுந்தது. வேவு நடவடிக்கைகளை மக்களோடு மக்களாக இணைந்திருந்தே மேற்கொள்ளவேண்டிய நிலையில், படையினர் மற்றும் ஒட்டுக்குழுவினரால் அடையாளம் காணப்பட்டு போராளிகள் இழப்புக்களைச் சந்திக்கத் தொடங்கினார்கள்.

மேஜர் புவியரசன் நெல்லியடி கொற்றாவத்தை என்னும் இடத்தில் வைத்து சிறீலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்படுகின்றார். மேஜர் கவியரசன், கப்டன் வினோத் ஆகிய போராளிகளும் தொடர்ச்சியாக நடந்த சம்பவங்களில் வீரச்சாவடைகின்றார்கள். இவ்வாறு போராளிகளின் இழப்புக்களால் யாழில் நடவடிக்கைகள் மீண்டும் மந்த நிலையை அடைகின்றது. இந்நிலையில், தாக்குதல் நடவடிக்கைகளைவிட வேவுத் தரவுகளே அப்போதைய நிலையில் அவசியமாகக் கருதப்பட்டதால், தாக்குதல் நடவடிக்கைகளை தியாகராஜன் கைவிட்டு, எஞ்சியிருந்த தனது ஒரு சில போராளிகளுடன் வேவு நடவடிக்கையில் இறங்குகின்றார்.

மக்களோடு மக்களாக வாழ்ந்து வேவுத் தரவுகளை சேகரிக்கின்றார். அத்துடன், சிறீலங்காப் படை அதிகாரிகள் தங்கியிருக்கும் முகாம்கள், கனரக ஆயுத வெடிபொருள் களஞ்சியம், படை முகாம் நிலைகள், ஆட்லறி தளங்கள் என்பனவற்றை தனது வேவு நடவடிக்கை மூலம் அடையாளம் கண்டு பொறுப்பானவர்களுக்கு தகவல்களை வழங்குகின்றார்.

யாழ்குடாவிற்கு மேலும் அதிகளவான வேவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில், அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வேவுப்படை அணிகள் தரையிறக்கப்படுகின்றன. தீவுப் பகுதிகள் ஊடாகவும் மற்றும் பருத்தித்துறை பகுதி ஊடாகவும் யாழப்பாணத்தில் கடல்வழியாக தரை இறங்கிய அவர்கள் ஆங்காங்கே நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

இதன்போது புலனாய்வுத்துறை அணியின் போராளி ஒருவர் சிறீலங்காப் படையினருக்கு எதிரான நடவடிக்கைக்காக தன்னை தயார்படுத்தி செல்லும் வேளை, படையினரின் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டு சயனைட் அருந்துவதற்கான கால அவகாசம்கூட இல்லாதளவிற்கு உயிருடன் பிடிபடுகின்றார். கடுமையான சித்திரவதை விசாரணைகளால் இவரிடம் இருந்து சில வெடிபொருட்கள் வைத்திருக்கும் இடங்களையும், சில ஆதரவாளர்களையும் படையினர் இனம்கண்டுகொள்கின்றார்கள். இது யாழ்குடாவின் நடவடிக்கையில் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்துகின்றது.

இதனால், அடுத்தகட்ட முடிவொன்றை விடுதலைப் புலிகள் அவசரமாக எடுக்கின்றார்கள். அதாவது படையினரிடம் எதிர்பாராமல் அகப்பட்டுக்கொண்டால் விடுதலைப் புலிகளின் கொள்கைக்கு அமைய சயனைட் அருந்துவதற்கு பதிலாக வெடிகுண்டை வெடிக்க வைத்து வீரச்சாவைத் தழுவிக்கொள்வது. இதன்மூலம் தானும் உயிரிழப்பதுடன், எதிரிக்கும் சேதங்களை ஏற்படுத்தமுடியும். அத்துடன், குப்பியைக் கடித்து வீரச்சாவைத் தழுவினாலும் இதனால், மேலும் சில நெருக்கடிகள் இருந்தன. குப்பியைக் கடித்து வீரச்சாவைத் தழுவும் போராளிகளிடம் இருக்கும் சில தடயங்கள் மற்றும் சில தரவுகளை வைத்துக்கொண்டு ஆதரவாளர்களை இனம் கண்டுகொள்கின்ற, விடுதலைப் புலிகளின் அடுத்த கட்ட செயற்பாடுகள் குறித்து ஆராய்கின்ற நடவடிக்கையில் சிறீலங்காப் படையினர் ஈடுபட்ட நிகழ்வுகளும் நடந்தேறியுள்ளன.



முள்ளிவாய்க்காலில் இறுதி வரை நின்று போராடிய போராளியின் அனுபவப் பதிவு இது. பாதுகாப்பான தளம் ஒன்றை இவர் சென்றடையும் வரை இவரது விபரங்களை தவிர்த்துக்கொள்கின்றோம்.

யாழ்குடாவில் நிலைகொண்டிருந்த போராளிகளுக்கு வழங்கப்பட்ட புதிய உத்தரவு



இதனால், யாழ்குடாவில் நடவடிக்கைகளுக்கு செல்பவாகளுக்கென உடலோடு பொருத்தப்படும் ஜக்கற் (வெடிகுண்டு) புதிதாக வடிவமைக்கப்படுகின்றது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் நிற்கும் அனைத்துப் போராளிகளுக்கும், இதுதொடர்பாக புலனாய்வுத்துறையினரின் தலைமைப்பீடத்தினால் கட்டளையும் வழங்கப்படுகின்றது. எக்காரணம் கொண்டும் எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக்கூடாது. உங்களை அழித்துக்கொள்ளவேண்டிய அவசியம் எழுந்தால், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரண்டு எதிரியையாவது அழிக்கவேண்டும் என்றும் அவர்களுக்கு கட்டளை வழங்கப்படுகின்றது. இதனையடுத்து, யாழ்ப்பாணத்தில் நடவடிக்கையில் நின்ற, புதிதாகச் செல்லும் அனைத்து போராளிகளுக்கும் ஜக்கற் வழங்கப்படுகின்றது

இவ்வாறு இறுக்கமான காலகட்டத்தில் இறுக்கமான நிலமையில்தான் யாழ்ப்பாணத்தில் புலனாய்வுப் போராளிகளின் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், கரவெட்டி அரசடிப் பகுதியில் தியாகராஜனை அடையாளம் கண்டுகொண்ட சிறீலங்காப் படையுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுவினர் அவர் மீது துப்பாக்கிசூடு நடத்துகின்றார்கள். இதன்போது லெப்.கேணல் தியாகராஜன் வீரச்சாவைத் தழுவிக்கொள்கின்றார்.

இதேவேளை, போராளிகள் இருக்கும் இடமொன்றை அறிந்துகொண்ட சிறீலங்காப் படையினர், மிக இரகசியமாக அப்பகுதியைச் சுற்றிவளைத்து அவர்களை உயிருடன் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருந்தனர். இதன்போது, நிலைமையை உணர்ந்துகொண்ட போராளிகள், மிகவும் பொறுமையோடு தங்கள் இலக்குக்குள் படையினர் வரும்வரை காத்திருந்து, தங்களிடம் இருந்த குண்டுகளை வெடிக்க வைத்து தங்களைத் தாங்களே அழித்ததுடன், கைது செய்யவந்த படையினர் சிலரையும் உயிரிழக்கவும் வைக்கின்றார்கள். தங்களையும் அழித்து, தங்களிடம் இருந்த வெடிபொருட்கள், மற்றும் வேவுத் தரவுகளையும் அழித்து எதிரிக்கும் அழிவை ஏற்படுத்தி, இந்த மண்ணிற்காக ஒரு அற்புதமான தியாகத்தைப் புரிந்துகொண்டார்கள் அந்தப் போராளிகள்.

இதேவேளை, படையினரிடம் அகப்படும் நிலையில், அவர்கள் முன் தாங்கள் கட்டியிருந்த ஜக்கற் குண்டினை வெடிக்க வைத்து வீரச்சாவடையும் சம்பவங்களும் இதனால், படையினர் இழப்புக்களைச் சந்திக்கின்ற சம்பவங்களும் அதிகரிக்கத் தொடங்கின. இவை சிறீலங்காப் படையினர் மத்தியில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் அத்துடன், பல புதிய சிக்கல்களையும் இது ஏற்படுத்தியிருந்தது. தங்களையும் அழித்து எதிரிக்கும் அழிவை ஏற்படுத்தும் ஒரு கரும்புலிகள் அணிபோன்று யாழ்குடாவில் நிலைகொண்டிருந்த போராளிகள் செயற்பட்டுக் கொண்டிருந்தது, சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்வதற்கு படையினர் அஞ்சுகின்ற அளவிற்கு நிலைமையை கொண்டுசென்றிருந்தது.

(தொடரும்...)

போராளிகள் இருக்கும் இடமொன்றை அறிந்துகொண்ட சிறீலங்காப் படையினர், மிக இரகசியமாக அப்பகுதியைச் சுற்றிவளைத்து அவர்களை உயிருடன் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருந்தனர். இதன்போது, நிலைமையை உணர்ந்துகொண்ட போராளிகள், மிகவும் பொறுமையோடு தங்கள் இலக்குக்குள் படையினர் வரும்வரை காத்திருந்து, தங்களிடம் இருந்த குண்டுகளை வெடிக்க வைத்து தங்களைத் தாங்களே அழித்ததுடன், கைது செய்யவந்த படையினர் சிலரையும் உயிரிழக்கவும் வைக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்

தமிழரின் போராட்டத்திற்கு முடிவுகட்ட முனையும் சிங்களமும் சர்வதேசமும்

இலங்கையில் தற்பொழுது சூடுபிடித்துள்ள ஜனாதிபதி தேர்தல்களம் வன்முறைகள், வாக்குறுதிகள், குழறுபடியான அறிக்கைகள், சர்வதேச நாடுகளின் மறைமுக அழுத்தங்கள் என பலவாறான விடயங்களால் வெற்றி குறித்து தீர்மானத்துக்கு வரமுடியாத குழப்பநிலையை உருவாக்கியிருக்கின்றது.

இன்னும் சில நாட்களில் நடந்தேறப்போகும் தேர்தலில் வெற்றி யாருக்கு என தீர்மானிப்பதில் வடக்கு கிழக்கு தமிழர்களின் வாக்குகளே பெருமளவு செல்வாக்கு செலுத்துகின்றன. அத்தோடு மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளும் இவ் விடயத்தில் அடங்கும்.

தமிழர்களின் வாக்குகளில் பெரும்பாலானவை பொன்சேகாவுக்கே கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். பொன்சேகாதான் வெல்லவேண்டும் என்பதற்காக இல்லாமல் எப்படியாவது மகிந்தவை தோற்கடித்துவிட வேண்டுமென்ற காட்டமான எண்ணமாகவே பொன்சேகாவுக்கான இவர்களின் ஆதரவு அமையும் என்பதே உண்மை.

இது இவ்வாறிருக்க, தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமைந்தாலும்... அதில் யார் வெற்றி பெற்றாலும்... அதன் பின் தமிழர்களின் பிரச்சனை தொடர்பான விடயங்கள் எவ்வாறு கையாளப்படும் என்பது குறித்து நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். மகிந்த மீண்டும் ஜனாதிபதியானாலும், சரத்பொன்சேகா புதிதாக ஆட்சிபீடம் ஏறினாலும் அவர்களினதும் அவர்களின் பின்னாலுள்ள சர்வதேச சக்திகளினதும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படியே தமிழர் பிரச்சினை கையாளப்பட இருக்கின்றது. இது எந்தளவுக்கு தமிழருக்கு சார்பானதாகவும் நியாயமானதுமாகவும் அமையுமென்பது மிகவும் சந்தேகத்துக்குரியதே.

தமிழர்களின் பேரம்பேசும் வலுவாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கமும், ஆயுதப் போராட்டமும் (தற்காலிகமாக) இல்லையென்று ஆனநிலையில் தமிழர்களுக்கான நியாயமான தீர்வை வழங்குவதற்கு சிங்கள வல்லாதிக்கம் இணங்கப் போவதில்லை. தனிநாட்டுக் கோரிக்கையுடன் போராடிய தமிழர்களுக்கு ஆகக்குறைந்தது தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை உள்ளடக்கிய சமஷ்டி முறைமையிலான சுயாட்சி தீர்வைத்தன்னும் கொடுப்பதற்கு சிங்கள இனவாதம் உடன்படாது.

தமிழர்களின் வாக்குகளிலேயே தமது வெற்றி தங்கியுள்ளது என்று தெரிந்திருந்தும், தாம் ஜனாதிபதியானால் தமிழர்களுக்கு அவ்வாறான சமஷ்டி முறை சுயாட்சி தீர்வொன்றை அளிப்பதாக 'பொய்க்கேனும்' ஒரு வாக்குறுதியை கொடுப்பதற்கு துணியவில்லையென்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம். சிங்கள தேசத்திடமிருந்து தமிழருக்கான நியாயமான தீர்வு எப்பொழுதுமே கிடைக்கப்போவதில்லை என்பதனை தமிழர்கள் கடந்தகால வரலாறுகளின் மூலம் நன்கு பட்டறிந்துள்ளார்கள். இருப்பினும், சர்வதேச ஆதரவுகளினைத் திரட்டி அதன்மூலம் தமக்கான நியாயமான தீர்வினை பெற்றுக் கொள்ளலாம் என்ற தளராத நம்பிக்கையுடன் தமிழினம் தொடர்ந்தும் போராடி வருகின்றது.

ஆனால், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் பின்னடைவை சந்தித்துள்ள இந்த கால இடைவெளியினை தகுந்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தினை வலுவிழக்கச் செய்யும் திரைமறைவு வேலைகளில் சர்வதேசம் ஈடுபட ஆரம்பித்துள்ளது. சர்வதேசத்தினைப் பொறுத்தவரையில், தமது வல்லாதிக்க சுயநலன்களுக்கு ஏற்றவாறாக தமக்கு எப்பொழுதுமே சாதகமாக இருக்கக் கூடியவாறான ஒரு ஆட்சி இலங்கை தேசத்தில் அமைந்தால் போதுமானது என்ற சுயநல நோக்கத்துடனேயே செயற்படுகின்றது. தமிழர்களின் அபிலாசைகள், நியாயமான தீர்வு, சுதந்திரமான வாழ்க்கை என்பதெல்லாம் சர்வதேச நாடுகளினைப் பொறுத்தவரையில் இரண்டாம்பட்சம்தான். தேர்தல் நெருங்கும் சமயம் பார்த்து இலங்கை அரசின்மீது தமது அழுத்தங்களினை பல்வேறு வழிகளில் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது சர்வதேசம். அவை தமிழர்மீதான அக்கறையினால் தான் என்று நாம் நினைத்தோமானால், அது எமது அறிவீனம்தான்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைகளினைப் பொறுத்தவரையில் மகிந்தவை விட சரத் பொன்சேகா இலங்கை ஜனாதிபதியானால் தமக்கு சாதகமாக இருப்பார் என்று கருதுகின்றன. சரத் பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்பட்ட விடயத்தில் கூட பல சர்வதேச நாடுகளின் மறைமுக தொடர்புகள் இருப்பதாகவே கருதப்படுகின்றது. மறுபக்கத்தில் மகிந்தவுக்கு பின்புலமாக சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான் என இன்னொரு சர்வதேசக் கூட்டணி துணை நிற்கின்றது. இவ்வாறு தற்போதைய இலங்கை அரசியலில் சர்வதேச பின்னணி செயற்பாடுகள் தொடர்கின்றன.

தேர்தலின் பின் ஆட்சிபீடமேறும் ஜனாதிபதிக்கு பிரதான கடமையாக தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைப்பதென்பதே அமையப் போகின்றது. ஆனால், ஜனாதிபதியே விரும்பினாலும் தமிழருக்கு நியாயமான தீர்வினை கொடுப்பதற்கு சிங்கள இனவாதிகள் இடங்கொடுக்கமாட்டார்கள். நிலைமை இவ்வாறிருக்க, தமிழர்களிற்கான தீர்வு என்ற பெயரில் உருப்படியில்லாத தீர்வொன்றினை முன்வைத்து அதன் மூலம் தமிழர்களினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களின் உத்வேகத்தினை குறைத்து காலப்போக்கில் விடுதலை உணர்வினையே இல்லாமற்செய்துவிடும் சாமர்த்தியத்தனமான திட்டமே வகுக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இதைவிட சிறந்த தீர்வு வேறொன்றுமில்லை என்று பாராட்டுத் தெரிவித்து அதை அங்கீகரிப்பதற்கு சிங்களத்தின் பின்னால் நிற்கும் சர்வதேச நாடுகளும் தயாராகி வருகின்றன. பெரும் இழப்புக்களைச் சந்தித்து நொடிந்து போய் சுதந்திரத்தினை,உரிமைகளை இழந்து இன்றும் அகதிகளாய் அலையும் அவலத்துடன் அல்லாடும் ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தினை கூட்டுச்சேர்ந்து அழித்தது மட்டுமல்லாமல் இப்போது அவர்களின் சுயநலன்களுக்காக தமிழர் தீர்வு விடயத்திலும் பெரும் வரலாற்றுத் தவறினை இழைப்பதற்கு சர்வதேசம் தயாராகி நிற்பது நியாயமானதா ? நீதியானதா ?

தமிழர்களின் நியாயமான போராட்டத்தினை புரிந்துகொண்டு அவர்களுக்கான தீர்வினை முன்வைப்பதற்கு சர்வதேசம் முன்வரவேண்டும். அதையும் மீறி தமிழர்களை ஏமாற்றி அவர்களின் போராட்டத்திற்கு முடிவுகட்டுவதற்காக சுயநலப்போக்குடன் சிங்களத்துடன் கைகோர்க்குமானால், அது சர்வதேசம் இழைக்கும் வரலாற்றுத் தவறாகவே அமையும் என்பதோடு மீண்டும் ஆயுதவழிப் போராட்டத்தின்மேல் தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வழிவகுப்பதாயும் அமைந்துவிடும்.

சர்வதேசத்தின் நீதியினை எதிர்பார்த்திருக்கும் தமிழர்களுக்கு சர்வதேசமும் சிங்களமும் சேர்ந்து இவ்வாறான துரோகத்தினை இழைப்பதற்கு உலகம் பூராவுமுள்ள உலகத்தமிழர்கள் அனுமதிக்கக் கூடாது. புலம்பெயர் தமிழர்களோடு தமிழகத் தமிழர்கள், மலேசியத் தமிழர்கள் என உலகம் பூராவும் பரவி வாழும் அனைத்துத் தமிழர்களும் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்து தமிழருக்கான நீதிக்காக குரல் கொடுக்க வேண்டிய தருணமிது. ஜாதி, மத, கட்சி என இன்ன பிற வேற்றுமைகளைக் களைந்து ஓரணியில் அணிதிரள்வோம்!

'நாம் தமிழர்' என்ற ஒரே கோட்பாட்டுடன் அனைத்துத் தமிழரும் ஒன்றிணைந்து குரல்கொடுப்போமானால் இந்த உலகம் அதற்கு பணிந்துதான் ஆக வேண்டும். அந்த நிலையை உருவாக்குவோம்!

- பருத்தியன் -

தமிழ் மக்களின் நலனில் பிரித்தானியா என்றும் அக்கறை

- வெண்புறா அமைப்பிடம் டேவிட் மிலிபான்ட் தெரிவிப்பு

பிரித்தானியாவில் பெருமளவு தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் நிலையில், தமிழ் மக்கள் விடயத்தில் பிரித்தானியா என்றும் அக்கறை கொண்டிருப்பதாக, பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் தெரிவித்துள்ளார்.



இலண்டன் ருற்றிங் நாடாளுமன்ற உறுப்பினரும், போக்குவரத்து அமைச்சருமான சதீக் கானின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஒன்றுகூடலில், வெண்புறா அமைப்பின் பிரதிநிதிகளிடம் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் இந்தக் கருத்தினைக் கூறியிருக்கின்றார்.

வன்னியில் சிறைப்பிடிக்கப்பட்டு முகாம்களில் வாடும் தமிழ் மக்கள் பற்றிக் கருத்துரைத்த அமைச்சர், சிறீலங்கா அரசு தமிழ் மக்களை விடுதலை செய்து வருவதாகக் கூற முற்பட்டபோது, அது வெறும் கண்துடைப்பு நடவடிக்கை எனவும், வெளிநாடுகளை ஏமாற்றவும், தேர்தலை முன்னிட்டும் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் நாடகம் எனவும், மக்களை முழுமையாக விடுவிக்கும் உண்மையான எண்ணம் சிறீலங்கா அரசுக்கு இல்லை என்றும் வெண்புறா பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரித்தானிய சனல்–4 தொலைக்காட்சி வெளியிட்ட, தமிழ் மக்களை சிறீலங்கா படையினர் சுட்டுக் கொல்லும் காணொளிக் காட்சி உண்மையானது என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சிறீலங்கா அரசு மீதான போர்க் குற்ற நடவடிக்கை பற்றியும், அதில் பிரித்தானிய அரசின் பங்கு பற்றியும் அமைச்சரிடம் வெண்புறா பிரதிநிதிகள் கேட்டபோது, அது பற்றி தமது அரசு ஆராய்ந்து வருவதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 26ஆம் நாள் நடைபெறவுள்ள சிறீலங்கா அரசுத் தலைவர் தேர்தல் பற்றி



விவாதம் எழுந்தபோது, தேர்தல் சனநாயக முறையில் நடைபெற வாய்ப்பில்லை என, வெண்புறா பிரதிநிதிகளால் பிர்த்தானிய அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாயகத்தில் பாரிய பணிகளை ஆற்றிவந்த வெண்புறா அமைப்பு, வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின் பின்னர் அங்கு பணியாற்ற முடியாத சூழல் எழுந்துள்ளமை பற்றி பிரித்தானிய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோது, பிரித்தானியாவிலும், தாயகத்திலும் வெண்புறா அமைப்பின் பணிகள் பற்றி தான் கேள்வியுற்றிருப்பதாகவும், வெகு விரைவில் தாயத்தில் பணியாற்றும் நிலை உருவாக தம்மால் இயன்ற அனைத்து உதவிகளும் செய்யப்படும் எனவும் மிலிபான்ட் கூறியிருக்கின்றார்.

போர் நடைபெற்ற காலப் பகுதியில் இலங்கை சென்றமைக்கு பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலபான்டிற்கு நன்றி தெரிவித்த வெண்புறா அமைப்பினர், தமிழ் மக்கள் விடயத்தில் பிரித்தானிய அரசு மேலும் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டியதன் கடப்பாடு பற்றி வலியுறுத்தியிருக்கின்றனர்.

வெண்புறா அமைப்பின் ஐரோப்பிய பொறுப்பாளர் மருத்தவர் என்.எஸ்.மூர்த்தி தலைமையில் வெண்புறா பிரதிநிதிகள் மேற்கொண்ட இந்தச் சந்திப்பில், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்டுடன், போக்குவரத்து அமைச்சர் சதீக் கான் (Sadiq Khan), நாடாளுமன்ற உறுப்பினர் சியோபெயன் மக்டொனா (Siobhain McDonagh), மற்றும் லண்டன் முன்னாள் நகரபிதா கென் லிவிங்ஸ்ரன் (Ken Livingstone) ஆகியோருடனும் தமிழ் மக்களின் நிலை பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் பொதுச் செயலர், திரு ச.வி.கிருபாகரன் அவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள், மற்றும் மனித உரிமை விடயங்களில் தமிழ் மக்களின் செயற்பாடுகள் குறித்து eelamenews.com இணையதளத்திற்கு வழங்கிய நேர்காணலை, ஈழமுரசு வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.



சிறீலங்கா மீதான போர்க்குற்ற விசாரணைகளில்

தமிழர்கள் பங்கேற்பது பாதிப்பையே ஏற்படுத்தும்

கேள்வி:- சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான வலுவான நடவடிக்கைகளை அனைத்துலக சமூகம் மேற்கொள்ளத் தொடங்கியிருப்பது போன்று அவற்றின் அண்மைய நடவடிக்கைகள் காணப்படுகின்றன. மனித உரிமையாளராக, இவற்றின் சாத்தியப்பாடுகள் குறித்து விளக்க முடியுமா?

பதில்:- ஒரு நாட்டினுடைய மனித உரிமை மீறல்கள் அல்லது நிலைமை, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு அந்த நாட்டுடைய அரசியல், பொருளாதார கொள்கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்காவின் அரச படைகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை, சர்வதேச ரீதியாக குறிப்பாக ஐ.நாவின் மனித உரிமை பிரிவு உட்பட பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நீண்ட காலமாக அவதானித்து வந்தன. விசேடமாக கடந்த இரு ஆண்டுகளாக தமிழ் மக்களுடைய மனித உரிமைகளை மிக மோசமாக மீறப்பட்ட காரணத்தினால், ஏற்கனவே அக்கறை காட்டிய அமைப்புக்கள் மீண்டும் பெரியளவில் குரல் கொடுத்ததுடன், சில மேற்கு நாடுகளும் குரல் கொடுத்தன. ஆனால் ஒரு நாட்டின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையோ அல்லது பாதுகாப்புச் சபையோ இன்று வரை சிறீலங்கா மீது எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது மிக கவலைக்குரிய விடயம். காரணம், சிறீலங்காவினுடைய அரசியல் பொருளாதார கொள்கைகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவத்தை கொண்ட சீனா, ராஷ்யாவுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஏன், சில வருடங்களுக்கு முன் பிரித்தானியா, அமெரிக்கா கூட சிறீலங்காவுடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருந்தன. அடுத்து ஐ.நா பொதுச் சபையில் மிக செல்வாக்கை கொண்டுள்ள சீனா, ராஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், கியூபா, வெனிசூலா உட்பட பல தென் அமெரிக்க, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளுடன் சிறீலங்கா நெருங்கி அரசியல் பொருளாதார உறவை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் சிறீலங்கா மீது ஒரு சர்வதேச அழுத்தத்தை கொண்டுவருவது என்பது அவ்வளவு சுலபமான விடயம் அல்ல.

கேள்வி:- மேற்படி நடவடிக்கைகளில் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் செயற்பாடுகள் குறித்து கூற முடியுமா?

பதில்:- தமிழர் மனித உரிமைகள் மையம் கடந்த இருபது ஆண்டுகளாக மனித உரிமை விடயத்தில் வேலை செய்து வந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய பட்டியல்கள் அறிக்கைகளை தயாரித்து முக்கிய புள்ளிகளுக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பிரிவுகளுக்கும் விநியோகித்து வந்துள்ளோம். நாம் தமிழ் மக்களுக்காக வேலை செய்யும் அமைப்பாக இருந்த போதிலும், எமது இருபது வருட காலத் தொடர்புகளும் செயற் திட்டங்களும் சர்வதேச ரீதியானவை. ஐ.நா. அதிகாரிகளிலிருந்து, நாட்டின் தலைவர்கள், உலகின் முக்கிய புள்ளிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், சர்வதேச சட்டத்தரணிகள், சர்வதேச ஊடகவியாலாளர்கள் என எமது உறவுகள் பரந்தவை. எமது செயற்பாடுகள் குறித்து மேலும் விபரமாக கூறுவது மிகவும் ஆபத்தான விடயம். காரணம் சிறீலங்கா அரசும் அதன் கையாட்கள் மட்டுடல்லாது, நம்மவர் சிலர் எமது அமைப்பு மீதும், அதன் பிரநிதிகள் மீதும் கொண்ட எரிச்சல், பொறாமையினால் பல தீய செயல்களை எமக்கு எதிராக செய்யுமாறு பலரை துண்டிவருகின்றனர். நாம் 'நிலவை கண்டு பரதேசம் போனவர்களோ, அல்லது ஆனாதைகளோ அல்ல' இத்துடன் இவ் வினாவுக்கான பதிலை நிறுத்தி கொள்கிறேன்.

கேள்வி:- தொடர்ந்து சிறீலங்கா அரசின் இனப்படுகொலைகளை அம்பலப்படுத்தி வரும் 'சனல் 4', 'இன்னர் சிற்றி பிரஸ்' என்பவற்றுடன் நீங்கள் தொடர்புகளைப் பேணுகிறீர்களா? இது குறித்து அக்கறைப்படும் வேறு அமைப்புக்கள் குறித்து கூற முடியுமா? அவற்றுடன் எமது தமிழ் அமைப்புக்கள் எவ்வாறு தொடர்பு கொள்வது அல்லது எப்படி இணைந்து பணியாற்றுவது என்பது குறித்து விளக்கமாகக் கூறமுடியுமா?

பதில்:- மிக நல்ல கேள்வி, இதற்கு பதில் கூறினால் எம் மீது பல பழிகள் சுமத்தப்படும். சாவதேச ரீதியாக மனித் உரிமை விடயத்தில் மிக நீண்ட காலமாக வேலை செய்யும் 'சர்வதேச மன்னிப்புச் சபை', 'மனித உரிமை கண்கணிப்பகம்' போன்ற பல அமைப்புகளுடன் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் வேலை செய்ய முடியும். முதலாவதாக, இவற்றுடன் அங்கத்தவர்களாக இணைந்து தொண்டர்களாக சேவை செய்யலாம். இரண்டவதாக, ஒரு குறிப்பிட்ட மனித உரிமை மீறல் சம்பவம் பற்றிய உண்மையான, நேர்மையான தகவல் இருப்பின், அவற்றை இவ் அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளலாம். மூன்றவதாக பணம் படைத்த அமைப்புக்கள், சர்வதேச அமைப்புகளுக்கு நன்கொடைகளை கொடுத்து அவர்களது வேலை திட்டங்களை ஊக்குவிக்கலாம்.

சபை வைப்பவர் நம்மாளாயிருந்தால், நடுச் சபை-யிலிருந்தால் என்ன, நுனிச் சபையிலிருந்தலென்ன? என்பது தமிழ் பழமொழி. அதுபோல் ஐ.நாவில் நடவடிக்கை எடுக்குமாறு தூண்டும் நாடுகள், நமது நண்பர்களாயிருக்கும் பொழுது, நாம் மனித உரிமையை மீறினலென்னா, மிக மோசமாக மீறினாலென்ன? ஒரு பிரச்சனையும் இல்லையென்பது சிறீலங்காவின் கருத்து.

கேள்வி:- சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனப்படுகொலைகளுக்கான ஆதாரங்கள் பல உள்ளன. அண்மையில் பேராசிரியர் பிலிப் அலஸ்ரனும் காணொளி ஆவணத்தை உறுதிப்படுத்தியிருந்தார். இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து மௌனம் காத்து வருவது ஏன்?

பதில்:- ஒரு நாட்டுடைய மனித உரிமை மீறல்கள் அல்லது நிலைமை, அந்த நாட்டுடைய அரசியல் பொருளாதார கொள்கைகளை பொறுத்தே ஐ.நா. அங்கத்துவ நாடுகள் பரீசீலனைக்கு எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். 'சபை வைப்பவர் நம்மாளாயிருந்தால், நடுச் சபையிலிருந்தால் என்ன நுனிச் சபையிலிருந்தலென்ன?' என்பது தமிழ் பழமொழி. அது போல் 'ஐ.நாவில் நடவடிக்கை எடுக்குமாறு தூண்டும் நாடுகள், நமது நண்பர்களாயிருக்கும் பொழுது, நாம் மனித உரிமையை மீறினலென்னா, மிக மோசமாக மீறினாலென்ன! ஒரு பிரச்சினையும் இல்லையென்பது சிறீலங்காவின் கருத்து.

கேள்வி:- ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் செயற்பாடுகள் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றன. இது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்:- ஐ.நா.வில் உள்ள பிரிவுகளின் செயற்பாடுகளை நாம் இரண்டாக பிரிக்கலாம். ஒன்று அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடு, மற்றையது அரசியல் கலப்பற்ற செயற்பாடு. இந்தவகையில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பதவியும் செயற்பாடுகளும் அரசியல் கலப்புகொண்டவை. செயலாளர் நாயகம் ஐ.நா அங்கத்துவ நாடுகளின் நட்புறவை பேண வேண்டிய முக்கிய கடமையை கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் செயலாளர் நாயகம் அங்கத்துவ நாடுகளின் சில நடவடிக்கைகளை கண்டும் காணாதவர் போல் நடிப்பது அவர்களின் இராஜதந்திரம். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மற்றும் பேராசிரியர் பிலிப் அல்ஸ்ரன் போன்றோரின் செயற்பாடுகள் அரசியல் கலப்பற்றவை. இதன் அடிப்படையில், மனித உரிமை விடயத்தில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் (தற்சமயத்தில்) திருமதி நவநீதம்பிள்ளை அவர்கள் கூறும் விடயத்திற்கே முன்னுரிமை உண்டு. அவர் சிறீலங்காவின் மனித உரிமை விடயத்தில் மிக கடுமையாக உள்ளார். இவரை பலமுறை சந்தித்து உரையாடியுள்ளேன். இவரின் அணுகுமுறையும் இராஜதந்திரமும் போற்றப்பட வேண்டியது. முன்பு இப்பதவிகளை வகித்த திருமதி மேரி றோபின்சனும், திருமதி லூயிஸ் ஆபாரும் தமது பதவிக் காலங்கள் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகிக்கொண்டவர்கள். ஏன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்களென நம்புகிறேன்.

கேள்வி:- ஐநா வின் மௌனத்தைக் கலைப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

(38ம் பக்கம் பார்க்க)



நரசிம்மன் பதில்கள்

உங்கள் கேள்விகளை கேட்பதற்கு

narasimmanpathilkal@gmail.com

யாழ். மாவட்டத்தில் ஏழு இலட்சம் பேர் வாக்களிக்க தகுதி உள்ளவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளதே? யாழ் மாவட்டத்தில் எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள்?

ஆர்.மகேந்திரன் –

யாழ் மாவட்டத்தில் வாக்களிக்க தகுதி உள்ளவர்கள் ஏழு இலட்சம் என்றால் அங்குவாழும் மக்களின் எண்ணிக்கை சுமார் 21 இலட்சம் வரை இருக்க வேண்டும், அப்படியாயின் கிழக்கு மாவட்டத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்களையும் சேர்த்தால் இலங்கையில் வாழும் தமிழர்களின் புள்ளிவிபரத்தில் எங்கோ தவறு உள்ளதை சுட்டிநிற்கிறது.

கடந்த வாரம் பாரிசின் புறநகர்ப்பகுதியில் இடம்பெற்ற நாடுகடந்த அரசின் கூட்டத்தில் தமிழீழ தேசியத்தலைவர் உட்பட தளபதிகள் வீரமரணம் அடைந்து விட்டதாகவும், தாமே தற்போது தமிழர்களை வழிநடத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளனரே?

ப.சிவநேசன் – பரீஸ்

தமிழீழத் தேசியத் தலைவரின் இருப்பு என்பது சிலருக்கு இடையூறாகவே இருக்கின்றது. அதனால் அவருக்கு பால் வார்த்துவிட வேண்டும் என்பது அவர்களின் மனக்கிடை. இப்போது சில மர்மங்களை உண்மையென நம்புபவர்கள், பால் வார்க்கத் தொடங்கியுள்ளனர். அந்த வரிசையில்தான் இவர்களும். தங்களது தவறான செயற்பாடுகளுக்கு தலைவரின் இருப்பு இடையூறாக இருக்கும் என்பதற்காக இப்படியான பொய்யான கருத்துக்களை தமது ஆதரவாளர்களிடமே உண்மையாக்க பெரும் சிரமப்படுகின்றனர். பிரான்ஸ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையை களங்கப்படுத்துவதிலும், தமிழ் தேசியத்திற்கு எதிரான கருத்துக்களுமே அங்கு பரிமாறப்பட்டதாக அங்கு இருந்து வெளிவந்துள்ள தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர்கள் தங்களது செயல் திட்டங்கள் பற்றியோ, அல்லது தமது கொள்கைகள் பற்றியோ கதைக்காமல் இப்படியான கருத்துக்களை முன்வைத்தது, அங்கு சென்றிருந்த தமிழ் உணர்வாளர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கியதாகவும் தெரியவருகின்றது. இவர்கள் கூடிய இடமே தமிழ் தேசியத்திற்கு எதிரான ஒட்டுக்குழுக்கள் கூடும் இடம் என்பதுதான் இவர்களின் நோக்கத்தையும் செயற்பாட்டையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. இவர்களும் அவர்களைப் பின்தொடர்கிறார்களா என்ற ஐயப்பாட்டையும் இது வலுவடையச் செய்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை இந்தியா அவசரமாக அழைத்துள்ளதே ஏன்?

ஏ.இராசலிங்கம் – பிரித்தானியா

வன்னியில் தமிழர்கள் மீது சிறீலங்கா படைகள் மேற்கொண்ட கொலைவெறித் தாக்குதலை இந்திய மத்திய அரசு தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக இந்திய அரச பிரதிநிதிகளை சந்திப்பதற்கான சந்தர்பத்தை கேட்டு பல மாதங்கள் சென்னையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தவம் இருந்தார்கள். அப்போது உடனே அவர்களை சந்திக்க இந்தியா சந்தர்ப்பம் வழங்கியிருந்தால் பல ஆயிரம் எம் உறவுகளின் உயிர்களைக் காத்திருக்கலாம். தற்பொழுது இவர்களை அழைத்திருப்பது தமது பங்காளியான மகிந்தவிற்கு எதிராக இவர்கள் குரல் கொடுப்பதை தடுக்கும் நோக்கிலேயே. த.தே.கூ இனரை அழைத்தது மட்டுமே யாவரும் அறிந்தது. இதேவேளை நாடுகடந்த அரசின் முக்கியஸ்தர் ஒருவரும் டில்லிக்கு அழைக்கப்பட்டு, ஆலோசனை வழங்கப்பட்டு அனுப்பப்பட்டதாக இன்னொரு இரகசியத் தகவலும் இருக்கிறது.

நடிகர் விஜய் நடித்த வேட்டைக்காரன் திரைப் படத்தின் தோல்விக்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் புறக்கணித்ததும் காரணமாக உள்ளதே? சினிமாவை சினிமாவாக பார்த்தால் என்ன?

வி.கேசவன்

சினிமாவை சினிமாவாக பார்க்கலாம். ஆனால் தமிழரின் இரத்தத்தைக் குடித்த சிங்கள இனவாதிகளின் வெற்றிக்களிப்பின் பாடல் மெட்டில் பாடலை அமைத்து அந்த இனவாத பாடலை இசையமைத்த இசையமைப்பாளரை கௌரவித்ததும், புலத்திலும், தமிழகத்திலும் தமிழ் உணர்வாளர்களின் மௌனத்தை கலைத்தது. அதுவே அப் படத்தின் தோல்விக்கு முக்கிய காரணம் என்ற உண்மை வெளிவரத் தொடங்கியுள்ளது.

தமிழக முதல்வர் தான் ஓய்வு பெற உள்ளதாக அறிவித்துள்ள அதேவேளையில் அவரது மகன் அழகிரி அவர் பதவியை விட்டு விலகமாட்டார் என அறிவித்துள்ளாரே? இதில் எது உண்மை?

ஆர்.சீறி

கலைஞர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் ஸ்டாலினே முதல்வராவார் என சொல்லி உள்ளார். ஆனால் அதை ஏற்க மறுக்கும் அழகிரி, கலைஞர் இருக்கும் வரை முதல்வராக இருக்கட்டும் அதன் பின் தான்தான் முதல்வர் என்பதே அதன்பொருளாக இருக்குமோ..?

நடிகர் விஜய் நடித்த வேட்டைக்காரன் திரைப்படத்தின் தோல்விக்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் புறக்கணித்ததும் காரணமாக உள்ளதே? சினிமாவை சினிமாவாக பார்த்தால் என்ன?



ஈழப்போருக்கு உலகின் நான்கு திசைகளில் இருந்தும் தமிழ் இளைஞர்கள் செல்வார்கள்

– கவிஞர் காசி ஆனந்தன்

நடக்கப்போகும் ஈழ விடுதலைப் போரில் தமிழ்நாட்டில் இருந்தும் உலகின் நான்கு திசைகளில் இருந்தும் இளைஞர்கள் செல்வார்கள் என்று உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அவர்கள் எழுதிய கவிதை தொகுப்பு நூலினை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துகையில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுதங்கள் மிகவிரைவில் ஈழமண்ணில் முளைக்கும். ஆயுதம் தேவை என்பதை உணர்ந்த மக்களாக வதைமுகாம்களுள் உள்ள மக்கள் உணர்வுகளுடன் காணப்படுகின்றார்கள். தேவை இருந்தால் போராட்டம் தொடரும். இதுவரை தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கவில்லை. இதனால் தமிழ்மக்களின் தேவையுள்ளது. ஆகவே தேவை இருந்தால் போராட்டம் தொடரும், எமக்கு உறுதியாக தெரியும் தமிழ் மக்களின் விடுதலையினை சிங்களவர் தரப் போவதும் இல்லை. அதேவேளை தமிழர்கள் பெறாமல் விடப்போவதும் இல்லை.

இப்போது விடுதலைப் புலிகளின் இயக்கத்தை பற்றி திறனாய்வு செய்கின்றார்கள். ஆனால் ஈழமண்ணில் எதிர்காலத்தில் நடைபெறுகின்ற ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்தும் இளைஞர்கள் செல்வார்கள். உலகின் நான்கு திசைகளில் இருந்தும் தமிழ் இளைஞர்கள் செல்வார்கள். தமிழ் இளைஞர்களின் துணையுடன் ஈழ விடுதலைப் போராட்டம் மேலும் மேலும் எழும் என்பதில் உறுதியாகியுள்ளது என்றும் உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் தெரிவித்துள்ளார்.

வன்னியில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற அடிச்சுவடு இருக்கக்கூடாது

- வழக்கறிஞர் சந்திரசேகர்

வன்னியில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற அடிச்சுவடு இருக்கக் கூடாது என்ற நோக்கத்தில் சிங்களப்படைகள் வன்னியில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று தமிழக வழக்கறிஞர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். தமிழீழத் தேசியத் தலைவரின் தந்தை வேலுப்பிள்ளை அவர்களின் இறுதி வணக்க நிகழ்விற்காக தமிழகத்தில் இருந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தொல் திருமாவளவன் அவர்களுடன் சென்ற வழக்கறிஞர் சந்திரசேகர் இதனை தெரிவித்துள்ளார்.



2004ம் ஆண்டு நான் கிளிநொச்சியில் தங்கியிருந்து தாய் மண்ணினை பார்த்தேன். எல்லாம் சுத்த தமிழில் பெயர் வைக்கப்பட்டு இருந்தன. ஆனால் தற்போது பத்து மீற்றருக்கு ஒரு படையினரின் காவலரண் மற்றும் சிறீலங்காப் படைப்பிரிவுகளின் தலைமையகங்கள் நிறைந்த இடமாக கிளிநொச்சியும் அதன் சுற்றுப்புறமும் விளங்குகின்றது. மீண்டும் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்ற அச்ச உணர்வு கிளிநொச்சியில் உள்ள சிறீலங்காப் படையினரிடம் காண முடிகின்றது. இதனால்தான் கிளிநொச்சி முழுமையான படையினரின் இடமாக காணப்படுகின்றது.

அங்கு ஒரு இடத்தில் கூட தமிழ்ச் சொற்களை காணமுடியாது. மக்களை தேடி அலைவது போல அங்குள்ள கால்நடைகள் திரிகின்றன. தமிழை கொச்சைப்படுத்தவேண்டும் என்ற நோக்கிலும் தமிழன் அங்கு வாழ்ந்தான் என்ற அடிச்சுவடுகள் இருக்கக்கூடாது என்ற நோக்கத்திலும்தான் சிறீலங்காப் படையின் ஆக்கிரமிப்பு பிரதேசங்கள் காணப்படுகின்றன.

அதேவேளை தமிழ் மக்களின் நிர்வாக அலகுகள் இருந்ததற்கான அடையாளங்கள் எல்லாம் அழிக்கப்பட்ட நிலையில்தான் கிளிநொச்சி காட்சி அளிக்கின்றது. இவ்வாறன நிலைமைகள் எல்லாம் மாறி நாம் மீண்டும் கிளிநொச்சி செல்லும் போது தமிழிழீழ அரசாங்கம் அங்கு இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் வன்னி மண்ணினை விட்டு வெளியேறினோம் என்றும் வழக்கறிஞர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ள் மரக்கறி மீன் இறைச்சி வகைகளில் ஓர் புரட்சி"

சி லாண்ட் சுப்பர் மார்க்கட்

ட்டு வழங்கும் மாபெரும் அதிரடி மலிவு விற்பனை



குறிஞ்சி
வறுத்த
அரிசி மா
8Lb.
$4.99
No Limit

ரவை
10Lb.
$4.99
No Limit

Maggi
தேங்காய்ப்
பால் பவுடர்
$2.49
350g.

FIVE ROSE
கோதுமை மாவு
$12.99
20Kg.
per Bag

பிரேமி
அவித்த மாவு
$3.99
per Bag

Dana
பசுமதி அரிசி
$9.99
10Lb.
per Bag

த்திரா
வேரி
குத்தரிசி
.99
Lb.
r Bag

Nature Fresh
U-5
நண்டுப்பெட்டி
$7.99
per Box

M & M
சம்பா அரிசி
$4.99
3kg.
per Bag

Golden Temple
ஆட்டா மாவு
$9.99
per Bag
20Lb.

ம் அன்ட் ஸ்ரீல்ஸ் சந்திப்பில் வரஉள்ளது.

n M1B 5J6 Tel: 416-292-9769 Fax: 416-292-9709

அடுத்த படுகொலையில் சிறீலங்கா



தமிழினப் படுகொலையில் ஒரு கட்டத்தை நிறைவு செய்துள்ள சிறீலங்கா, தற்போது அடுத்து மொழிப் படுகொலையில் இறங்கியுள்ளது. சிறீலங்காவின் பல பகுதிகளிலும் அரச பேருந்துகள், விமான நிலையம் போன்றவற்றில் தமிழ் எழுத்து, கருத்துப் பிழைகளுடன் அறிவித்தல்களை வைத்திருக்கும் நிலையில், தற்போது ஆக்கிரமிக்கப்பட்ட வன்னி நிலப்பரப்பில் தமிழ் மொழிப் படுகொலையில் இறங்கியுள்ளது. அதன் ஒரு சாட்சிதான் இந்த விளம்பரப் பலகை.

மறக்கப்பட்டவர்கள்..?



தங்களை அகதிகளாக அங்கீகரிக்கக் கோரி இந்தோனேசியக் கடலின் மேரக் கப்பலில் தவித்துக் கொண்டிருந்த 250க்கும் மேற்பட்ட தமிழர்கள். கடும் நோய்களால் சிறார்களும், பெண்களும் பாதிக்கப்பட்டு, மாபெரும் அவலத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். உலக சமுதாயம் ஒட்டுமொத்தமாக மௌனித்துக் கிடப்பதை உலகத் தமிழர்கள் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கையில் இனியும் வாழ முடியாது என்று முடிவெடுத்து சிறிய கப்பலில் ஆஸ்திரேலியா நோக்கி பயணித்த அந்தத் தமிழர்களை, ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட்டின் உத்தரவுக்கிணங்க இந்தோனேசிய கடற்படையினர் கடந்த 11.10.2009 அன்று நடுக் கடலில் மடக்கி, மேரக் துறைமுகத்திற்குக் கொண்டு சென்றனர். அன்று முதல் இன்று வரை அந்த அப்பாவித் தமிழர்கள் கப்பலிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். அவர்களில் ஒருவர் நோய் தாக்கி உயிரையும் பறி கொடுத்து விட்டார். ஆனால் இன்னமும் உலக சமுதாயமும், அவுஸ்திரேலிய அரசும், ஐ.நா. சபையும் பாராமுகமாகவே. உள்ளன. விளைவு – கொடும் நோய்களாலும், தொற்று நோய்களாலும் பாதிக்கப்பட்டு ஏராளமான சிறார்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். சிகிச்சை பெற்றுக் கொள்ளவும் வழியில்லாமல் மாபெரும் அவலத்தில் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த 100 நாட்களாக தவித்துக் கொண்டிருக்கும் அவர்கள் குறித்து எந்த ஒரு நாடும் பரிதாபமோ, கவலையோ, பச்சாதாபமோ காட்டாமல் இருப்பது பெரும் வியப்பாகவே உள்ளது. நிறைமாத கர்ப்பிணிப் பெண், குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளிட்டோர் எந்தவித அடிப்படை வசதியும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலை இதுவரை உலகம் கண்டிராத மாபெரும் அநியாயமாகவே உள்ளது. இது ஆஸ்திரேலியா சம்பந்தப்பட்ட விடயம் என்கிறது இந்தோனேசியா. அவுஸ்திரேலியாவோ, ஐ.நா. அகதிகள் ஆணையத்தின் கையில்தான் இவர்களின் எதிர்காலம் உள்ளது என்று தட்டிக் கழிக்கிறது. பான் கி மூன் தலைமையில் இயங்கும் ஐ.நா. சபையோ இதுகுறித்து இதுவரை ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனித்துக் கொண்டிருக்கிறது.

சொறி, சிரங்கு, வயிற்றுப்போக்கு மற்றும் இன்னும் பல்வேறு நோய்த் தாக்குதல்களில் சிக்கிப் பரிதவிக்கும் அப்பாவிச் சிறார்களின் நிலையைப் பார்க்கும்போது யாருக்குமே கண்களில் இரத்தம் கசியும். கடுமையான காலநிலை சீர்கேட்டாலும் அசாதாரண கடல் அலைகளாலும் அதிகப்படியாக உருக்குலைந்து போயிருக்கும் அந்தக் கப்பலும் கூட எந்த நேரத்திலும் இவர்களைக் கைவிட்டுவிட கூடிய அபாயமும் இருக்கின்றது.

அவுஸ்திரேலியாவின் ஓசியானிக் வைக்கிங் கப்பலில் தவித்துக் கொண்டிருந்த தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கி மீட்டது போல இவர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வந்த நிலையிலும், எவரும் பாராமுகமாக இருப்பது தமிழர்களை வேதனையடையச் செய்துள்ளது. உலக சமுதாயம் இந்த அப்பாவி மக்களைக் காக்க முன்வருமா...?

மறக்க முடியுமா..?



ஒரு இனத்தையே அழித்து பெரும் படுகொலை புரிந்தபோதும், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என மனித நேயத்தோடு ஜேர்மனியின் சர்வாதிகாரி கிட்லர் சொன்னதாக வரலாறுகள் சொல்கின்றன. ஆனால், மருத்துவமனையையும் தாக்குவோம் என்று கூறியதுடன் நிற்காமல், தாக்கி அழித்த ஒரேயொரு நாடு உலகத்திலேயே சிறீலங்காவாக மட்டும்தான் இருக்கமுடியும். 02.11.2006 அன்று கிளிநொச்சி பொது மருத்துமனை மீதும், அயலிலுள்ள மக்கள் குடியிருப்புகள் மீதும் இலக்கு வைத்து சிறீலங்கா வான் படை நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். திருவையாறு கிளிநொச்சியைச் சேர்ந்த முருகேசு மார்க்கண்டு (62), முருகேசு சண்முகரத்தினம் (52), சண்முகரத்தினம் சசி (18), சண்முகரத்தினம் கிருசாந் (15), இரத்தினம் சரஸ்வதி (62) ஆகியோரே சிறீலங்காவின் மனித குலத்திற்கு எதிரான பயங்கரவாதத்திற்கு அன்றையதினம் பலியானவர்கள்.





இந்தியாவில் அதிக காலம் முதல்வராக இருந்தவர் ஜோதிபாசு

அரசு மரியாதையுடன் உடல் மருத்துவமனையில் ஒப்படைப்பு

மேற்கு வங்காள மாநில முன்னாள் முதலமைச்சரும், மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவருமான ஜோதிபாசு, கடந்த 17ம் திகதி கொல்கத்தா மருத்துவ மனையில் மரணம் அடைந்தார். 95 வயதான ஜோதி பாசு, கொல்கத்தாவை சேர்ந்த உயர் நடுத்தர பெங்காலி குடும்பத்தில் 1914ம் ஆண்டு, ஜுலை 8ம் திகதி ஜோதிபாசு பிறந்தார். தனது உடலை மருத்துவ கல்லூரி மாணவர் களின் ஆராய்ச்சிக்காக, மேற்கு வங்காள அரசுக்குச் சொந்தமான எஸ்.எஸ்.கே.எம். மருத்துவமனைக்கு தானமாக வழங்க முடிவு செய்திருந்தார். எனவே, அவரது உடலை தகனம் செய்யாமல், மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இதற்கிடையே, ஜோதிபாசுவின் கடைசி விருப்பப்படி அவரது கண்கள் தானமாக எடுக்கப்பட்டுள்ளன.



கடந்த செவ்வாய்க்கிழமை உடல் பேரணியாக எடுத்துச் செல்லப்பட்டு பல்வேறு இடங்களிலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இந்தியாவின் முக்கிய தலைவர்கள் உட்பட பெருமளவானோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள். வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையில் 30 பேர் கொண்ட பிரதி நிதிகள் குழு, வங்காள தேசத்தில் இருந்து வந்திருந்தது. அஞ்சலியின் நிறைவில், ஜோதிபாசு உடல், இராணுவத் திடம் ஒப்படைக்கப்பட்டது. சட்டசபை வளாகத்தில் இருந்து மருத்துவமனைக்கு முழு அரசு மரியாதையுடன் ஜோதிபாசு உடல் எடுத்துச் செல்லப்பட்டது. இதற்காக, முப்படைகளைச் சேர்ந்தவர்கள் பீரங்கி வண்டியில் வைத்துக் கொண்டு சென்றனர். உடலை ஒப்படைக்க முன் 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க இறுதி மரியாதை செலுத்தினர். முழு அரசு மரியாதை அளிக்கப்பட்ட முதலாவது மேற்கு வங்காள அரசியல் தலைவர் ஜோதிபாசு என்பது குறிப்பிடத்தக்கது.

1967 மற்றும் 1969 களில் மேற்கு வங்க துணை முதல்வராக பணியாற்றினார். 1977ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை முதல்வராக இருந்து மேற்குவங்க மக்களுக் காக பணியாற்றியவர். மேற்கு வங்க மாநிலத்தின் முதல் வராக தொடர்ந்து 23 ஆண்டுகள் இருந்ததன் மூலம், இந்தியாவில் அதிக காலம் முதல்வராக இருந்தவர் என்ற பெருமைக்கு உரியவரானார். ஜோதிபாசுவுக்கு ஒரு மகன் உள்ளார். அவருடைய மனைவி கமலா நான்கு ஆண்டுக ளுக்கு முன்பு மரணமடைந்தார். ஜோதிபாசுவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மேற்கு வங்க மாநில அரசு ஒரு நாள் அரசு விடுமுறை அறிவித்தது.

இதேவேளை, இந்தியாவின் மூத்த அரசியல் தலை வர்களில் முதுபெரும் தலைவர், புகழ்பெற்ற மார்க்சிய சிந்தனையாளர் தோழர் ஜோதிபாசுவின் திடீர் மறைவு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. இலண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பிய அவர், இந்தியாவில் பொதுவுடைமை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த போராட்டங்களைத் தலைமையேற்று வழிநடத்தியவர். மார்க்சிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கப் பிரிவான சிஐடியுவை உருவாக்கி வளர்த்ததில் அவருடைய பங்கு மகத்தானது. ஒரு குறிப்பிட்ட கட்சியின் தலைவராக இருந்தாலும் அனைத்துத் தரப்பினராலும்- மதிக்கத்தக்க பெருமைக்குரியவராக விளங்கினார். இரண்டுமுறை பிரதமராகக்கூடிய வாய்ப்புக் கிடைத்தபோதிலும் அதனை விரும்பியேற்காமல் மேற்குவங்கத்தின் வளர்ச்சியிலேயே அதிகம் அக்கறை காட்டினார். அதனால் தீவிர அரசியலில் இருந்தபோது எவராலும் அசைக்கமுடியாத பெரும் சக்தியாக விளங்கினார். இந்திய மண்சார்ந்த பொதுவு டைமை அரசியலுக்கு அவர்தான் முன்னோடியாக விளங்கினார். தோழர் ஜோதிபாசுவின் மறைவு இந்தியப் பொதுவுடைமை இயக்கத்திற்கு மட்டுமின்றி சனநாயக அரசியலுக்கும் பேரிழப்பாகும் என்று விடுதலைச் சிறுத் தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரி வித்துள்ளார்.

பி.பி.சி செய்தி படத்தால் சீக்கியர்கள் சீற்றம்

1984 ஒரு சீக்கிய கதை என்ற பெயரில் ஒரு செய்தி படத்தை பி.பி.சி. நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த படம், 1984ம் ஆண்டு அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் இராணுவம் நுழைந்து, பிந்தரன் வாலேயை கொன்றது வரையிலான சம்பவத்தை சித்தரிக்கிறது. இந்த படத்தில் பிந்தரன் வாலேக்கும், ஒசமா பின்லேடனுக்கும் உள்ள ஒற்றுமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இது தான் இங்கிலாந்தில் வசிக்கும் சீக்கியர்களின் கோபத்தை கிளறி உள்ளது. பிந்தரன் வாலேயை சிலர் சீக்கியர் நலனுக்காக தியாகம் செய்தவர் என்று போற்றுகின்றனர். பெரும்பாலானவர்கள் அவர் ஒரு தீவிரவாதி என்றும், சர்ச்சைக்குரிய தலைவர் என்றும் கருதுகிறார்கள். சீக்கிய கோவில்களின் தலைவர் டொக்டர் சாது சிங் கூறுகையில், இந்த செய்தி படம் பிந்தரன் வாலேயை பின்லேடன் போல சித்தரிப்பது சீக்கியர்களை புண்படுத்தி உள்ளது என்று குறிப்பிட்டார்.

செல்பேசி வெடித்து ஒருவர் பலி

மத்திய பிரதேச மாநிலம் சாத்னா மாவட்டத்தில் செல்பேசியில் பேசிக் கொண்டு இருந்த ஒருவர் அது வெடித்துச் சிதறியதில் பலியாகியுள்ளார். லவுரஹா என்ற கிராமத்தை சேர்ந்தவர், ஸ்ரீகாந்த் மல்லா (32). அவருடைய வீட்டின் அருகே நின்றபடி, செல்பேசியில் பேசிக்கொண்டிருந்துள்ளார். அப் போது திடீரென செல்பேசி வெடித்து சிதறியது. அதில் மல்லாவுக்கு பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அருகில் நின்ற மேலும் சிலரும் லேசான காயம் அடைந்தனர். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஸ்ரீகாந்த் மல்லா, பேசிக்கொண்டு இருந்த இடத்தின் மேலே உயர் அழுத்த மின்சார வயர் சென்று கொண்டு இருந்தது என்பது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்திய வாடகைத் தாய் மூலம் பிறந்த இரட்டை குழந்தைகளுக்கு தற்காலிக குடியுரிமை

ஜேர்மனி தம்பதிக்கு இந்திய வாடகைத் தாய் மூலம் பிறந்த இரட்டை குழந்தைகளுக்கு விசா வழங்க ஜெர்மனி அரசு மறுத்து விட்டது. இதனால், இந்திய குடியுரிமை அடிப்படையில் தத்து எடுத்துக் கொள்ள வேண்டுமானால் அனுமதிக்கலாம் என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது. வெளிநாட்டு பெண்கள், இந்தியாவுக்கு வந்து வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுச் செல்லும் பழக்கம் அதிகரித்து வருகிறது.



இந்த முறைப்படி, பெண்ணின் கருமுட்டையையும் கணவனின் உயி ரணுவையும் இணைத்து கருத் தரிப்பு உண்டாக்கி, வாடகைத் தாயின் கர்ப்ப பையில் அதை செலுத்தி குழந்தை பெறப்படுகிறது. இந்த நடைமுறைக்கு பல்வேறு நாடுகளில் இன்னும் சட்டப்பூர்வ அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் வாடகைத் தாய் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த ஜோன் பலாஷ், சுசானி தம்பதி குஜராத்துக்கு வந்து கிறிஸ்டி என்ற பெண்ணை வாடகைத் தாயாக அமர்த்தினர். அதன் மூலம், கிறிஸ்டிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இந்த குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வாங்கிய பிறகு கடவுச்சீட்டுப் பெற்று ஜேர்மனிக்கு அழைத்துச் செல்ல ஜோனும், சுசானியும் திட்டமிட்டனர். ஆனால், குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க மறுக்கப்பட்டது. இதை தொடர்ந்து ஜேர்மன் தம்பதிகள் குஜராத் உயர் நீதிமன்றத்தை அணுகினர். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இந்திய வாடகைத் தாய்க்கு குழந்தைகள் பிறந்து இருப்பதால் இந்தியாதான் குடியுரிமை வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால், பெற்றோர் ஜேர்மனியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது 1955ம் ஆண்டின் குடியுரிமை சட்டத்துக்கு எதிரானது என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. எனவே, குஜராத் உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு தரப்பு வழக்கறிஞர், வாடகைத் தாய் மூலம் குழந்தை பெறுவது ஜேர்மனியில் தண்டனைக்குரிய குற்றம் என்பதால் இந்திய வாடகைத் தாய் மூலம் பிறந்த குழந்தைகளுக்கு ஜேர்மனி அரசு விசா வழங்க மறுத்து இருக்கிறது. ஆனால், குழந்தைகளை தத்து எடுத்துக் கொள்ள வேண்டுமானால் அனுமதிக்க சம்மதித்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் ஜேர்மனியின் யோசனையை ஏற்று 11 மாதங்களே ஆன இரட்டை குழந்தைக ளுக்கு தற்காலிக குடியுரிமை வழங்கி தத்து எடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று கூறினார்.

ஜேர்மனி ஆடைக் கண்காட்சியை ஆக்கிரமித்த இந்திய நிறுவனங்கள்!

சர்வதேச அளவில் மிகப்பெரிய ஆடைக் கண்காட்சி என பெயர்பெற்ற ஜேர்மனி பிராங்போட்டில் நடை பெறும் ஹோம் டெக்ஸ்டைல் (world's home-textile) கண்காட்சியில் அரங்குகள் அமைப்பதில் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது. ஜேர்மனியில் ஆண்டுதோறும் ஹோம் டெக்ஸ்டைல் கண்காட்சியை ஃபிராங்பார்ட் ஜி.எம்.பி.எச் என்ற நிறுவனம் நடத்துகிறது. இந்த ஆண்டு ஹோம் டெக்ஸ்டைல் கண்காட்சி ஜேர் மனியில் நடைபெறும் 20வது கண்காட்சியாகும். இந்த ஆண்டு காட்சி அரங்குகளை அமைப்பதில் இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது. இந்திய நிறுவனங்கள் 385 அரங்குகளை அமைத்தன. 2009ல் நடந்த ஹோம் டெக்ஸ்டைல் கண்காட்சியில் இடம்பெற்ற இந்திய அரங்குகள் 356. இரண்டாவது இடத்தில் ஜேர்மனியின் அரங்குகள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை 381. மூன்றாவது இடம் சீனாவுக்கு. அதன் அரங்குகள் எண் ணிக்கை 380. பாகிஸ்தான் 193 அரங்குகளையும், துருக்கி 153 அரங்குகளையும், இத்தாலி 120 அரங்கு களையும் அமைத்தன. கண்காட்சி நடக்கும் நாடான ஜேர்மனி அரங்கங்களைவிட கூடுதலான அரங்குகளை இந்தியா அமைத்தது குறிப்பிடத் தக்கது.



கண்காட்சி கடந்த 13ம் திகதி முதல் 16ம் திகதி வரை நடந்தது. 100க்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த இலட்சக் கணக்கான பார்வையாளர்கள் இதனைப் பார்வையிட்டனர். ஜேர்மனிக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் ஆடை முதலிடத் தில் உள்ளது. மொத்த ஏற்றுமதியில் 24 வீதம் ஆடைப் பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கம்பளி, பருத்தி, செயற்கை நாரிழை, பட்டு, கச்சா பட்டு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் அரங்குகளை அமைத்திருந்தன.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அவசியமும் நாடுகடந்த அரசின் பின்னணியும்

விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி கொடுக்க மறுத்த இந்திரா காந்தி!



பேராசிரியர் தீரன்.

ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் இவர் அதிகளவில் பிரபலம் பொறாதபோதும், தமிழீழத் தேசியத்திற்காகவும், ஈழத் தமிழ் மக்களுக்காகவும் இன்றுவரை அயராது பாடுபடுபவர். 1989ம் ஆண்டளவில் பாட்டாளி மக்கள் கட்சியை (பா.ம.க) உருவாக்கி அதன் தலைமைப் பொறுப்பை வகித்த பெருமை இவரையே சாரும்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர். ராஜீவ் காந்தி கொலையின் பின்னர், தமிழகத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடு அதாவது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவதோ, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவதோ குற்றம் என்பது போன்று மக்கள் அச்சப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலை உருவாக்கப் பட்டுக்கொண்டிருந்த நிலையில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்புவது பயங்கரவாதமாக, துரோகமானதாக பார்க்கப்பட்ட நிலையில், 1992ம் ஆண்டளவில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை மூன்று நாட்கள் நடத்தி, மாநாட்டின் முடிவில் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படங்களைப் பெருமளவில் தாங்கிய பிரமாண்டமான பேரணியை நடத்தி தமிழக மக்களின் உணர்வலைகளை ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மீண்டும் திருப்புவதில் பெரும் வெற்றி கண்டவர். 1995ம், 1997ம் ஆண்டுகளிலும் இவ்வாறான மாநாடுகளை நடத்தி தமிழக மக்களின் உணர்வலைகளை ஈழத் தமிழர்கள் பக்கம் வைத்திருப்பதில் பெரும்பங்காற்றியவர்.

இதனாலேயே, 1998ல் பா.ம.கவின் தலைவர் பதவியில் இருந்து இவர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்த நிலையும் ஏற்பட்டது. ஆனாலும், ஈழத் தமிழர்களுக்கும், தனித் தமிழீழம் அமையவேண்டும் என்பதிலும் இன்னும் உறுதியோடு செயற்பட்டு வருகின்றார். அதற்காக பல நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், உறுதியோடு அதற்கான பணிகளை முன்னெடுக்கின்றார். தற்போது பசுமைத் தமிழகம் எனும் அமைப்பை உருவாக்கி விவசாயிகளுக்காக அரும்பணியாற்றி வருபவர். அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட இவரை ஈழமுரசு சந்தித்து கலந்துரையாடியது. இதன்போது தற்போது புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெறும் வட்டுக்கோட்டைத் தீர்மாணம் மீதான மீள் வாக்கெடுப்பும், அதற்கு முற்றிலும் முரணான வகையில் நகரும் நாடு கடந்த அரசின் செயற்பாடும் குறித்து தனது காரசாரமான கருத்துக்களை முன்வைத்தார். நாடு கடந்த அரசின் செயற்பாட்டுக்குப் பின்னால் பல வலிமையான கரங்கள் இருக்கின்றன என்று குற்றம்சாட்டினார். அவருடான சந்திப்பை ஒரு பேட்டி வடிவில் அல்லாமல், அதனை தொடர் கட்டுரை வடிவில் இங்கு தருகின்றோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது, 1976ல் தந்தை செல்வா உட்பட தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்றுகூடி போட்ட தீர்மானம். அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கூட அரசியல் தலைவர்கள் போட்டதற்கு ஒரு நெருக்கடி அல்லது பின்புலம் இருக்கிறது. அந்தப் பின்புலம் என்னவென்றால் சிங்கள இனவெறி அரசிற்கு எந்த மொழியில் பதில் சொன்னால் புரியுமோ? அந்தமொழியில் பதில் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் கடந்த 30 ஆண்டு காலமாக அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட நாடாளுமன்ற ஆர்ப்பாட்டங்கள் போராட்ட வடிவமென்பதெல்லாம் அந்தச் சிங்கள இனவெறி அரசிற்கு முன்னால் எடுபடமுடியாது என்ற காரணத்தின் அடிப்படையில் இனவெறி அரசிற்கு முன்னால் இளைஞர்களும், மாணவர்களும் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தனர்.

அதாவது சிங்களவனோடு இனி வாழ முடியாது. அவன் நம் இனத்தை ஒடுக்குகிறான். அதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்தி தமிழினத்தை ஒழித்துவரக்கூடிய அந்தச் சிங்களவனுக்கு அவர்கள் பாணியிலே ஆயுதத்தால் தான் பதில்சொல்லவேண்டும் என்ற அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டுமென்று சொல்லி மாணவர்களும், இளைஞர்களும் முன்வருகிறார்கள். அதற்கு அன்று மாணவராக இருந்த நம்முடைய தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுடைய முயற்சி, அவரைப்போல் வந்திருக்கக்கூடிய குழுக்களெல்லாம் அந்த முடிவிற்கு வந்து மக்களிடையே அந்தப் போராட்ட வழிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மக்களிடம் இதற்கு ஒரு பெரிய வரவேற்பிருக்கிறது.

ஏனென்றால் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள். இதற்கு இந்த அரசியல் தலைவர்களால் ஒன்றும் செய்யமுடியாதபொழுது இளைஞர்களுடைய ஆயுதப் போராட்டம்தான் அவர்களிற்கு ஒரு சரியான பதிலடியாக இருக்கமென்று கருதி, அன்று மக்கள் இளைஞர்கள் மீதும், மாணவர்கள் மீதும் ஒரு பெரிய ஈடுபாடும், ஆர்வத்தையும் காட்டினார்கள்.

நம்முடைய தேசியத் தலைவர் அவர்கள் மிகச் சிறப்பாக இந்த ஆயுதப்போராட்டத்தை வளர்த்தெடுத்துக்கொண்டு வருகின்ற அந்தக் காலகட்டத்திலேதான், மக்களிடம் அதற்கான செல்வாக்கிருந்த சூழ்நிலையில்தான் அரசியல் கட்சித் தலைவர்கள் மக்கள் விரும்பக்கூடிய இந்த தனித்தாயக தமிழீழ தனியரசு அமைப்பது ஒன்றுதான் நாம் மக்களிடம் செல்வாக்கைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கருதி 1977ல் ஒரு தீர்மானத்தை பண்ணாகம் என்ற இடத்திலே நிறைவேற்றுகிறார்கள். அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினுடைய உள்ளடக்கம் என்னவென்றால், வடக்கு – கிழக்கு மாகாண எல்லைப்பரப்புக் கொண்ட அந்த தமிழீழ எல்லைப்பரப்புப் பகுதியில் வாழக்கூடிய தனித்துவமான தமிழ்த்தேசிய இனம் தன்மானத்தோடு வாழ்வதற்கு தன்னுரிமையுடன் கூடிய ஒரு தனித் தாயக தமிழீழ தனியரசு அமைக்கப் பாடுபடவேண்டும். அதற்காக நாம் எதிர்காலத்தில் போராடவேண்டும் என்பது தான்.

அடுத்த ஆண்டு (1977ல்) பொதுத்தேர்தல் இலங்கையில் நடைபெறுகிறது. அந்தப் பொதுத் தேர்தலில் தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்துத்தான் போட்டியிடுகிறார்கள். அன்று 19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றிபெறுகிறார்கள். அதன்மூலமாக அமிர்தலிங்கத்திற்கு இலங்கையினுடைய நாடாளுமன்ற வரலாற்றிலே முதல் முறையாக எதிர்க்கட்சித் தலைவர் என்ற வாய்ப்பும் கிடைக்கிறது.

இதன்பின்னர், இந்தத் தாயகப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக 30 ஆண்டுகளுக்கு மேலாக நமது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களாலே மிகச் சிறப்பான எந்தவொரு விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் காணமுடியாத அளவிற்கு முன்னெடுக்கப்பட்டுவந்தது. ஒரு கெரில்லாப்படை தரைப்படையை மட்டும் வைத்திருக்கும். ஆனால், ஒரு நாடு எப்படி விமானப்படை, கடற்படை, தரைப்படை என முப்படைகளையும் கொண்டு இயங்குமோ அதுபோன்று, முப்படைகளையும் தன்னகத்தே கொண்டு சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஒரு சரியான பதிலடியை அவ்வப்பொழுது நம்முடைய தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரள் அவர்கள் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இந்தப் போராட்டத்திலேகூட அவர்கள் வெற்றிகளைத்தான் சந்தித்துவந்தார்கள். இந்தியாவினுடைய அமைதிப்படையை விரட்டியடிப்பதற்கு நம்முடைய தேசியத் தலைவருடைய ஆதரவைப் பெற்றுத்தான் சிறீலங்கா அவர்களை வெளியேற்ற முடிந்தது. இது வரலாறு. தங்களுக்கு நெருக்கடி வருகிற நேரத்திலே சிங்கள இனவெறி அரசானது நம்முடைய தலைவர் அவர்களையும், அவருடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால், தனியரசுக் கோரிக்கைக்காக விடுதலைப் புலிகள் எடுக்கின்ற முன்னெடுப்புக்களையெல்லாம் சிங்கள இனவெறி அரசு யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் அலட்சியப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்தப் போராட்டம் வெற்றிபெற்று விடக்கூடாது என்பதற்காக சமாதானப் பேச்சுக்களைக்கூட குழப்பியிருக்கின்றார்கள். சமாதான காலத்தில் பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்குப் பதிலாக சிறீலங்கா அரசு ஆயுதங்களை வெளிநாடுகளிலே வாங்கிக் குவிப்பதற்கும், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு புலிகள் வரவில்லை, அவர்கள் பயங்கரவாதிகள். ஆயுதத்தின்மீது பற்றுக்கொண்டவர்கள் என்றெல்லாம் வெளியுலகத்திற்கு அவதூறு பரப்புவதற்கும் பயன்படுத்தியது. சிலநேரங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறது. ஆனால் எந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையையும் அவர்கள் மதித்துச் செயற்பட்டதாக வரலாறில்லை.

அத்துடன், சிறீலங்கா எப்போதும் இந்தியாவிற்கு ஆதரவாகச் செயற்பட்டதில்லை. சிறீலங்கா எப்பொழுதுமே சீனாவிற்கு ஆதரவாகத்தான் இருந்தது. இந்தியாவின் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்தது சீனா. மண்ணை இழந்தது இந்தியா. ஆனால் ஒரு நியாயத்தின் பக்கம் நின்றும் பார்க்காமல் அல்லது பக்கத்தில் இருக்கும் நாடு என்றுகூடப் பார்க்காமல் சிறீலங்காவானது சீனாவைத்தான் ஆதரித்தது. அதேபோல் பாகிஸ்தான் போர்கள் நடைபெற்றிருக்கின்ற காலகட்டங்களிலேகூட பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும், இந்தியாவிற்கு எதிராகவும்தான் சிறீலங்கா நடந்திருக்கின்றதே தவிர, இந்தியாவினுடைய நியாயங்களை உணர்ந்து அவர்கள் இந்தியாவிற்குச் சாதகமாக நடந்ததில்லை.

இவையெல்லாவற்றையும் இந்தியாவினுடைய பிரதமராக இருந்து கவனித்துக் கொண்டிருந்த இந்திரா காந்தி சிறீலங்கா அரசாங்கத்தை தனது கட்டுக்குள்ளே வைத்திருக்க வேண்டும், சிறீலங்கா மீது ஒரு அச்சுறுத் தலை வைக்கவேண்டுமென்ற அடிப்படையில் ஒரு முடிவிற்கு வருகின்றார். அங்கிருக்கக் கூடிய விடுதலைப் போராளிகளிற்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து அதன்மூலமாக அங்கு ஒரு நெருக்கடி வந்தால், சிங்கள அரசானது இந்தியாவின் உதவியை நாடும் என்ற முடிவிற்கு வருகின்றார். ஏனென்றால் ஏற்கனவே ஜே.வி.பி பிரச்சினையின்போது இந்தியாவின் உதவியை சிறீலங்கா நாடியிருக்கின்றது. எனவே, அவ்வாறு நாடுவார்கள் என்ற அடிப்படையிலேயே போராளிகளுக்கு பயிற்சி கொடுக்கின்றார். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திரா காந்தி பயிற்சி கொடுக்க முன்வரவில்லை. ஏனைய இயக்கங்களிற்குத்தான் பயிற்சி கொடுக்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டும் தனிமைப்படுத்திவிட்டு பிற குழுக்களிற்கு இந்திய இராணுவத்தின் மூலமாக பயிற்சி கொடுக்கின்ற ஏற்பாடுகளை செய்தார்கள். அந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அப்பொழுது, தேசத்தின் குரல் என்று தேசியத் தலைவரால் பாராட்டப்பட்ட மறைந்த அன்ரன் பாலசிங்கம் போன்றவர்களால் அந்தப் பிரச்சினையானது எம்.ஜி.ஆர் அவர்களுக்கு கொண்டுசெல்லப்பட்டு, இந்தியாவினதும், இந்திய உளவுத்துறையினதும் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றது. அதன்பிறகு தான் விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கும் பயிற்சி கொடுக்கின்ற ஒரு முடிவிற்கு இந்திரா காந்தி வருகிறார். இது அப்பொழுது நடைபெற்ற ஒரு சம்பவம்.

இவையெல்லாவற்றையும் இந்தியாவினுடைய பிரதமராக இருந்து கவனித்துக் கொண்டிருந்த இந்திரா காந்தி, சிறீலங்கா அரசாங்கத்தை தனது கட்டுக்குள்ளே வைத்திருக்க வேண்டும், சிறீலங்கா மீது ஒரு அச்சுறுத்தலை வைக்கவேண்டுமென்ற அடிப்படையில் ஒரு முடிவிற்கு வருகின்றார்.

இந்திய அரசாங்கமானது போராளிக்களுக்கு பயிற்சி கொடுத்தமையானது ஒருவகையில் நன்மையாகவும் இருந்தது. இன்னொருவகையிலே அது தீமையாகவும் இருந்தது.

(அடுத்த இதழில் தொடரும்...)

வர்த்தகம் மூலதனம்

ஜே.ஜே

டாட்டாவின் விற்பனை அதிகரிப்பு

டாட்டா மோட்டார் உற்பத்தி நிறுவனம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் 74704 வாகனங்களை விற்பனை செய்துள்ளது. இது 2008 ம் ஆண்டு டிசம்பர் மாத விற்பனையைவிட 84 வீதம் அதிகமாகும்.வர்த்தக வாகனங்களின் விற்பனை 137 வீதம் (37 326) ஆலும், மகிழுந்துகளின் விற்பனை 51 வீதத்தினாலும் 2008 ம் ஆண்டு யூன் மாதம் போர்ட் நிறுவனத்திடமிருந்து 2.3 மில்லியன் டொலருக்கு வாங்கிய ஜக்குவார், லாண்டோவர் வாகனங்கள் 33 வீதம் (21 134) 2009 டிசம்பரில் விற்பனையாகியுள்ளது. இவ் விற்பனை அதிகரிப்பால் டாட்டா மோட்டார் நிறுவனத்தின் பங்கு 1.8 வீதம் (796.70 ரூபா) உயர்ந்துள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய வாகன உற்பத்தி நிறுவனமான டாட்டா நிறுவனம் உலகில் குறைந்த விலையுடைய நானோ ஏற்றும் மகிழுந்தினை கடந்த வருடம் யூலை மாதம் முதல் விற்பனை செய்து வருகின்றது. இதன் விலை ஒரு இலட்சம் இந்திய ரூபாய் (அண்ணளவாக 2000 டொலர்) 2008 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 3.47 பில்லியன் ரூபாக்களை நிகர லாபமாக பெற்ற இந்நிறுவனம் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 7.29 பில்லியன் ரூபாக்களை நிகரலாபமாகப் பெற்றுள்ளது. நானோவின் விலையைவிட குறைந்த விலையில் இந்தியச் சந்தையில் விற்பனை செய்வதற்கென பிரான் றெனோல்ட் நிறுவனம் மகிந்திர அன்ட் மகிந்திரா நிறுவனத்துடன் இணைந்து புதிய சிறிய மகிழுந்தினை உற்பத்தி செய்தி 2012 ம் ஆண்டில் விற்பனைக்குவிட உள்ளது. இவ் இரண்டு நிறுவனங்களும் இணைந்து லோகன் செடன் ஏற்றும் மகிழுந்தினை தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மூழ்கும் நிலையில் ஜப்பான் விமான நிறுவனம்

ஆசியாவின் மிகப்பெரிய விமான நிறுவனமாக ஜப்பான் விமானசேவை நிறுவனம் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குவதால் மூழ்கும் நிலையை நோக்கிச் செல்வதாக கூறப்படுகின்றது. ஜப்பான் நாட்டில் மிகப்பெரிய கூட்டு நிறுவனத்திற்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதை ஜப்பானிய மக்கள் வேதனையுடன் நோக்குகின்றனர். கடந்தவாரம் 30 ஜென்னாக இருந்த இந்நிறுவனத்தின் பங்கு 80 வீதத்தால் வீழ்ச்சி கண்டு 7 ஜென் என்ற நிலைக்கு வந்துள்ளது. இந்நிலை தொடருமானால் பங்கு ஒன்றின்விலை ஒரு ஜென்னாக வீழ்ச்சியடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என பொருளாதார வல்லுனர்களின்கணிப்பாக உள்ளது.



இவ் விமானநிறுவனத்தின் பெறுமதி 1.8 பில்லியன் டொலரில் இருந்து 200 மில்லியன் டொலர்களாக விமான சேவைச் சந்தையில் வீழ்ச்சியடையும் நிலைக்கு செல்லவதை தடுத்து நிறுத்த முடியாத நிலைக்கு செல்வதையே இது சுட்டிக்காட்டுகின்றது. 1951 ம் ஆண்டு உருவாக்கம் பெற்ற இவ் விமானசேவை நிறுவனத்திற்கு 300 பில்லியன் நிதியூட்டம் மூலம் அந்நிறுவனத்தை தக்கவைக்கும் முயற்சியில் ஜப்பான் அரசு ஈடுபட்டுள்ளது. மூழ்கும் நிலை ஏற்படுமானால் உலகில் இரண்டாவது பெரிய பொருளாதார நாடு என்ற பெருமைக்கு இழுக்கு ஏற்படும்.

கடந்த வருடம் உலக விமானசேவை நிறுவனங்களுக்கு 49 பில்லியன் டொலர் ந?டம் ஏற்பட்டுள்ளது. பயணிகளின் வீழ்ச்சி, விமானப்பொதிகளின் வீழ்ச்சி, எரிபொருள் விலைஏற்றம் என்பனவே இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. கடந்த வருடம் மசகு எண்ணையின் விலை பீப்பாய் ஒன்று 62 டொலராக இருந்தது. ஆனால் அது இந்தவருடம் 75 டொலருக்கு மேல் அதிகரிக்கும் நிலை உள்ளதால் விமான நிறுவனங்கள் எவ்வாறு இந்த சூறாவளியிலிருந்து தப்பப் போகின்றன என்பதே இன்றைய முக்கிய கேள்வியாகும்.


2009 ம் ஆண்டு ஐரோப்பிய விமான சேவை நிறுவனங்கள் 2.5 பில்லியன் டொல் இழப்பினை சந்தித்த போதும் ஆசிய விமானசேவை நிறுவனங்களின் இழப்பு 700 மில்லியன் டொலராகவே காணப்பட்டுள்ளது.

வடஅமெரிக்க விமானசேவை நிறுவனங்கள் 2 பில்லியன் டொலர் இழப்பினை எதிர்கொள்ள, லத்தீன் அமெரிக்க விமானசேவை பிராந்திய ரீதியாக இலாபம் அடைந்துள்ளது. 2009 ம் ஆண்டைவிட இவ்வருடம் 4.5 வீதத்தால் இழப்பு அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சீனாவில் கூகுள் மீது தொடரும் தாக்குதல்கள்
விசாரணை நடத்த அமெரிக்க வலியுறுத்தல்

சீனாவிலிருந்து வெளியேறப் போவதாக கூகுள் இணையத்தள நிறுவனம் அறிவித்துள்ளது. சர்வதேச அளவில் இது மிகப் பெரும் நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. காரணம், சீனாவின் மிகப் பெரிய அந்நிய முதலீட்டாளராகத் திகழ்கிறது கூகுள். ஆனால், தொடர்ந்து தங்கள் நிறுவனத்தை குறி வைத்து சைபர் தாக்குதல் தொடர்வதால் சீனாவில் தமது சேவையை தொடரமுடியாது எனக் கருதியுள்ளது கூகுள். இந்த நிறுவனம் வெளியேறும் பட்சத்தில், அதைப் பின்பற்றி வேறு சில நிறுவனங்களும் கூட வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதே வேளை, கூகுளுக்கு நேர்ந்த நிலைமையை சர்வதேச வர்த்தக சுதந்திரத்துக்கு நேர்ந்த அச்சுறுத்தலாகப் பார்க்கிறது அமெரிக்கா. இந்த விடயத்தில் உடனடி விளக்கம் தேவை என சீன அரசிடம் அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் ஹிலாரி கிளிண்டனே கேட்டுள்ளார். கூகுள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அமெரிக்கா சீனாவிடம் வலியுறுத்தியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்தான் தனது நாட்டிற்குள் கால் வைக்க கூகுளுக்கு சீனா அனுமதி வழங்கியிருந்தது. அப்போதே கூகுளுக்கு சீனா தனது கட்டுப்பாடுகள், தணிக்கை விதி முறைகளைக் கூறிவிட்டது. இவற்றுக்கு கட்டுப்பட்டால் மட்டுமே



சீனாவில் இயங்க முடியும் என்று கூறப்பட்டுவிட, அதை முழுமையாக ஒப்புக் கொண்டது கூகுள். ஆனால் உலகம் முழுக்க உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகள், சர்வாதிகாரத்துக்கு எதிரான இயக்கங்கள் கூகுளையே புளொக் (தனியான இணையத் தளம்) மற்றும் மின்னஞ்சல் சேவைக்குப் பயன்படுத்துகின்றன. கூகுள் சேவை மூலம் இந்த அமைப்புகள், தனக்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்படுவதாக நம்புகிறது சீனா. பெயரளவுக்கு சந்தை, பொருளாதாரம் பேசினாலும், தொடர்ந்து ஒரு கட்சி ஆட்சி முறை சர்வாதிகாரத்தை நிலை நாட்டி வரும் சீனாவுக்கு இது பெரும் சங்கடம். இந்த நிலையில்தான் கூகுளின் மின்னஞ்சல் சேவையான ஜி.மெயில் மற்றும் புளொக் சேவைகளை குறிவைத்துத் தாக்குதல் நடந்தது. ஆராய்ந்ததில் இதன் ஆரம்பமே சீனாதான் என்பது தெரிந்தது. எனவே இனியும் சீன கட்டுப்பாடுகளுக்கு தலை வணங்குவது சரியாக வராது என்றும், சீனாவிலிருந்து வெளியேருகிறோம் என்றும் அறிவித்துள்ளது கூகுள். கூகுளைப் போன்ற சேவையை வழங்கும் 25க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் இந்த சைபர் தொல்லைக்கு ஆளாகியுள்ளதால் அவர்களும் கூகுள் வழியில் வெளியேறக்கூடும் என்பதால், வெளியேறாது தொடர்ந்து இதனை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து ஆராய்ந்து வருகிறது கூகுள்.

இதேவேளை, அப்பிள் நிறுவனத்தின் ஐ.போனுக்குப் போட்டியாக கூகுள் நிறுவனம் தனது சொந்தத் தயாரிப்பான நெக்ஸஸ் வண் செல்பேசியை (Nexus One phone) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செல்பேசிகள் இரண்டு வகையானவை. ஒன்று குறிப்பிட்ட நிறுவனத்தின் இணைப்பைத்தான் பயன்படுத்த வேண்டும். இரண்டாண்டு ஒப்பந்த அடிப்படையில் வாங்க வேண்டும். இடையில் வேறு நிறுவனத்துக்கு மாறக்கூடாது. அடுத்த வகை செல்பேசி,



விருப்பப்பட்ட இணைப்பை தேர்வு செய்து கொள்ளலாம். இந்த செல்பேசிகள் ஒரு கணினியில் இணைய தளம் மூலம் என்னென்ன வசதிகளெல்லாம் கிடைக்குமோ அத்தனையும் இந்த நெக்ஸஸ் வண்ணில் கிடைக்கும் என்பதுதான் இதன் சிறப்பு. இதனை கூகுள் நிறுவனமே இணையதளத்தின் மூலம் நேரடியாக விற்பனை செய்கிறது. ஐ-போன் போன்ற அதி நவீன செல்பேசிகளுக்கும் இது கடும் போட்டியாக இருக்கும் என கருதப்படுகிறது.

அவதார் படத்துக்கு சீனாவில் தடை

உலகம் முழுவதும் வசூலை குவித்து வரும் அவதார் திரைப்படத்துக்கு சீன அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. இதன்படி, ஞாயிற்றுக்கிழமை முதல் 2டி படத்தை திரையிட முடியாது. 3டி அவதார் மட்டுமே திரையிடப்படும். அரசு நிறுவனமான சீனா பிலிம் குழுமம், அவதார் திரைப்படத்தை உள்நாட்டில் திரையிடுவதற்கான உரிமையைப் பெற்றுள்ளது. கடந்த 12ம் திகதி வரையில் அவதார் திரைப்பட வசூல் சீனாவில் மட்டும் 80 மில்லியன் டொலர்




களைத் தாண்டியுள்ளது. இந்நிலையில், 24ம் திகதி முதல் 2டி படத்தை திரையிடக் கூடாது என தரையரங்கு உரிமையாளர்களுக்கு சீனா பிலிம் நிறுவனம் உத்தரவிட்டுள்ளது. எனினும், 3டி மற்றும் ஐமேக்ஸ் பிரதிகளை தொடர்ந்து திரையிடலாம் என கூறியுள்ளது.

சீன அரசு, கட்டுமான நிறுவனங்களுக்கு இடம் ஒதுக்குவதற்காக நாட்டின் பல பகுதியில் உள்ள மக்களை வலுக்கட்டாயமாக வேறு இடத்துக்கு மாற்றி வருகிறது. இதை அங்குள்ள மக்கள் எதிர்த்து வருகிறார்கள். அவதார் படக் கதையும் ஏறக்குறைய இதேபோல் இருப்பதால் கிளர்ச்சி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக சீன அரசு கருதுகிறது. இந்த படத்தில் தங்களின் நிலத்தையும், கலாச்சாரத்தையும் அந்நியர்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக நவி மக்கள் போராடுவதாக காட்டப்படுகிறது. கட்டுப்பாடு விதிப்பதற்கு இதுதான் முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது. எனினும், சீனா பிலிம் குழுமம், `பயோபிக் ஆப் கன்பூசியஸ்` திரைப்படத்தை வெளியிட்டுள்ளது. தவிர, இன்னும் பல சீன திரைப்படங்களும் திரையிடப்பட்டுள்ளன. இவற்றுக்கான போட்டியை குறைப்பதற்காக அவதார் திரைப்படத்துக்கு கட்டுப்பாடுகளை விதித்திருப்பதாக கூறப்படுகிறது.

நுரையீரல்

புற்றுநோயைக் கட்டுப்படுத்த பச்சைத் தேயிலை

நுரையீரல் புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு பச்சைத் தேயிலை தேனீர் சிறந்தது என்று தாய்வானின் மருத்துவ பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. 500 இற்கும் மேற்பட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்தே தெரிய வந்துள்ளது. புகைப்பவர்களும் புகைபிடிக்காதவர்களுமாக நுரையீரல் புற்றுநோய்க்குள்ளானவர்களுக்கு தினமும் ஒரு குவளை பச்சைத் தேயிலை தேனீர் வழங்கப்பட்டுவந்தது. குறிப்பிட்ட காலத்தின் பின்னர் நோயின் தாக்கத்தை ஆய்வு செய்தபோது புகைப்பிடிப்பவர்களின் மீதான தாக்கத்தைவிட, ஏனையவர்களின் மீதான தாக்கம் குறைவான நிலையிலேயே காணப்பட்டுள்ளது. புற்றுநோயின் கலங்கள் பெருகுவதை இவ்வகைத் தேனீர் கட்டுப்படுத்துகின்றது. இவ் ஆய்வின் ஊடாக புகைத்தல் உடல் நலத்திற்கு கேடு என்ற எச்சரிக்கையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.



கமிலா சினெசிஸ் எனும் காய்ந்த இலையில் இருந்து பெறப்படும் தேனீரே இவ்வாறு கட்டுப்படுத்துகின்றது. ஆசியாவில் காணப்படும் இவ்வகைத் தேயிலையின் தேனீரை ஆசிய மக்களில் பெரும்பாலானோர் அருந்தி வருகின்றனர். ஒப்பீட்டளவில் நோக்கும் போது உலகிலேயே ஆசியாவில்தான் புற்றுநோயின் தாக்கம் குறைவாகக் காணப்படுகின்றது. அவர்கள் தமது உணவில் சின்னவெங்காயம், உள்ளி உட்பட பலவகை மூலிகைகளை சேர்ந்து உட்கொள்வதே இதற்கான முக்கிய காரணமாகும். சென்ற ஆண்டு யூலைமாதம் ஒக்ஸ்போர்டை தளமாக கொண்ட கொஷ்ரன் ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வகைத் தேனீர் மிதமான குடிபானம் என்றாலும் குறிப்பிட்ட சில புற்றுநோய்களைத் தடுக்கின்றது என்ற முடிவில் முழுமையாக உடன்பாடு இல்லை என்றும் கூறியுள்ளது.

மதபோதனைகளால் வாழும் மானுட தர்மம்

நியூயோர்க் நகரில் பகுதி நேர வாடகை மகிமூர்த்தி ஓட்டுனராக உள்ள பங்களாதேச மருத்துவ மாணவர் ஒருவர், தனது மகிமூர்த்தியில் விடப்பட்ட பணம் மற்றும் நகைகளை உரியவரின் இருப்பிடம் தேடிச் சென்று ஒப்படைத்துள்ளார். முகுல் அ ட்ய்மன் என்ற மருத்துவ மாணவனின் மகிமூர்த்தியினை வாடகைக்கு அமர்த்திய இத்தாலிய நாட்டுபெண்கள் ஆடம்பரக்கடைகளுக்குச்சென்று பலவகைப்பொருட்களை வாங்கிவிட்டு, பின் இருக்கையில் 21,000 டொலர் பணம் மற்றும் நகைகளும் அடங்கிய கைப்பையை மறதியாகவிட்டுச்



சென்றுவிட்டனர். அவர்களில் சிலர் கடவுச்சீட்டுக்கள் 72 வயதுடைய பெஸிசியா லெற்றியெறி என்ற பெண்மணியின் கைப்பையினுள், அவர்கள் தங்கியிருந்த வீட்டின் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன இருந்ததால் லோங் ஜலண்டிலுள்ள அவரது சகோதரியின் வீட்டினை அடைவதற்காக 80 கிலோ மீற்றர்தூரம் சென்று பார்த்தபோது அங்கு எவரும் இல்லை. தனது தொலைபேசி இலக்கத்துடன் சிறுகுறிப்பொன்றினையும் எழுதி வைத்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த சில நிமிடங்களில் அவர்கள் தொடர்பு கொண்டனர். மீண்டும் அவர்கள் இருப்பிடம் சென்று அக்கைப்பையைக் கொடுத்தார். உபகாரமாக அவர்கள் கொடுத்த பணத்தினை ஏற்க மறுத்ததோடு இஸ்லாமிய மதக் கோட்பாடுகளை பின்பற்றுபவன் என்ற முறையில் அதனை ஏற்கமுடியாது என்றும் கூறியுள்ளார். நேர்மை, கடின உழைப்பு என்ற தாயின் போதனையில் வாழும் அ ட்ய்மன்னின் உயர் பண்பினை அவர்கள் வெகுவாகப்பாராட்டினர். ஏழ்மையா? பேராசையா என்ற மனவுறுதிக்கு விடப்பட்ட சவாலில் வெற்றி பெற்றதை பெருமையுடன் கூறுகின்றார். அமெரிக்காவாழ், பங்களாதேசிகளின் நற்பண்பிற்கு இது முதல் உதாரணம் அல்ல. 2007ம் ஆண்டு ஒஸ்மான் சவுத்திரி எனும் சாரதி தனது மகிமூர்த்தியில் விடப்பட்ட 5,00,000 டொலர் பெறுமதியான வைரம் நிறைந்த பையினை உரியவரிடம் தேடிச் சென்று ஒப்படைத்திருந்தார். மதங்களின் வழிகாட்டலில் இருந்து மானுடம் இன்னும் முழுமையாக விலகவில்லை என்று எண்ணலாமா?

நவீன கர்ணனோ?

66 மில்லியன் டொலர்போலி நோட்டுக்களை வைத்திருந்த குற்றச் சாட்டில் லெபனான் நாட்டைச் சேர்ந்த ஒருவரை மலேசியா காவல் துறையினர் கைது செய்துள்ளனர். விடுதிப் பணிப்பெண் ஒருவருக்கு 500 டொலரினைக் கொடுத்திருந்தார். அதனை நாணய மாற்று நிலையம் ஒன்றில் மாற்ற முற்பட்டபோதே போலி நோட்டு என்பது தெரியவந்தது. காவல்துறையின் கவனத்திற்கு இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து தலைநகர் கோலாலம்பூரில் லெபனானியர் தங்கியிருந்த அறையில் சோதனை நடாத்தி, கட்டுக்கட்டாக இருந்த டொலர் நோட்டுக்களை கைப்பற்றிய காவல்துறையினருக்கு பெரும் ஆச்சரியம் காத்திருந்தது. தற்போது நடைமுறையில் இல்லாத ஒரு இலட்சம் 500 டொலர் நோட்டுக்களைப் பார்த்தபோதே ஆச்சரியம் அடைந்தனர். 1934ம் ஆண்டு ஒரு இலட்சம் டொலர் நோட்டும், 1945ம் ஆண்டு 500 டொலர் நோட்டும் சிறப்பு வெளியீடாக வெளியிட்டதாகவும், நீண்டகாலமாக அவை நடைமுறையில் இல்லையென்றும் அமெரிக்க நிதித்திணைக்களம் தெரிவித்துள்ளது. சாதாரணமாக போலி 100 டொலர் நோட்டுக்களே காணப்படுவது வழக்கம் எனத் தெரிவித்துள்ள காவல்துறையினர், குற்றம் நிரூபணமானால் 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் கூறுகின்றனர். 2005ம் ஆண்டு காரியாலயப் பொருட்கள் விற்றதில் ஏமாற்றம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் இவர்மீது குற்றம் சுமத்தி, நீதிமன்றில் பிறிதொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உரிமை கோரப்படாத அதிஸ்ரலாபப் பரிசு

கடந்த நான்கு வாரங்களாக உரிமை கோரப்படாத நிலையில் இஸ்ரேலில் அதிஸ்ரலாபப் பரிசுப்பணம் காத்திருக்கின்றது. யூத நாட்டின் மிகப்பெரும் பரிசுப்பணமான 14.3 மில்லியன் யூரோ (76 மில்லியன் செக்கெல்ஸ்) இதுவரை உரிமைகோரப்படாதமையால் அரசு மீண்டும், மீண்டும் விளம்பரம் மூலம் மக்களின் கவனத்தை தம் பக்கம் திருப்ப எடுத்த முயற்சி இதுவரை பலனளிக்கவில்லை. சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் 26ம் திகதி நடைபெற்ற குலுக்கலிற்கான வெற்றியாளரே இதுவரை இனங்காணப்படவில்லை. "மக்களே உங்கள் பைகளில் ஒருமுறை பாருங்கள்" என்ற விளம்பரம்தான் இஸ்ரேலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதுபோன்ற சம்பவம் முன்னர் இரண்டுமுறை நடைபெற்றுள்ளது. முதலாமவர் தனது அதிஸ்ரலாபச் சீட்டினை தவறவிட்டிருந்தார். மூன்று மாதங்களின் பின்னர் அதனை தனது வீட்டு அலுமாரியின் பின்புறமிருக்கக் கண்டுகொண்டார். இரண்டாமவர் ஐந்து மாதங்களின் பின்னர் அரச பெட்டகத்தில் இருந்து தனது அதிஸ்ரலாபச்சீட்டினை மீளப் பெற்றிருந்தார்.

பலதும் பத்தும்

- விநோதன் -

அரச ஊழியர்கள் தொலைக்காட்சி பார்ப்பதற்குத் தடை

அரச ஊழியர்கள் வேலை நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பதற்கு கானா அரசு தடைவிதித்துள்ளது. ஆபிரிக்க கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தற்போது அங்கோலாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இத்தடை நடைமுறைக்கு



வருவது அதிபர் ஜோன் அற்றா மில்ஸ் இற்கு பின்னடைவையே ஏற்படுத்தும். உதைபந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட கானா மக்களை அதிபரின் ஆதரவு விடயத்தில் எத்தகைய இடைவெளியை ஏற்படுத்தும் என்று உடனடியாகக் கூறிவிட முடியாது. நைஜீரியா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து ஒளிபரப்பாகும் தொடர்களைப் பார்ப்பதில் இவர்கள் பழக்கப்பட்டவர்கள். இந்நடவடிக்கை அரச நிர்வாகங்களின் துரித செயற்பாட்டிற்கு இடையூறாக இருப்பதனைக் கருத்தில் கொண்டே வேலை நேரங்களில் தொலைக்காட்சி பார்ப்பதற்கான தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது. காலை 8.30 தொடக்கம் 12.30 வரையும், அதனைத் தொடர்ந்து 13.30 தொடக்கம் 17.30 வரையும் இத்தடை நடைமுறையிலிருக்கும். ஒரு மாதத்திற்கு முன்னர் இதுபோன்ற தடையை நைஜீரியா அமுல்படுத்தியுள்ளது. நேரத்தில் தொலைக்கட்சி வைத்தியசாலை நோயாளர் விடுதி வரவேற்பறை, நோயாளர்கள் காத்திருப்பு அறை தவிர ஏனைய இடங்கள் அனைத்திலும் இத்தடை கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் என்று தகவல் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒன்பது வயதுச் சிறுமியின் சாதனை



ஜப்பானிய சிறுமி ஒருத்தி தனது சாதனையால் தொடர்ந்து இரண்டாவது வருடமாக பத்திரிகை தலைப்புச் செய்தியில் தனது பெயரினை பதிவு செய்துள்ளார். மியு ஹிறனே, இரட்டையர் கலப்பு மேசைப்பந்தாட்டத்தில் சிரேஷ்ட பிரிவில் விளையாடியதன் மூலம். குறைந்த வயதில் உள்நாட்டு சம்பியன் சுற்றில் பங்குபற்றியவர் என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இரட்டையர் கலப்பு ஆட்டத்தில் முதல் நாளும், ஒற்றையர் ஆட்டத்தில் மறுநாளும் தோல்வியுற்ற ஹிறனேயின் உயரம் 137 சென்ரிமீற்றர்மட்டுமே. தனது எட்டுவயதில் இளையோர் சுற்றில் பங்குபற்றியதன் மூலம், 1998ம் ஆண்டு அய்புக்குஹராவினால் பத்து வயதில் ஏற்படுத்தப்பட்ட சாதனை முறியடித்திருந்தார்.

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு ஆறு சென்ரி மீற்றர் உயரம் அதிகமாகியமையே, சிரேஸ்ர பிரிவில் விளையாடுவதற்கான நம்பிக்கையைக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. எதிர்காலத்தில் சிரேஸ்ர பிரிவில் தொடர்ந்தும் விளையாடி சாதனைகள் ஏற்படுத்தி பெற்றோருக்கும். நாட்டிற்கும் பெருமை சேர்ப்பேன் என்று நம்பிக்கை ஒளி முகத்தில் வெளிப்பட ஹிறனே கூறியுள்ளார்.

நைஜீரியா

கலவரத்தில் 200 பேர் பலி, 800 பேர் படுகாயம்!

நைஜீரியாவில் பிளாட்டு மாகாணத்தின் தலைநகரான ஜோஸ் நகரில் முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே இடம்பெற்ற கலவரத்தில் நூற்றுக் கணக்கான வர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய மோதல்கள் செவ்வாயன்று உச்சக்கட்டத்தை அடைந்தன. ஒருவரை ஒருவர் துப்பாக்கி, கத்தி போன்ற



வற்றால் கடுமையாகத் தாக்கி கொண்டனர். கட்டங்கள், வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டன. உடமைகள் அடித்து நொருக்கி சேதமாக்கப்பட்டன. இச்சம்பவங்களில் சுமார் 200 பேர் வரை கொல்லப்பட்டனர். 800 பேர் காயமடைந் தனர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் தெருக்களில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அவர்களின் உடல்களை இரு பிரிவினரும் தத்தமது பகுதிக்கு எடுத்து செல்கின்றனர்.



நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர அந்நாட்டு இராணு வமும் காவல்துறையும் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து நிலை மையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர தொடர்ந்து முயற்சித்தன. இருந்தும் கலவரத்தை அடக்க முடியவில்லை. இந்தக் கலவரம் புகுரு நகருக்கும் பரவியது. இதனையடுத்து, இப்பகுதிகளில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மோதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். 100-க்கும் மேற் பட்டோர் படுகாயம் அடைந்தனர். 2008ம் ஆண்டு நவம்பர் மாதம் 2 நாட்கள் கலவரம் நடந்தது. அப்போது, போர்னோ மாகாணத்தில் 800 பேர் உயிரிழந்தனர். டிசம்பரில் நடந்த மற்றுமொரு மோதலில் பாவ்சி மாகாணத்தில் 80 பேர் பலியா கியிருந்தனர். 1999ம் ஆண்டு முதல் நடந்துவரும் இவ்வாறான மதக் கலவரங்களால் மட்டும் நைஜீரியாவில் 13,500 பேர் பலியாகியுள்ளதாக அங்குள்ள மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

டுபாய்

ஐ.நா தலைமையகத்தை அமைக்க இடம் வழங்க முடிவு

2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் தலை மையகத்தை நியூயோர்க்கிலிருந்து டுபாய்க்கு மாற்றுவதற் கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபைக்கு தலைமையகம் அமைப்பதற்கான இடம் தரத் தயார் என டுபாய் அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித் துள்ளது. ஏற்கனவே இந்த வாய்ப்பு சிங்கப்பூருக்கு இருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் அமெரிக்காவில் செயல்பட அமெரிக்காவுக்கு விருப்பமில்லாத காரணத்தால் அதனை நியூயோர்க்கிலிருந்து மாற்றுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால் உலக நாடுகளின் தலைமையகமான ஐக்கிய நாடுகள் சபைக்கு உலக நாடுகள் அனைத்திற்கும் எளிதில் செல்வதற்கான இடமாக இருக்க வேண்டுமென்பது இதன் முக்கிய நோக்கமாகும். இது தொடர்பான பேச்சுவார்த்தை களுக்கு ஐ.நா அதிகாரிகளை அழைத்துள்ள டுபாய் அரசு, தலைமையகத்தை டுபாயில் அமைப்பதால் ஏற்படும் சாத கங்கள் குறித்து ஐ.நா அதிகாரிகளுக்கு தெளிவுப்படுத்த தயாரென்றும் கூறியுள்ளது.

பூகோள அமைப்பில் டுபாய்க்கு நிறைய சிறப்புகள் உண்டு. உலகத்தின் எந்த மூலையிலிருந்தும் எளிதாக சென்றடையக் கூடிய நகரம், உலகத்திலேயே மாநாடு நடத்துவதற்கான இடமாகவும் டுபாய் கருதப்படுகிறது. சர்வதேச தரத்திலான அடிப்படை வசதி வாய்ப்புகள் நிறைந்த இடமாகவும் டுபாய் கருதப்படுகிறது. கடல்வழி, விமான வழி, தரை வழி போக்குவரத்து வாய்ப்புகள் ஐக்கிய நாடுகள் சபை போன்ற எப்பொழுதும் பரபரப்பாக இயங்கும் அமைப்பிற்கு ஏற்ற இடமாக டுபாய் கருத்தில் கொள்ளப்படுகிறது.

உலக சமாதானத்திற்கும், பொருளாதார முன்னேற்றத் திற்காகவும் ஐ.நா நடத்தும் முயற்சிகளுக்கு ஆதரவு தெரி விக்கும் விதமாகத்தான் ஐ.நா வின் தலைமையகத்தை டுபாய்க்கு கொண்டுவருவதற்கான முயற்சி என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் அதிகமான தொடர் பங்களிப்பை உறுதி செய்யும் விதமாக ஐ.நா தலைமையகத்தின் இடம்மாற்றம் தங்களுக்கு உதவும் என டுபாய் அரசு அறிவித்துள்ளது.



இதற்கிடையே போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் ஐ.நா சபை அமெரிக்காவில் இருப்பதால் செலவுகள் அதிகரித்து அது அமெரிக்கா குடிமக்கள் மீது வரிச்சுமையை ஏற்படுத்துவதாக கூறியுள்ளது. இதேவேளை, ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா நாடுகளில் அதிக வசதிகள் உள்ள டுபாய்தான் எதிர்காலத்தில் ஐ.நாவின் தலைமையம் அமையச் சிறந்த இடம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

முன்னாள் தலைமை நீதிபதிக்கு ஆயுள் தண்டனை

சீனாவில் கையூட்டு (இலஞ்சம்) வாங்கியதற்காக உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில், அவருக்கு ஆயுள் தண்டனை



விதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் உச்ச நீதிமன்ற நீதி பதியாகவும் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றியவர் ஹுவாங் சுவாங்யோ (52). இவர் இப்போது ஓய்வு பெற்று விட்டார்.

இவர் பணியில் இருந்த காலத்தில் 1997ம் ஆண்டு சின்ஹுவா மாநிலம் ஸாங்ஜியாங் நீதிமன்றத்தின் தலை வராக இருந்தபோது, அரசாங்கத்துக்கு சொந்தமான 1.7 மில்லியன் பணத்தினை சுருட்டியதாகவும், 2005ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை தான் விசாரித்த வழக்குகளில் சாதகமாக தீர்ப்பு கூறுவதற்காக 3.9 மில்லியன் யுவான் (5 இலட்சத்து 74 ஆயிரம் டொலர்) அளவுக்கு கையூட்டு வாங்கியதாகவும் அவர் கைது செய்யப்பட்டார்.

இதைத்தொடர்ந்து இவர் கடந்த ஒகஸ்ட் மாதம் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். ஹெபேய் மாநிலத்தில் உள்ள லாங்பாங்க் மாநகரசபை இடை நிலை நீதிமன்றில் இவர் மீது வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின் போது குற்றத்தை நீதிபதி ஒப்புக்கொண்டார். விசாரணை முடிவில், அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு கூறப்பட்டது. அதோடு அவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டது. அவரது அரசியல் உரிமையும் ஆயுள் காலத்துக்கு பறிக்கப்பட்டது.

சீனாவில் இலஞ்ச ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 2வது உயர்ந்த அதிகாரி இவர் ஆவார். ஏற் கனவே ஷாங்காய் நகரில் கம்யூனிஸ்ட் தலைவர் சென் லியாங்யுவுக்கு ஊழல் வழக்கில் 18 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர் ஓய்வூதிய நிதியில் கையாடல் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

சீன அதிபர் ஹு ஜிண்டாவ், ஊழலை ஒழிக்கும் முயற் சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். ஆட்சியில் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஊழல் பெரும் தலைவலியாக இருப்பதால், ஊழல் புரிபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை அவர் எடுத்து வருகிறார்.

பாகிஸ்தான்

கல்வி முறையை மாற்றி அமைக்க அமெரிக்கா நிதியுதவி




பாகிஸ்தான் கல்வி முறையை மாற்றி அமைப்பதற்காக அமெரிக்கா இந்த ஆண்டு 200 மில்லியன் டொலர் களை செலவிட திட்டமிட்டுள்ளது. பாகிஸ்தானில் தீவிரவாதத்தை தோற் கடிப்பதற்கான அமெரிக்காவின் முயற் சிக்கு அந்த நாட்டு கல்வி முறை தடையாக இருப்பதால், அதை மாற்றி அமைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அந்த நாட்டு கல்விமுறை வன்முறையை பெருமைப்படுத்துவதாகவும், அதை உயர்த்தி புகழுக்குரிய செயலாக காட்டு வதாகவும் உள்ளது என்று அமெரிக்கா கருதுகிறது. இந்த போதனை முறை தான் மீண்டும் மீண்டும் தற்கொலை தாக்குதலில் தீவிரவாதிகள் ஈடுபடு வதற்கு காரணம் என்றும் அமெரிக்கா கருதுகிறது. அறிவியல், கணிதம், வரலாறு ஆகிய பாடங்கள் அந்த நாட்டில் புறக்கணிக்கப்படுவதாகவும் அமெரிக்கா கருதுகிறது. இதனால் அந்த நாட்டில் பொதுக்கல்வி முறையை புதுப்பிப்பதற்கு அமெரிக்கா திட்டமிட் டுள்ளது. இதற்காக பெரும் நிதியை செலவிடவும் முடிவு செய்துள்ளது. ஆயுதத்திற்கு செலவிடுவதைவிட இது நல்லதிட்டம்தான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதுஇவ்வாறிருக்க, பாகிஸ்தானில் பழங்குடி இன மக்கள் வசிக்கும் தெற்கு வசீரிஸ்தான் பகுதியில் உள்ள ஷாக்டோய் என்ற இடத்தில் உள்ள ஒரு வீட்டின் மீது அமெரிக்க இராணு வத்தின் ஆள் இல்லாத விமானம் ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இதில் அங்கு தங்கி இருந்த 20 பேர் பலியானார்கள். இந்த தாக்குதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதற்கு 3 நாட்களுக்கு முன்பு தான் வியாழக்கிழமை அன்று நடந்த ஏவு கணை தாக்குதலில் பாகிஸ்தான் தலீபான் அமைப்பின் தலைவர் ஹக் கிமுல்லா மசூத் பலியானதாக கூறப் பட்டது. இதை அவர் மறுத்து, தான் உயிருடன் இருப்பதாக ஒளிப்படக் காட்சி ஒன்றை வெளியிட்டார். ஆப்கா னிஸ்தானில் சி.ஐ.ஏ உளவுத்துறை யின் அலுவலகம் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்த இவர் தான் கார ணமாக இருந்தார் என்று அமெரிக்கா நம்புகிறது. அதனால் அவரை கொலை செய்யும் நோக்கத்துடன் அமெரிக்க இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. சி.ஐ.ஏ அலுவலகம் மீதான தாக்குதல் நடந்த பிறகு இது வரை 11 ஏவுகணை தாக்குதல்கள் நடந்துள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

பிரான்ஸ்

குழந்தைகளால் நேசிக்கப்பட்ட சுப்பர் நன்னி மறைவு



பிரான்சின் 'சுப்பர் நன்னி' என பலருக்கும் அறிமுக மான 'கதி சர்ராய்' கடந்த புதன்கிழமை அதிகாலை மரணமடைந்துள்ளார். பெற்றோர்களுக்கு அடங்க மறுக் கும், கடும் குழப்படிகள் செய்யும் சிறுவர்கள், குழந்தை களை அவர்களின் வீடுகளுக்கு சென்று சீர்திருத்தி பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பில் வழிகாட்டும் நடவடிக்கை மூலம் இவர் பிரபல்யமானவர். பலரது பாராட் டுக்களையும் வரவேற்பையும் பெற்றார். இவரது நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் வேளையில் 5 மில்லியன் மக்கள் அதனைப் பார்வையிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவரது குழந்தை வளர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள் பிரான்ஸ்-6 (M6) தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி பெரும் புகழ்பெற்றது.

நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இவர் அது பலனளிக்காமல் கடந்த 20ம் திகதி தனது 47வது வயதில் உயிரிழந்துள்ளார். இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். இவரது சிறப்பு நிகழ்ச்சி ஒன்று தொலைக்காட்சியில் எதிர்வரும் சனிக்கிழமை (23) இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

எகிப்து

சவுதி அரேபியாவில் பெண்களை வீட்டுவேலைக்கு அனுப்ப மறுப்பு

வளைகுடா நாடான சவுதி அரேபியாவில் வீட்டு வேலை செய்வதற்காக ஏராளமான வெளிநாட்டு பெண்கள் செல்கின்றனர். சவுதி அரேபியாவுக்கு தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளில் 4வது இடத்தில் எகிப்து உள்ளது. இந்த நிலையில், சவுதி அரேபியாவுக்கு இனிமேல் வீட்டு வேலை செய்ய பெண்களை அனுப்ப முடியாது என எகிப்து அறிவித்துள்ளது.


ரியாத் நகரில் பேட்டியளித்த, எகிப்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆயிஷா அப்தெல் ஹாதி கூறு கையில், "சமூக, கலாசார காரணங்களை முன்னிட்டு எங்கள் நாட்டு பெண்களை வீட்டு வேலைக்கு இனிமேல் சவுதிக்கு அனுப்ப மாட்டோம். வளைகுடா நாடுகளில் வீட்டு வேலை செய்யும் பெண்கள் மீது அதிக அளவில் அவமதிப்பு நிகழ்ந்து வருகிறது" என்று தெரிவித்தார்.

முன்னதாக ஆயிஷா தலைமையில் ரியாத் நகருக்கு வந்த, எகிப்து தொழிலாளர் நலத்துறை குழுவினர், சவுதி தொழிலாளர் நல துணை அமைச்சர் அப்துல் வாகித்துடன் பேச்சு நடத்தினர். தற்போது, எகிப்து நாட்டை சேர்ந்த 10 இலட்சம் பணிப்பெண்கள் சவுதியில் உள்ளனர். எகிப்தின் திடீர் முடிவால் இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளை சேர்ந்தவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தியாவை சேர்ந்த 15 இலட்சம் தொழிலாளர்கள் சவுதி யில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சவுதியில் பணியாற்றிய இந்தியப் பெண் கள் சிலர் தமது நாட்டுப் பெண்களை அங்கு வீட்டு வேலைக்கு அனுப்பவேண்டாம் என அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். மிக மோசமான பாலியல் மற்றும் அவ மதிப்புக்களுக்கு அங்கு வரும் பெண்கள் உள்ளாவதாக வும், இதனால், இந்தியப் பெண்கள் அங்கு வேலைக்கு வருவதைத் தவிர்க்குமாறும் கோரியிருந்த அவர்கள், இதற்கான பிரச்சாரத்தை மேற்கொள்ளப்போவதாகவும் கூறியிருந்தனர்.

பலஸ்தீனம்

எல்லைகள் வரையறை, அகதிகள் விவகாரம் உடன்படிக்கையை ஐ.நா.சபை நிர்ணயிக்க வலியுறுத்தல்



பாலஸ்தீன பிரதமர் முகமது அப்பாஸ்,
அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ்

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு இடையே நீண்ட காலமாக போர் நடந்து வருகிறது. இரு நாடுகளுக்கு இடையே அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ், கடந்த வியாழன் அன்று பாலஸ்தீன பிரதமர் முகமது அப்பாசை சந்தித்து பேசினார். அதன் தொடர்ச்சியாக, அமெரிக்க அமைதி தூதர் ஜோர்ஜ் மிச்சேல், மற்றும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் ஆகியோரும் அப்பாசை சந்தித்துப் பேசியிருந்தனர். இந்த நிலையில், பாலஸ்தீன பிரதமர் முகமது அப்பாஸ் கூறுகையில், இஸ்ரேலுடன் மீண்டும் பேச்சு வார்த்தையை தொடங்க பாலஸ்தீனம் தயாராக இருக்கிறது. ஆனால், எல்லைகள் வரையறை, அகதிகள் விவகாரம் போன்ற பிரச்சினைகள் குறித்து ஒரு குறிப்பிட்ட இலக்குகளை கொண்ட உடன்படிக்கையை ஐ.நா.சபை நிர்ணயிக்க வேண்டும். அதன் மூலமாக, ஒரு அரசியல் தீர்வை நாம் எட்ட முடியும்`` என்று தெரிவித்தார். பாலஸ்தீன புரட்சி ஆணைக்குழுக் கூட்டத்தில் இதனை அப்பாஸ் கூறியதாக, அந்த நாட்டின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் `வாபா` தெரிவித்துள்ளது.

ஜேர்மனி

விமான நிலையத்தில் நிர்வாணப் போராட்டம்



அமெரிக்கா மீதான தாக்குதல் முயற்சிகளை அடுத்து உலகில் உள்ள பல்வேறு நாடுகளும் தங்கள் நாட்டு விமான நிலையங்களில் அதிநவீன பாதுகாப்பு கருவிகளை பயன்படுத்த உத்தேசித்து வருகின்றன. அதுபோல, ஜேர்மனில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும், முழு உடல் ஸ்கேனிங் கருவி' பொருத்த அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. அந்த கருவி மூலமாக, விமான நிலையத்துக்குள் நுழையும் பயணியின் உடல் முழுவதையும் பார்க்க முடியும். அதற்கு, கடும் கண்டனம் தெரிவித்து 'மனித உரிமை விடுதலை குழு' சார்பாக பேர்லின், பிராங்போர்ட், டுசில்டோர்ப் விமான நிலையங்கள் முன், நிர்வாண ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஏராளமான ஆண்களும் பெண்களும் பங்கேற்ற அந்த போராட்டத்தில் பயணிகளாக வந்திருந்தவர்களும் அவர்களுடன் இணைந்துகொண்டு போராட்டத்தில் பங்கேற்றனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்ட கோசம் என்ன தெரியுமா? "நீங்கள், எங்களை ஸ்கேன் செய்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், ஏற்கனவே நாங்கள் நிர்வாணமாக இருக்கிறோம்". என்பதுதான்.

ஜப்பான்

எரிவாயு எடுப்பதில் சீனாவுக்கு எச்சரிக்கை




சீன வெளியுறவுத்துறை அமைச்சர் யாங் ஜியாச்சி, ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் கட்சுயா ஒகாடா

கிழக்கு சீனா அருகே உள்ள கடல்பகுதியில் எரிவாயு எடுப்பது தொடர்பாக சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே பிரச்சினை நீடித்து வந்தது. நீண்டகால பேச்சுவார்த்தைக்கு பிறகு, 2008ம் ஆண்டில் இரு நாடுகளுக்கு இடையே விரிவான ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, சர்ச்சைக்குரிய அந்த பகுதியில், இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்து எரிவாயு எடுக்கும் வயல்களை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

ஆனால், அந்த ஒப்பந்தத்தை மீறி தனியாக எரிவாயு எடுக்கும் வயல்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டு வருகிறது. சீனா சார்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடம், தங்கள் எல்லைக்கு உட்பட்டது என ஜப்பான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், ஒப்பந்தத்தை மீறி சீனா செயல்பட்டால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சீனாவை ஜப்பான் எச்சரித்து இருக்கிறது. ரோக்கியோவுக்கு வந்த சீன வெளியுறவுத்துறை அமைச்சர் யாங் ஜியாச்சியிடம் ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் கட்சுயா ஒகாடா, நேரடியாகவே எச்சரிக்கை விடுத்ததாக ஜப்பான் வெளியுறவு அமைச்சக அதிகாரி தெரிவித்தார். சர்ச்சைக்குரிய அந்த இடத்தில் 9 கோடியே 20 இலட்சம் பீப்பாய் பெட்ரோலிய பொருட்கள் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

துருக்கி

போப் ஆண்டவரை கொல்ல முயன்று, 30 ஆண்டு சிறையிருந்தவர் விடுதலை



போப் ஆண்டவர் ஜோன் போலை வாடிகன் நகரில் 1981ம் ஆண்டு சுட்டுக்கொல்ல முயற்சி நடந்ததில் அவர் உயிர் பிழைத்தார். இது தொடர்பாக மெமத் அலி அக்கா என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் அங்காரா சிறையில் அடைக்கப்பட்டார். 1983ம் ஆண்டு சிறைக்குச் சென்று அவரைப் பார்வையிட்டார். அப்போது, தன்னை கொலை செய்ய முயன்ற இவரின் தவறுகளை மறந்துவிட்டதாக தெரிவித்தார். அத்துடன், அவருக்கு போப் ஆண்டவர் மன்னிப்பு வழங்கியதால் அவர் மன்னிக்கப்பட்டார். அதன்பிறகு அவர் பழைய குற்றங்களுக்காக சிறைத்தண்டனை பெற்று தொடர்ந்தும் சிறையில் இருந்துவந்தார். இந்நிலையில் கடந்த 18ம் திகதி, 30 ஆண்டுகள் சிறையில் கழித்த நிலையில் விடுதலை செய்யப்பட்டார். 23 வயதில் சிறைக்குச் சென்ற இவர் தற்போது 53 வயதில் வெளியேறியிருக்கின்றார்.

இவர் எதற்காக போப் ஆண்டவர் ஜோன் போலை கொல்ல முயன்றார் என்பது இன்றுவரை மர்மமாகவே உள்ளது. போப் ஆண்டவர் ஜோன் போல் கொம்யூனிசத்தை கடுமையாக எதிர்த்து வந்ததால், ரஷ்ய ஆதரவு கிழக்கு ஐரோப்பிய பாதுகாப்புப் படையினருக்காக கூலிப்படையாக இவர் வேலை பார்த்து இருக்கலாம். அவர்களுக்காக அவர் இந்த கொலை முயற்சியில் ஈடுபட்டு இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, விடுதலை ஆன மெமத் அலி அக்கா, வாடிகனில் உள்ள மறைந்த போப் ஆண்டவர் 2வது ஜோன்போல் கல்லறைக்கு சென்று பிரார்த்தனை செய்கிறார். மேலும் தற்போதைய போப் ஆண்டவர் 16வது பெனடிக்டை சந்திக்கிறார். சிறையில் இருந்து விடுதலையானவுடன் அவர் திருமணம் செய்ய முடிவு செய்துள்ளதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்தார். இதற்கிடையே இவரது சொந்த வாழ்க்கையை புத்தகமாகவும், திரைப்படமாகவும் தயாரிக்க பல வெளிநாட்டு நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. இதன்மூலம் தனது வாழ்க்கைக்கு ஒரு வருமானம் கிடைக்கும் என மெமத் அலி அக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஈராக்

கெமிக்கல் அலிக்கு மரண தண்டனை



ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் உசைனின் உறவினரான அலி ஹசன் அல் மஜித் எனப்படும் கெமிக்கல் அலிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஹலபஜா கிராமத்தில் ஆயிரக்கணக்கான குர்து இன மக்களை விசவாயு செலுத்திக் கொலை செய்ய உத்தரவிட்டதற்காக இந்தத் தண்டனையை ஈராக் நீதிமன்றம் கடந்த வாரம் வழங்கியது.

சதாம் உசைனின் மூத்த உதவியாளராகவும் விளங்கியவர் கெமிக்கல் அலி. 1988ம் ஆண்டு குர்து இன மக்கள் வசிக்கும் ஹர்பஜா நகர் மீது ஈராக் போர் விமானங்கள் நச்சுவாயுத் தாக்குதல் நடத்தின. நரம்புகளை செயலிழக்க வைக்கும் அதி பயங்கர விசவாயுக்களால் அந்த கிராமத்தில் இருந்த 5000 அப்பாவி மக்கள் கொடூரமாக உயிரிழந்தனர். சுமார் ஐந்து மணி நேரம் நடந்த இந்த வெறிச் செயலில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. சதாம் உசைனின் ஒன்று விட்ட சகோதரர்தான் இந்த கெமிக்கல் அலி. ஹர்பஜா சம்பவத்திற்குப் பிறகுதான் இவருக்கு கெமிக்கல் அலி என்ற பெயரே வந்தது.

கெமிக்கல் அலி இத்தோடு நிற்கவில்லை. குர்து இன மக்களுக்கு எதிராக இவர் நடத்திய விசவாயு தாக்குதல் மற்றும் குண்டு வீச்சுக்கள் மூலம் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 82 ஆயிரம் குர்து இன மக்கள் கொல்லப்பட்டனர். 4000 கிராமங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டன. ஏற்கனவே 1999ம் ஆண்டு ஷியா இன முஸ்லீம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதலில் இதே நீதிமன்றத்தில் கடந்த 10 மாதங்களுக்கு முன்பு கெமிக்கல் அலிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தற்போது மேலும் ஒரு மரண தண்டனை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமல்லாமல், 1991ல் நடந்த ஷியா புரட்சியை ஒடுக்கிய து, அன்பால் என்ற குர்து இன கிராமம் மீது நடந்த தாக்குதல் ஆகிய வற்றிலும் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சட்டப் பிரச்சினைகள் காரணமாக கெமிக்கல் அலிக்கு இன்னும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

இவருக்கான மரண தண்டனை அறிவிக்கப்பட்டபோது, இந்தத் தீர்ப்பைக் கேட்ட அங்கு கூடியிருந்த கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மகிழ்ச்சியில் கூக்குரலிட்டனர். தீர்ப்பை அளித்த நீதிபதி அரப் அப்துல் ரஸ்ஸாக் அல் ஷாஹ்ன் கூறுகையில், மனித குலத்திற்கு எதிரான படுகொலையை நிகழ்த்தியதற்காக கெமிக்கல் அலியை தூக்கிலிட்டுத் தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்றார். இவர் தவிர சதாம் உசேனின் உதவியாளர்கள் மேலும் 3 பேருக்கு 10 முதல் 15 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் ஒருவர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஆவர்.

இதேவேளை, கெமிக்கல் அலிக்கு விரைவில் தூக்கில் போட்டு தண்டனை நிறைவேற்றப்படும் என்று ஈராக் அரசு தொலைக்காட்சியான `அல்-ஈராக்கியா` அறிவித்துள்ளது.

வங்காளதேசம்

முஜிபுர் ரகுமான் கொலையாளிகளின் கருணை மனு தள்ளுபடி



வங்காளதேசத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஷேக் முஜிபுர் ரகுமானை கொலை செய்த அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் 5 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 3 பேர் ஜனாதிபதி ஷேக் ஹசீனாவிடம் (கொல்லப்பட்டவரின் மகள்) கருணை மனு செய்திருந்தனர். முன்னாள் லெப்.கேணல்கள் ஏ.கே.எம்.மொய்னுதீன், மொய்னுதீன் அகமது, முன்னாள் மேஜர் பஸ்லுல் ஹடா ஆகியோர் கருணை மனு செய்திருந்தனர். இந்த மனுக்களை ஏற்க மறுத்து ஷேக் ஹசீனா தள்ளுபடி செய்து விட்டார். மற்ற 2 இராணுவ அதிகாரிகளும் இன்னும் மனு செய்யவில்லை. அவர்கள் மனு செய்ய இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இறுதி வாய்ப்பான கருணை மனுவும் தள்ளபடி செய்யப்பட்டுள்ளதால் இவர்களுக்கான தண்டனை உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

89 குழந்தைகளின் தந்தை இஸ்ரேலில் கைது

இஸ்ரேலில் மதகுரு ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர். தலைநகர் டெல் அவிவைச் சேர்ந்த மதகுரு கோல் ராட்சன் (59) ஹடிக்வா என்ற புறநகர் பகுதியின் இரண்டு வீடுகளில் தங்கியிருந்தார். ஆன்மீக குருவாக தன்னை அறிவித்துக் கொண்ட இவரிடம் ஏராளமானோர் உபதேசம் பெறத் தொடங்கினர். இந்நிலையில், 2 இடங்களிலும் பல பெண்களை அடிமையாக அவர் அடைத்து வைத்திருந்ததாக தெரியவந்தது. அதில் ஒரு பெண்



தப்பித்து வெளியேறினார். அவர் கொடுத்த தகவலின் பேரில் கடந்த 6 மாதங்களுக்கு முன் காவல்துறை இரகசிய விசாரணைகளைத் தொடங்கியது. கோல் ராட்சன் பற்றிய உண்மைகளை வெளிக் கொண்டு வர காவல்துறைக்கு தகவல் கொடுப்பவராக அந்தப் பெண் செயல்பட்டார். அதன்படி நடந்த இரகசிய விசாரணைகளில், மொத்தம் 32 பெண்களை பல ஆண்டுகளாக ராட்சன் அடிமைப்படுத்தி வைத்திருந்தது தெரியவந்தது. அவர்களுக்கு ராட்சன் மூலம் 89 குழந்தைகள் பிறந்துள்ளன. அவர்களும் வெளியுலகம் தெரியாதளவிற்கு அடைத்துவைக்கப்பட்டிருந்த அதிர்ச்சித் தகவலும் வெளியானது. அடிமைகள் போல் தனது மனைவி மற்றும் குழந்தைகளை அடக்கி வைத்திருந்துள்ளார். மேலும் அவர்களை பல்வேறு விதமாக சித்ரவதை செய்ததுடன், அவருடைய உத்தரவை மீறுகிறவர்களுக்கு அபராதமும் விதித்து வந்தார். அத்துடன் தனது மகள்களிடமும் அவர் தகாத உறவு வைத்திருந்ததாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது. இந்நிலையில்,



கோல் ராட்சனை இஸ்ரேல் காவல்துறையினர் கடந்த வாரம் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தினார்கள். பெண்களை அடிமைப்படுத்தியது, பாலியல் பலாத்கார வழக்குகள் அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளன. இவரைக் கைது செய்யும் நடவடிக்கைக்காக அங்கு சென்ற காவல்துறை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், அந்த வீட்டினுள் நுழைந்தபோது நான் அதிர்ச்சியடைந்தேன். மூன்று அறைகள் கொண்ட அந்த சிறிய வீட்டினுள் கால் வைப்பதற்கு கூட இடம் இருக்கவில்லை. அங்கே 10 மனைவிகளும் 17 பிள்ளைகளும் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவித்தார். இதேவேளை, பெண்களுக்கு என்ன தேவையோ அதனை நான் அவர்களுக்கு கொடுக்கின்றேன். அதனால் அவர்கள் என்னை நேசிக்கின்றனர் என்று சொல்லும் கோல் ராட்சன் மீது அங்கிருந்து மீட்கப்பட்ட மனைவிகள் சிலர் தீவிர காதலைக் கொண்டிருப்பதாகவும் அவரது உருவப் படங்களை தங்கள் கைகளில் பச்சை குத்தி வைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஏலத்துக்கு வரும் சர்ச்சில் சுருட்டு



இரண்டாவது உலகப் போர் நடந்த சமயத்தில் பிரித்தானியப் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், சுருட்டு பிடிக்கும் பழக்கம் உள்ளவர். அவர் சுருட்டை பற்றவைத்த பிறகு பாதியில் போட மாட்டார். அந்தச் சுருட்டை எதுவரை புகைக்க முடியுமோ அந்த அளவு புகைத்துவிட்டுத்தான் அணைப்பார். 1941ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி பற்ற வைத்த சுருட்டை முழுக்க புகைக்க முடியாமல் பாதியில் அணைத்தார். அன்றுதான் ஜேர்மனியின் படை ரஷ்யாவின் லெனின்கிராட் நகருக்குள் நுழைந்தது. சோவியத் படை வீராவேசத்தோடு ஜேர்மனியப் படையை எதிர்த்துப் போராடியது. அது பற்றி விவாதிக்க அவசரமாக பிரித்தானிய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. பிரதமரே போர்ச் சூழலில் அமைச்சரவைக் கூட்டத்துக்கு தாமதமாகப் போக முடியுமா? அதனால் பற்றவைத்த சுருட்டை பாதியில் அணைத்துவிட்டார். அப்பொழுது சர்ச்சிலின் உதவியாளராக இருந்த நெல்லி கோபில், அதை பாதுகாத்து வந்தார். அந்த சுருட்டை கீஸ் என்னும் நிறுவனம் ஏலத்தில் விட திடமிட்டுள்ளது. அது 300 பவுண்சுகளுக்கு அதிகமாக விலைபோகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணம் சம்பாதிக்க செயற்கைப் பிரசவம் பார்க்கும் மருத்துவர்கள் - உலக சுகாதார நிறுவனம் கண்டனம்

உலகம் முழுவதிலும் உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட கணக்கெடுப்பில் ஆசிய நாடுகளில் செயற்கை பிரசவம் (சிசேரியன்) அதிகரித்திருப்பது தெரியவந்தது. 2007, 2008ம் ஆண்டுகளில் மட்டும் சத்திரசிகிச்சை 27 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியாவை பொறுத்த வரையில் 18 சதவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக டில்லி, மும்பை, அகமதாபாத் நகரங்களில் சத்திரிசிகிச்சை மூலமான குழந்தைப் பிறப்பு எண்ணிக்கை 65 சதவீத அளவுக்கு அதிகரித்துள்ளது. இதற்கு உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டொக்டர் மெட்டின் கில்ம ஜோக்லு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறும்போது, ஆசியாவைச் சேர்ந்த இந்தியா– சீனா போன்ற நாடுகளில் உள்ள தனியார் மருத்துவமனையில் உலக சுகாதார நிறுவனம் சார்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் பெரும்பாலான தனியார் மருத்தவர்கள் அதிக பணம் சம்பாதிக்கும் ஆசையில் தேவையே இல்லாமல் சத்திரசிகிச்சை செய்து விடுகிறார்கள். சத்திரசிகிச்சையை விட சுகப்பிரசவம்தான் நல்லது. சுகப்பிரசவத்தை விட சத்திரசிகிச்சை மூலம் கூடுதலாக பணம் கிடைக்கிறது என்பதால், அதை ஆதரிக்கிறார்கள். இதனைக் கடுமையாகக் கண்டிக்கின்றேன். சத்திரசிகிச்சை செய்யும் தாய் – குழந்தைக்கு நிறைய பிரச்சினைகள் வர வாய்ப்புள்ளது. சில தாய்மார்களுக்கு கருப்பையை அகற்ற வேண்டிய நிலையும் ஏற்பட்டு விடுகிறது. மருத்துவர்கள் பலர் பண ஆசையில் தங்களது மனசாட்சியை அடகு வைத்து விடுகிறார்கள். மனிதாபிமானம் மிகுந்த மருத்துவர்கள் யாரும் தேவையே இல்லாமல் சத்திரசிகிச்சை செய்யமாட்டார்கள். சில பெண்களுக்குதான் பிரசவ நேரம் காலதாமதமானால் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும். ஆப்போது சத்திரசிகிச்சை செய்வதை தவிர வேறு வழியில்லை. சுகப்பிரசவம் ஆகக்கூடிய நிலையில் உள்ள பெண்களுக்கும் சத்திரசிகிச்சை செய்து குழந்தையை எடுப்பதுதான் வேதனைப்படக்கூடிய, கண்டிக்கத்தக்க ஒன்று என்று அவர் கூறினார்.



உலகிலேயே உயர்ந்த விமான நிலையம்

தனது மாநிலங்களில் ஒன்றாகக் கூறிக்கொள்ளும் திபெத் பகுதியின் இமயமலையில் விமான நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கு சீனா திட்டமிட்டுள்ளது. 14 ஆயிரத்து 763 அடி உயரத்தில் இந்த விமான நிலையம் கட்டப்பட இருக்கிறது. உலகின் கூரை என அழைக்கப்படும் இந்த பகுதியில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்த விமான நிலையம்



கட்டப்பட இருக்கிறது. இப்போது உலகத்தின் உயரமான விமான நிலையமாக திபேத்தின் பம்தா இருக்கிறது. இது 1994ம் ஆண்டு கட்டப்பட்டது. இதை விட உயரமான இடத்தில் புதிய விமான நிலையம் நக்பு என்ற இடத்தில் கட்டப்பட இருக்கிறது. பழைய விமான நிலையத்தை விட, இப்போது கட்டப்பட இருக்கும் புதிய விமான நிலையம் 331 அடி கூடுதல் உயரத்தில் இருக்கும்.

ஈழமுரசு
EELAMURASU WEEKLY

நிர்வாகி
நிசாந்தன்
பிரதம ஆசிரியர்
ரஞ்சன்
ஆசிரியர் குழு
ஐ.சண்முகநாதன்
ஈசன்
செல்வராஜா
சிவா பரஞ்சோதி
அலுவலக நிர்வாகம்
இ.கந்தசாமி
வரைகலை
அனு கிராபிக்ஸ்

அலுவலகம்
2625 EGLINTON AVE EAST #2
SCARBOROUGH ,ON.M1K 2S2
தொலைபேசி / Telephone
416-291-7474
Cell:416•857•3941
தொலைநகல்/ Fax
416•291•7472
மின் அஞ்சல்/ Email
Eelamurasucanada@yahoo.com

அனைத்துலக அலுவலகங்கள்
பிரான்ஸ்
00 31140 05 95 15
பிரித்தானியா
0845 8687 980
சுவிஸ்
079 828 6871
ஜேர்மனி
0208 205 99 103
இத்தாலி
091 6824056
டென்மார்க்
86 336352
நோர்வே
22 425 527
நெதர்லாந்து
076 5425804
அவுஸ்திரேலியா
61 3 8802 8368

குறிப்பு
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு

சிறீலங்கா அரசு போர்க்...

இந்த விசாரணையில், இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட முல்லைத்தீவில் இருந்து தப்பி வந்த நேரடிச் சாட்சியங்களும், கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பான ஏராளமான நேரடிச் சாட்சியங்களும் மற்றும் ஆதாரபூர்வமான ஆவணங்களும், படப்பதிவுகளும் முன்வைக்கப்பட்டன. விசாரணையின் போது சாட்சியங்களையும், தடயங்களையும் பதிவு செய்த இந்நீதிமன்றம், சனிக்கிழமை மாலை தனது தீர்ப்பை வழங்கியதுடன், இனப்படுகொலை விடயத்தில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

2002ம் ஆண்டில், சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தபோது இருந்த நிலைமை, அமைதி பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த காலம் மற்றும் போர் நிறுத்த உடன்பாடு முறிவடைந்த பின்னர் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்தும் பரிசீலனை செய்த இந் நீதிமன்றம், போர் நிறுத்த உடன்பாடு முறிவடைந்தமைக்கு அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேச சமூகமே பொறுப்பு எனவும் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

தமிழர்களை நிர்வாணப்படுத்தி, சித்திரவதை செய்து கொன்ற காணொளி, போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான முக்கிய சாட்சியாக நீதிமன்றத்தின் முன் சமர்பிக்கப்பட்டிருந்தது. உலகையே உலுக்கிய இந்த காணொளி தொடர்பாக அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தடயவியல் துறையினரும் தங்களது அறிக்கையை வெளியிட்டிருந்தனர். ஆசியாவைச் சேர்ந்த பல மனித உரிமை அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. சபை ஆகியனவும் - மனித நேயத்துக்கு எதிரான போர்க் குற்ற மற்றும் அமைதிக்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலான அறிக்கைளைச் சமர்பித்திருந்தனர். மேலும், போர்க் குற்றங்கள் தொடர்பான தனிப்பட்ட மற்றும் குழுச் சாட்சியங்களையும் இந்நீதிமன்றம் பதிவு செய்தது.

அத்துடன், திருகோணமலையில் மாணவர்கள் ஐவர் சிறீலங்காவின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் ஆதாரங்களும் சாட்சியங்களும் இங்கு முக்கிய பதிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டு நாள் விசாரணையில் நிரூபிக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை, மக்கள் தீர்ப்பாயத்தின் தலைமை நீதிபதி பிரான்சுவா ஹுதா, தீர்ப்பாயத்தின் ஆரம்ப கண்டுபிடிப்புகளை (preliminary Findings) வெளியிட்டார்.

அதன்படி, கீழ்க்கண்ட 4 கண்டுபிடிப்புக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஹுதா அறிவித்தார்:

1. சிறீலங்கா அரசு போர்க் குற்றவாளியே.
2. சிறீலங்கா அரசு மானுடத்திற்கு எதிரான குற்றம் இழைத்துள்ளது.
3. இனப் படுகொலை குற்றச்சாட்டின் மீது மேலும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.
4. அமைதிப் பேச்சுவார்த்தை முறிந்ததற்கு சர்வதேச சமூகம், குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா ஆகியன பொறுப்பாகும்

என்று தனது முடிவில் தெரிவித்தார்.


இந்த விசாரணையின் போது பாதுகாப்பு வளையத்திற்குள் தஞ்சமடைந்திருந்த மக்களின் மீது கனரக பீரங்கிகளைக் கொண்டு தாக்கியதும், அவர்களின் மீது வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை வீசியதும் உறுதி செய்யப்பட்டது.

இந்த நீதிமன்றத்தை - அயர்லாந்திலுள்ள டப்ளின் ரினிற்றி கல்லூரியின் ஐரிஸ் பொருளாதாரப் பாடசாலை மற்றும் டப்ளின் சிற்றி பல்கலைக்கழகத்தின் சட்ட மற்றும் அரசுத்துறைப் பாடசாலை ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளன. இலங்கை அமைதிக்கான ஐரிஸ் அமைப்பு (Irish Forum for Peace in Sri Lanka - IFPSL) இந்த விசாரணைகளுக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தது. நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவை வரவேற்றுள்ள, இலங்கை அமைதிக்கான ஐரிஸ் அமைப்பு, கீழ்க்கண்ட கோரிக்கைகளை விடுத்துள்ளது:

(38ம் பக்கம் பார்க்க)

முத்துக்குமார் நினைவு நாள்

சென்னையில் 19 அடி உயர மலர் தூண்



இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஈழத் தமிழர்களுக்காக தனது இன்னுயிரை நீத்த முத்துக்குமாரின் முதலாம் ஆண்டு நினைவு தினம் 29ம் திகதி கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி சென்னையில் 19 அடி உயர மலர் தூண் அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் த.வெள்ளையன், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்க தலைவர் ஆர்.சி.பால் கனகராஜ் ஆகியோர் சென்னையில் நிருபர்களுக்கு இதனைத் தெரிவித்தனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது, இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள சாஸ்திரி பவன் அலுவலக வளாகத்தில் தீக்குளித்து மரணம் அடைந்தார். முத்துக்குமாரின் முதலாம் ஆண்டு நினைவு தினம் வருகிற 29ம் திகதி (வெள்ளிக்கிழமை) கடைப்பிடிக்கப்படுகிறது. இதை முன்னிட்டு சென்னை கொளத்தூரில் முத்துக்குமாரின் உடல் வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் 19 அடி உயர மலர்த்தூண் ஒன்று நிறுவப்பட உள்ளது. ஈழச் சொந்தங்களுக்காக உயிர் துறந்த 18 பேரையும் சேர்த்து இந்த மலர்த்தூண் அமைக்கப்படுகிறது. அன்றைய தினம் காலை 10 மணியளவில் முத்துக்குமாரின் தங்கை தமிழரசி கருக்குவேல்ராஜன் முதல் மலர்தூவி வீரவணக்க நிகழ்வை தொடங்கி வைக்கிறார். வீரவணக்க நிகழ்ச்சிக்காக த.வெள்ளையன், ஆர்.சி.பால் கனகராஜ், நடிகர் சத்யராஜ், புலவர் புலமைப்பித்தன், தமிழருவி மணியன் ஆகியோர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நினைவு தினத்தை குறிக்கும் வகையில் வருகிற 25ம் திகதி 100 பேர் அடங்கிய குழுவினர் கன்னியாகுமரி காந்தி மண்டபத்தில் இருந்து வாகனங்களில் நினைவுசுடர் எடுத்து சென்னை வருகின்றனர். சென்னையில் அந்த சுடரினை இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு பெற்றுகொள்கிறார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தமிழினம் காக்க தம் இன்னுயிரை ஈந்த 'வீரத் தமிழ்மகன்' முத்துக்குமார் உள்ளிட்ட 19 ஈகியர்கள் நினைவு நாள்



தூத்துக்குடி முத்துக்குமார் | மலேஷியா ஸ்டீபன் ஜெகதீசன் | பள்ளப்பட்டி இரவி | சீர்காழி இரவிச்சந்திரன்

மலேஷியா இராசா | சென்னை அமரேசன் | ஜெனிவாவில் முருகதாசன் | கடலூர் தமிழ்வேந்தன்

சென்னை சிவப்பிரகாசம் | சிவகாசி கோகுல ரத்தினம் | வாணியம்பாடி சீனிவாசன் | சென்னை எழில் வளவன்

அரியலூர் இராச சேகர் | கடலூர் ஆனந்த் | புதுக்கோட்டை பாலசுந்தரம் | சிவகாசி மாரிமுத்து

தீயாய் பூத்த தீந்தமிழ் ஈகிகளுக்கு

வீரவணக்கம்

காலம்: 29-ஜனவரி-2010
நேரம்: மாலை 5.30 மணி
இடம்: கனடா கந்தசாமி கோவில்
733 Birchmount Road

ஈழத்தமிழர்களின் துயரத்தை இந்திய, தமிழக அரசுகளுக்கும் உலகிற்கும் உணர்த்துவதற்காக தன்னுடைய இன்னுயிரை ஈந்த 'வீரத் தமிழ்மகன்' முத்துக்குமார் அவர்களின் தன்னிகரற்ற தியாகத்தைத் தொடர்ந்து 18 பேர் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் தியாக உணர்வு தமிழகத்தில் மட்டுமல்ல உலகம் பூராவும் கொழுந்துவிட்டு எரிந்தது.

கனடியத் தமிழ் மாணவர் சமூகம்
கனடியத் தமிழர் சமூகம்

சிறீலங்கா அரசு போர்க்...

1. போரின்போது சிறீலங்கா அரசப் படைகளும் விடு தலைப் புலிகளும் இழைத்த போர்க் குற்றங்கள், மானுடத் திற்கு எதிரான குற்றங்கள் ஆகியன மீது ஐ.நா. பான்னாட்டு அளவிலான விசாரணை நடத்த வேண்டும்.

2. வன்னி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும், இரகசிய முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ள 11,000 பேர் உட்பட அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

3. சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள், சித்ரவதை கள், பாலியல் குற்றங்கள், அப்பாவி மக்களுக்கு உணவு, குடிநீர் அளிக்காமல் துன்புறுத்துதல் ஆகிய அனைத்து குற் றங்களையும் முழுமையாக நிறுத்துமாறு சிறீலங்கா அரசைக் கோருகிறோம்.

4. அரசியல் எதிர்ப்பை வன்முறையின் மூலமாகவும், மற்ற வழிகளிலும் ஒடுக்குவதை சிறீலங்கா அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

5. இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக வரலாற்றுக் காலந் தொட்டு இழைத்து வரும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கை களை நிறுத்துமாறும், அவர்களுடைய பங்கேற்புடன் கூடிய அரசியல் தீர்வு காணும்படியும், அனைத்து மக்களுக்கும் பொதுவான மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துமாறும் சிறீலங்கா அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

இதேவேளை, தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சிறீ லங்கா நிராகரித்துள்ளது. டப்ளின் விசாரணைகள் இடம் பெறாமல் தடுக்க பலத்த முயற்சிகளை மேற்கொண்ட சிறீ லங்கா, இறுதியில் அதனைத் தடுத்து நிறுத்தமுடியாத நிலை மையை அடைந்திருந்தது. இதனால், டப்ளின் முடிவுகள் குறித்து சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளிவராத வண்ணம் தனது அனைத்து வழியிலான முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. இந்த முயற்சியில் சிறீலங்காவிற்கு வெற்றியும் கிடைத்ததாக கூறப்படுகின்றது. சிறீலங்காவின் கிரிக்கெட்டில் ஒவ்வொரு பந்து வீச்சையும் பல நீளத்திற்கு கட்டுரையாக வடிக்கும் சர்வதேச ஊடகங்கள் பலவும் இந்தச் செய்தியை இருட்டடிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு பேட்டியளித்த ஐக்கிய நாடுகள் சபைக்கான சிறீலங்கா தூதுவர் பாலித்த கோகன்ன, இலங்கையில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக தமிழ் நெற் இணையத்தளம் மாத்திரம் பிரசாரம் செய்கிறதே தவிர, வேறு எவருமே சிறீலங்கா போர்க் குற்றம் புரிந்ததாக கூற வில்லை எனவும் சிறீலங்கா படையினர் மிகுந்த ஒழுக்கத்துட னும் தொழில் பக்தியுடனும் மேற்கொண்ட மனிதாபிமான மீட்பு நடவடிக்கை மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன், சர்வதேச குற்ற நீதிமன்றத்தின் சட்டங்கள் சிறீ லங்கா அரசுக்கோ சிறீலங்காவை சேர்ந்த எந்த தனிநபருக் குமோ செல்லுபடியாகாது. அதற்குரிய சட்ட அதிகாரம் சர்வ தேச நீதிமன்றுக்கு இல்லை. ஆகவே, போர்க் குற்றம் தொடர் பாக யாரையும் தண்டிக்கும் அதிகாரம் சர்வதேச நீதிமன் றுக்கு கிடையாது என்றும் எச்சரித்தார்.

மேலும், சர்வதேச சமூகம் என்ற சொல்லை பயன்படுத் தும்போது அது தனியே மேற்கு நாடுகளை குறிக்காது. சீனா, ரஷ்யா, இந்தியா, தென்னாபிரிக்கா, நைஜீரியா என எத் னையோ நாடுகள் சிறீலங்காவுக்கு நெருக்கமான நண்பர்கள் உள்ளனர். அவைதான் சர்வதேச சமூகம். சிறீலங்கா தொடர் பில் கரிசனை கொள்கிறோம் என்ற போர்வையில் சத்தம் எழுப்பிக்கொண்டிருக்கும் நாடுகளை மட்டும் சர்வதேச சமூகம் என்ற சொல்லினுள் அடக்கிவிடவேண்டாம். ஐக்கிய நாடுகள் சபையில் சிறீலங்காவுக்கு எதிராக தீர்மானம் கொண் டுவந்த 12 நாடுகளை 29 நாடுகளின் பெரும்பான்மையுடன் தோற்கடித்துள்ளோம். எமக்கு ஆதரவளித்த நாடுகளை பாருங் கள். அவைதான் சர்வதேச சமூகம் என்றும் கோகன்ன கேலி யாகக் கூறியுள்ளார்.

எனினும் முன்னதாக, இலண்டனில் உள்ள சிறீலங்காவின் தூதுவர் நிகால் ஜெயசிங்கவுக்கும் இந்த நீதிமன்றத்தின் அமைப்பாளர்களால் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், அவரிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

இன அழிப்பு யுத்தத்தின் போது ஐ.நாவை ஏமாற்றியது அரசாங்கம்

— மங்கள சமரவீர தெரிவிப்பு

தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசாங்கம் மேற் கொண்ட இன அழிப்பு யுத்தத்தின் போது அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையினையும் ஏமாற்றியுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது. கடந்த வருடம் பெப்ரவரி மாதம் வன்னியில் யுத்தம் தீவிரமடைந்த போது பொதுமக்களை இலக்கு வைத்த கனரக ஆயுதங்களை பயன்படுத்த வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபை விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக தாங் கள் கனரக ஆயுதங்களின் பாவனையை நிறுத்திக் கொள் வதாக சிறீலங்கா அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

எனினும் ஏப்பிரல் மாதம் வரை கனரக ஆயுதங்கள் யுத்த களத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செய லாளர் லலித் வீரதுங்க தற்போது தெரிவித்துள்ளார். இந்தியா வில் நடைபெற்ற பொதுத் தேர்தலை கருத்தில் கொண்டு கொங்கிரஸ் கட்சியின் வேண்டுகோளுக்கு அமைவாக கனரக ஆயுதங்களின் பாவனையை கைவிடுவதாக அரசாங்கம் அறி வித்ததாகவும் அதன் மூலமே கொங்கிரஸ் கட்சி வெற்றி பெற் றதாகவும் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கு பெபரவரி மாதம் வழங்கிய வாக்குறு தியை சிறீலங்கா அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்றும் ஏப்பிரல் மாதம் வரை கனரக ஆயுதங்களை சிறீ லங்கா அரசாங்கம் வன்னிக் களமுனையில் பயன்படுத் தியமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளதாகவும் இதன் மூலம் சிறீலங்கா அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையினை யும் ஏமாற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியா என்ற...

தெரிவித்துள்ளனர். சிறீலங்கா அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அதிகரித்து வரும் அழுத் தத்தை இந்திய அரசின் உதவியுடன் சிறீலங்கா அரசு தகர்த்துவிட முயல்கின்றது என்பது சிலரது கருத்துக்கள்.

அதாவது போர்க்குற்ற விசாரணைகள் என்ற களத்திற் குள் இந்தியாவை இழுத்து விடுவதால் மேற்குலகின் அழுத்தங்கள் குறைந்துவிடலாம் அல்லது தன்னைக்காப் பாற்றும் முயற்சியில் இந்தியா சிறீலங்காவையும் காப்பாற் றலாம் என்பது அரச தரப்பின் திட்டம்.

கடந்த வாரம் டப்ளின் நகரத்தில் நடைபெற்ற சிறீலங்கா அரசு மீதான போர்க்குற்ற விசாரணைகளை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபைக்கான சிறீலங்காவின் நிரந்தர பிரதிநிதி பாலித கோகன்னா தெரிவித்த கருத்துக்களில் இருந்து சிறீலங்கா மீதான மேற்குலகத்தின் அழுத்தங்களை புரிந்து கொள்ளமுடியும்.

அதாவது தமக்கு எதிராக அனைத்துலக சமூகம் செய ற்படவில்லை எனவும், மேற்குலகத்தின் சில நாடுகளே தமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு வதாகவும் அவர் தெரிவித்திருந்தார். எனினும் தமக்கு ஆதரவாக உள்ள நாடுகள் என அவர் குறிப்பிட்ட நாடு களில் மேற்குலகத்தின் எந்தவொரு நாடும் இடம்பெற வில்லை.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான், ஆபிரிக்கா, நைஜீரியா என வலிமை மிக்க நாடுகள் தமக்கு ஆதரவாக உள்ளதாக கோகன்னா தெரிவித்துள்ளது சிறீலங்கா எவ் வாறான ஒரு அழுத்தத்தில் சிக்கி உள்ளது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

ஆனால், ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள், இனஅழிப்பு போன்றன தொடர்பாக கிடைக்கக்கூடிய சொற்பஅளவு நீதியையாவது பல பல ஆயிரம் மைல்கள் கடந்து டப்ளின் நகரில் தேடிக் எடுக்கலாம் என்ற நம்பிக்கையுடன் தமிழ் இனம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

மேற்குலகத்தின் இந்த முயற்சிகளுக்கு ஆதரவாக தமிழ் சமூகத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதும், மகிந்தா விற்கு எதிராக திரும்பியுள்ளதும் பேரினவாத சிறீலங்கா அரசுக்கு மட்டுமல்லாது, 1987 ஆம் ஆண்டில் இருந்து ஈழத்தமிழ் மக்களுக்கு அநீதிகளை இழைத்து வந்த இந் தியா என்ற பெரும் தேசத்திற்கும் ஒரு சிறுபான்மை இனம் வைத்த இராஜதந்திர பொறியாகவே கருதப்பட வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு....

ஊடாக தமிழ் மக்களின் தீர்வுகளை பன்நாடுகள் பெற் றுக்கொடுக்கும் என்பதில் உறுதிபூண்டு, அதற்காக பன் நாடுகளில் நடைபெறும் வாக்கெடுப்புக்களில் மக்கள் உறு தியுடன் செயற்பட்டு ஈழமக்களின் வாழ்வில் மாற்றத்தை கொண்டுவருமாறும் சுதந்திர தமிழீழம் என்பதை சனநாயக வழியில் எடுத்துரைத்து, இலங்கைத்தீவில் தமிழர்கள் ஒற்றை ஆட்சியின் கீழே வாழவிரும்புகின்றார்களா? என் பதை பன்நாடுகளுக்கு எடுத்துரையுங்கள். இதனூடாகத்தாக் ஈழமக்களின் வாழ்வில் விடுதலை கிடைக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் என்று முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் சிலைவேந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சிறீலங்கா மீதான...

பதில்:– சீனா, ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், கியூபா, வெனிதுலா உட்பட பல செல்வாக்குள்ள தென் அமெரிக்க, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளின் ஆதரவை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்வி:– சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பான வலுவான நடவடிக்கைகளை அனைத்துலக சமூகம் மேற் கொள்ளும் போது தான் தமிழினம் தான் சந்தித்த இன அழிப்பு நடவடிக்கைகளை வெளியுலகிற்கு நிரூபிக்க முடியும். இது தொடர்பில் புலம்பெயர் தமிழ் மக்களின் நடவடிக்கைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று நினைக்கிறீர்கள் ?

பதில்:– முதலில் ஒவ்வொருவரும் தாம் வாழும் நாடுகளின் சட்ட திட்டங்களை மதித்து செயற்திட்டங்களை நடை முறைப்படுத்த பழகிக் கொள்ள வேண்டும். அடுத்து, அமைப்புக்களிடையே ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட் டம் தேவை. இச் செயற் திட்டங்களை விடயம் விளங் கியவர்கள், மொழித் திறன் கொண்டவர்கள், இராஜதந்திரம் தெரிந்தவர்கள் கையாள வேண்டும். இவை இரண்டும் தற்பொழுது பெரும்பான்மையான தமிழ் அமைப்புகளி டையே இல்லை. அடுத்து விழிப்பு போராட்டங்கள், ஊர் வலங்கள், கூட்டங்கள் நடத்தும் அமைப்புக்கள் இதனால் ஏற்படும் பலன்களை முன்கூட்டியே மக்களுக்கு எடுத்து கூற வேண்டும். இது செய்யத் தவறும் அமைப்புக்கள், தமது சுயநலத்திற்காக மக்களை குளிர், பனி, மழை போன் றவற்றில் அலைக்கழிக்கப்பது ஆக்கபூர்வமான விடயம் அல்ல! மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர் கள் முன்பு கூறியது போல், 'தமிழ் சங்கம், சங்கம் தமிழ்' என்ற வகையில் பெயர்கள் சூட்டப்பட்டு நாளுக்கு நாள் தமிழ் அமைப்புக்கள் சர்வதேச ரீதியாக அதிகரிக்கின் றனவே தவிர, அங்கு உருப்படியான செயற் திட்டம் ஒன்றும் நடைபெறுவது இல்லை. பொதுவுடமையின் தத் துவஞானியும், சமூக விஞ்ஞானியுமான பிறைட்ரிச் ஏன் ருல்ஸ் அவர்கள், 'ஒரு அவுன்ஸ் செயற்பாடு, பல தொன் தத்துவங்களை விட மேலானது' என ஒரு தடவை கூறி யிருந்தார். இதை தமிழ் அமைப்புக்களின் செயற்பாட்டாளர் கள் அறிந்திருக்க வேண்டும். போலியான வேலைகளை செய்பவர்கள் தாமும் ஏதோ வேலை திட்டம் செய்கிறோம் என்று மக்களை ஏமாற்றக்கூடாது.

கேள்வி:– அயர்லாந்தின் தலைநகரான டப்பிளின் நகரில் நடைபெறவுள்ள சிறீலங்கா அரசு மீதான போர்க்குற்ற விசாரணைகளை தமிழ் மக்கள் எவ்வாறு செயற்திறன் மிக்கதாக மாற்றவேண்டும், அது தொடர்பில் அனைத்துல கிலும் பரந்து வாழும் தமிழ் அமைப்புக்களின் பங்களிப்புக் களின் அவசியத்தை சற்று விளக்க முடியுமா ?

பதில்:– என்னைப் பொறுத்த வரையில், சிறீலங்கா அரசு மீதான போர்க்குற்ற விசாரணைகள் எதுவாக இருந்தாலும் எந்த தமிழரும் அதில் முன்னிற்பது நிட்சயம் பாதிப்பையே ஏற்படுத்தும். காரணத்தை நான் விளக்க வேண்டிய அவ சியமில்லையென நம்புகிறேன். டப்பிளின் நகரில் நடை பெற்ற போர்க்குற்ற விசாரணை போன்று வேறு எங்கு நடை பெற்றாலும், எம்மிடம் அதற்கு ஏற்ற உண்மையான நேர்மை யான சாட்சியங்களிருப்பின் அவற்றை உரியவர்களிடம் கையளிப்பதே எமது கடமை. இதற்கு மேல் அதில் பங் களிக்க நாம் விரும்பினால், இவ சர்வதேச விசாரணை களுக்கு தேவையற்ற பெயர்களை சிறீலங்கா அரசு மிகவும் சுலபமாக சூட்டிவிடும். எம்மால் முடியுமானால், இவ் விசாரணைகள் பற்றிய செயற்திட்டங்களை, சர்வதேச ஊடகங்கள் வெளியிட திரைமறைவில் உதவலாம். கடந்த வாரம் டப்பிளின் நகரில் நடைபெற்ற போர்க்குற்ற விசா ரணையின் செய்திகளை, சர்வதேச ஊடகங்கள் வெளி யிடாதவாறு, சிறீலங்கா அரசின் தூதுவராலயங்கள் நட வடிக்கை எடுத்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நன்றி – ஈழம்நியூஸ்


for
SALE
Ganesh Thangarajah
Real Estate Broker
416-994-9046
$120,000
Neilson/Mclevin
1 Bdr., Condo Apt
$139,900
Midland/Lawrence
3 Bdr., Condo Apt
$239,900
Warden/Finch
3 Bdr., Home
$249,900
Maccowan/401
3 Bdr., Condo/Apt
$274,000
Bramalea/Bovaird
3 Bdr., Semi-Detached
$334,900
Morningside/Coronatn
3+1 Bdr., Detached
$309,900
Middlefield/Steeles
3+1 Bdr., Detached 2-Storey
$349,900
Morningside/Sheppard
4+1 Bdr., Detached 2-Storey
$399,000
Morningside/Old Finc
4+1 Bdr., Detached
$379,000
Markham/16th
3 Bdr., 2-Storey
$424,900
Bovaaird/Worthlington
4 Bdr., Detached 2 Storey
$479,000
9th Lane/Rouge Bank
4 Bdr., Detached 2 Storey
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON M1P 4S6 Tel: 416-298-3200